Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2009

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# தேவனுடைய சர்வாயுதங்கள்

பட்டயத்தை எடுப்பது • விசுவாசத்தை காத்துக்கொள்வது

கச்சையை அணிதல் • தலைச் சீரா • விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள்

தேவனுடைய சர்வாயுதங்கள்

# ஆதியிலே



"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்."(எபேசியர் 6:13)

நம்மைச் சுற்றி எங்கும் யுத்தங்கள் தொடர்ந்து நடத்தப்படுகிறது - அது தேசங்கள் மற்றும் மனித எங்களுக்கிடையிலும், நோய், வறுமை மற்றும் பஞ்சங்களுக்கு எதிராகவும், போதை பொருட்கள் மற்றும் அநேக எதிரிகளுக்கு எதிராகவும் நடத்தப்படுகிறது. அதுபோல, இயேசுவை பின்பற்றுகிற ஒவ்வொரு அர்ப்பணித்த கிறிஸ்தவரும் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் மூன்று வல்லமையுள்ள விரோதிகளுக்கு எதிராக போராடுகின்றனர் - அவையாவன உலகம், மாம்சம் மற்றும் பிசாசு. "ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபேசியர் 6:12) ஒரு சீஷனானவன் நித்திய ஜீவன் என்ற இலக்கை வெற்றிகரமாக பற்றிக்கொள்ள இந்த மூன்று விரோதிகளுக்கு எதிராக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராட வேண்டும். (1தீமோத்தேயு 6 :12)

இந்த யுத்தம் ஒரு யுத்தமாக இல்லாமல் வாழ்க்கை முழுதும் தொடர்கிற போராட்டமாக இருக்கிறது. இது ஒரு கிறிஸ்தவனின் ஞானஸ்நானத்தில் துவங்கி தன்னுடைய மரணத்தில் இந்த பூமிக்குரிய பலியை நிறைவேற்றும் வரை தொடர்கிறது. இயேசுவை பின்பற்றுபவர்கள் உலகம், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவைகளின் தாக்குதல்களை எதிர்க்கும் விஷயத்தில் அவர்களுக்கு உதவ, தேவன் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு விசேஷமாக வடிவமைக்கப்பட்டு ஆவிக்குரிய வகையில் அவர்களை பாதுகாக்க போதுமான பெலத்துடன் வடிவமைக்கப்பட்ட ஒளியின் ஆயுதத்தை தருகிறார்: (ரோமர் 13:2)

இம்மாதத்தின் ஹெரால்டு பிரதி, இந்த சர்வாயுதத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் சீர்தூக்கி பார்க்கிறது. இயேசுவின் பலியின் மீது உள்ள நம்முடைய விசுவாசமும், கிறிஸ்துவின் குணலட்சனங்களை அணிந்துகொள்வதும் நம்மை எவ்வாறு எதிராளியிடமிருந்து பாதுகாக்கிறது என்று விளக்கும் *மார்க்கவசத்தை அணிதல்* என்ற கட்டுரையின் மூலம் நாம் துவங்குகிறோம். *பாதரட்சை* என்ற கட்டுரையானது நம்முடைய நோக்கங்களிலும், வாழ்க்கையின் முறையிலும் சமாதானம் வெளிப்படவேண்டிய முறையை குறித்து விளக்குகிறது. சத்தியத்தை நாம் பாதுகாப்பதற்கும் - எதிர்தாக்குவதற்கும் பயன்படுத்துவதை குறித்து *பட்டயத்தை எடுத்தல்* என்ற கட்டுரை விளக்குகிறது.

இந்த போராட்டத்தில் நம்முடைய விசுவாசம் எப்படி நம்மை பாதுகாக்கிறது என்பதை *விசுவாசத்தை காத்துக்கொள்வது* என்ற கட்டுரை விளக்குகிறது. *கச்சையை அணிவது* என்ற கட்டுரையானது நாம் நம்மை சுற்றி சத்தியமானதை மாத்திரம் நம்பும் தரத்தை உருவாக்குவதையும், மற்றவர்களிடம் உண்மையாக நடந்துகொள்வதையும் குறித்த ஆலோசனைகளை நமக்குத் தருகிறது. *தலைச்சீராவை* அணிவது என்ற கட்டுரை சாத்தானுடைய வஞ்சனையிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துகொள்வதில் இரட்சிப்பின் தலைச்சீராவை அணிவதும் அதை காத்துக்கொள்வதும் எவ்வளவு முக்கியம் என்று விளக்குகிறது. *உண்மையுள்ள ஊழியக்காரர்* என்ற கட்டுரையில், 1 தீமோத்தேயு 6 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவ போர் வீரனுக்கு பவுல் தருகிற எச்சரிப்பு, ஆலோசனை, அறிவுரை மற்றும் ஊக்கமளிக்கும் வார்த்தைகளை வசன வாரியாக ஆராய்ந்து இம்மாதப் பிரதியை நிறைவுசெய்கிறோம்.

## ஜனவரி / பிப்ரவரி 2009


✣ **ஆதியிலே** ........................ 1

தேவனுடைய சர்வாயுதவர்க்கம்

✣ **மார்க்கவசத்தை அணிதல்** ........................ 2

மார்க்கவசத்தை அணிவது, எதிராளியின் அக்கினிக் கணைகளிலிருந்து நம்முடைய இருதயத்தை பாதுகாக்கிறது.

✣ **பாதரட்சை** 7

ஈடுபலியை உபதேசிப்பதும் அதன் மூலம் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியில் கிடைக்கும் மகிழ்ச்சி மற்றும் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிப்பதும் நம்முடைய உரிமையாக இருக்கிறது.

✣ **பட்டயத்தை எடுப்பது** 12

ஆவியின் பட்டயம் என்பது பரிசுத்த ஆவி நம்க்கு வெளிப்படுத்தியிருக்கிறபடி தேவ வார்த்தையில் காணப்படும் சத்தியமாகும்.

✣ **விசுவாசத்தை காத்து கொள்வது** 19

விசுவாசத்தின் கேடகத்தை பிடித்திருப்பது என்பது அதை வைத்திருப்பதை என்பது அதை வைத்திருப்பதை மாத்திரம் குறிக்காமல், அதற்கு கீழ்படிந்து விசுவாசத்தின்படி ஜீவிப்பதை குறிக்கும்.

✣ **கச்சையை அணிதல்** 24

எதிராளியின் வஞ்சனைகளிலிருந்து நம்மை விடுதலையாக்கும் வல்லமையை சத்தியமானது பெற்றிருக்கிறது. நம்முடைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப நங்கூரமாக இருந்து சத்தியம் நம்மை காக்கிறது.

✣ **தலைச்சீராவை அணிதல்** 28

இரட்சிப்பின் தலைச்சீரா என்பது, நம்முடைய சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளானது தேவ போதனைகளாலும், அறிவுரைகளினாலும் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை காண்பிக்கிறது.

✣ **உண்மையுள்ள ஊழியக்காரர்** 34

தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதின தன்னுடைய முதலாம் நிருபத்தை எச்சரிப்பு, ஆலோசனை, அறிவுரை மற்றும் ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் நிரப்பியிருந்தார். இந்த வசன வாரியான தியானம் 6ஆம் அதிகாரத்தை பற்றியிருக்கிறது.

✣ **கவிதைகள் மற்றும் சிறப்பு கட்டுரைகள்**

இடைவிடாத ஜெபம் மற்றும் மன்றாட்டுடன்....... 38

தீர்க்கதரிசனத்தில் இன்று... 39

என்னுடைய பரிசுத்தவான்களை ஒன்றாகக் கூட்டுதல்... பின் அட்டை

நீதி

# மார்க் கவசத்தை அணிதல்



"சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்..." - எபேசியர் 6 :14[1]

**Dan Wesol**

ரோமாபுரியின் ஆளுகையின் கீழ் இருந்த அநேக பட்டணங்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் பயணித்ததால் ரோம படைவீரன் அணிந்த சீருடைகளை பற்றி நன்கு அறிந்திருந்தார். அவர் பிறந்த சிலிசியா பட்டணத்தின் தலைநகரான தரிசுவில் ரோம் படைவீரர்களை கண்டிருப்பார். அவர் எருசலேமில் இருந்த பொழுது தன்னுடைய சொந்த ஜனங்களே, அவர் நியாயப்பிரமாணத்தை தவறாக போதிப்பதாக குற்றம் சாட்டியது, ரோம அதிகாரிகளால் பவுல் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். (அப்போஸ்தலர் 21: 27 -33) பவுலுக்கு விரோதமான இந்த குற்ற சாட்டை யூத ஜனங்களின் தலைவர்களும் பிரதான ஆசாரியர்களும் பெதஸ்துக்கு முன் கொண்டு வந்தபொழுது, பவுல் ராயனிடம் முறையிட்டார். இதன் காரணமாக, அகரிப்பா இராஜா, பவுலை விடுவிக்க இயலாமல் போனது. பவுலை ராயனுக்கு முன் நிறுத்தும்படி அழைத்துச் செல்ல வேண்டிய ஜூலியஸ் என்ற நூற்றுக்கு அதிபதியின் கட்டுபாட்டில் பவுல் இருந்தார்.

ரோமாபுரியில் வீட்டு காவலில் இருந்த பவுல் ஏபேசு பட்டணத்து சகோதரர்களுக்கு பிரபலமாக இருந்த படைவீரர்களின் சர்வாயுதங்களை, தேவனுடைய சர்வாயுதத்திற்கு ஒப்பிட்டார். இவர்கள் அனைவரும் "நீதியின் மார்க்கவசம்" உள்பட தேவனுடைய சர்வாயுதங்களை அணியும்படி பவுல் எழுதினார்.

ரோம குடியரசின் கீழ் உள்ள எல்லா காலாட்படைவீரர்கள் மார்பிலும், முதுகிலும் உள்ள இரு தகடுகளையும் தோலினால் இணைக்கப்பட்ட வெண்கலத்திலான மார்க்கவசத்தை சரீரத்தை பாதுகாக்க அணிந்திருந்தார்கள். (***The Encyclopedia Americana, 1903***) "

"மார்க்கவசம்" என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை தோராக்ஸ் ஆகும். (Thorax -, ஸ்டராங்க்ஸ் #2382)

> அடிப்படையில், "மார்பு" என்றால், ஒரு கவசத்தை அல்லது மார்க்கவசத்தை குறிப்பிடுகிறது. இதற்கு இரண்டு தகடுகள் உள்ளது. ஒன்று மார்பிலும் மற்றொன்று முதுகிலும். ஆக கழுத்திலிருந்து சரீரத்தின் பாதி மட்டும் இரண்டு பக்கங்களையும், காக்கக்கூடியதாக இருக்கிறது. இது உருவகமாக நீதியின் மார்க்கவசத்திற்கு ஒப்பிடப்படுகிறது. (1தெசலோனிக்கேயர் 5 : 8) சரீரத்தை காக்கக்கூடிய அந்த மார்க்கவசத்தின் இரண்டு பகுதிகளான முன்னும் பின்னும் உள்ள பகுதிகள் நீதியை அடிப்படையாக கொண்ட விசுவாசம் மற்றும் அன்பை (எபேசியர் 6 :14) குறிப்பிடுகிறது. இது சரீரத்தை முழுமையாக மூடும் ஒரு கவசமாக இருக்கிறது. இது பூட்டப்பட்ட இருப்புக்கவசம் என்றும் சொல்லப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இதற்காக பயன்படுத்தப்பட்ட மற்றொரு வார்த்தையை. வெளி 9:9,17 -ஆம் வசனத்திலும் வாசித்து அறியலாம். - வைன்ஸ் எக்ஸ்போசிட்ட்ரி டிக்ஷனரி ஆப் பிப்லிக்கல் வர்ட்ஸ் (Vines Expository Dictionary of Biblical Words )

எதிரியின் பட்டயம் அல்லது மற்ற ஆயுதங்களின் தாக்குதல்களை தவிர்ப்பதற்காகவே மார்க்கவசமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக ஒரு மனுஷனின் இதயத்தை தாக்காதபடி இது அமைக்கப் பட்டிருக்கிறது. மார்க்கவசம் அணிந்த ஒரு வீரனை மரணத்திற்கேதுவாக தாக்குவது மிகக் கடினமான காரியம். (வசனம் -23)ஒரு ரோம வீரனுடைய மார்க்கவசமானது மையத்திலிருந்து எப்பக்கம் அளந்தாலும் ஒரு ஜான் அளவை கொண்டதாகயிருக்கிறது. மேலும், அதை ஹார்ட் கார்டு (Heart Guard-kardiophulax) என்றும் அழைக்கப்படுகிறது.

## நீதியின் மார்க்கவசம்

பவுல், உறுதியான உலோகத்தினால் செய்யப்பட்ட மார்க்கவசம் அல்லது ஹார்ட் கார்டை அணியச் சொல்லவில்லை, மாறாக அதைவிட வல்லமையான, நீதியினால் செய்யப்பட்டிருக்கிற கவசத்தை அணியச் சொன்னார். நீதி என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை டிகாயோசூன் (dikaiosune ) ஸ்டராங்ஸ் # 1343 ஆகும். "நீதி அல்லது நேர்மை" (விசேஷமாக கிறிஸ்துவ குணம் அல்லது செயல்) என்று பொருள்படுகிறது. "நீதி அல்லது மிக சரியாக செயல்படும் குணம்" என்று டிகாயோசூன் (dikaiosune )என்ற வார்தையின் சரியான பொருள் என்று வைன்ஸ் கூறுகிறார். righteosness என்ற வார்தை முன்னதாக "rightwiseness" அதாவது சரியான, ஞானமுள்ள காரியம் என்று உச்சரிக்கப்பட்டு வந்தது.

அன்பு, ஞானம், வல்லமை பொருந்திய தேவனிடமிருந்து இந்த நீதியின் நிலைமை அல்லது சரியான தரம் அல்லது நியாயம் வெளிப்படுகிறது என்று வேத வசனங்கள் தெளிவுபடுத்துகிறது. "நீதியும்

1. Unless otherwise noted, all Scripture citations are from the New American Standard translation

நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம், கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும். " (சங்கீதம் 89 :14)

மனித சிருஷ்டிப்பை மரணத்தின் வல்லமையிலிருந்து தேவ நீதியின் அளவுகோலுக்கு மீட்க வேண்டியிருந்தது. அவர் ஒரு பாவமும் அறியாத, தன்னுடைய ஒரே பேரான குமாரனை, பாவம் செய்த ஆதாமுக்கு பதிலாக, சரி நிகர் சமமான விலைக் கிரையமாக, பூரண மனுஷனுக்கு பதிலாக ஒரு பூரண மனுஷனாக ஈடாக ஜீவனை கொடுக்கும்படி கேட்டார். இது கல்லறைகளுக்கு சென்றவர்களையும் ஜீவனுக்கு திரும்பச் செய்யும். மாம்சத்தில் இயேசு வருவதற்கு முன் அவர் லோகாஸாக இருந்தபொழுது இதை குறித்து தேவனுக்கு சொன்னபதிலை நாம் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திலே வாசித்தறியலாம். "பின்பு யாரை நான் அனுப்புவேன் , யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன், அதற்கு நான், இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும் என்றேன்." (ஏசாயா 6:8,9) இந்த ஒரு மிக பொறுப்பான தெய்வீக வேலைக்கு இயேசு தைரியமாகவும், மனப்பூர்வமாக சம்மதித்தார். மரணத்தை கண்டு அவர் பயப்படவோ அல்லது பின்வாங்கவோ இல்லை.இந்த பணிக்காக அவர் கட்டாயப்படுத்தப்படவும் இல்லை.

மரணம், மிக வெறுப்பான ஒன்று, இதிலிருந்து உலகத்தை மீட்பதே அந்த பணியின் முக்கிய நோக்கமாக இருந்தது. " அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்,என் தாசனாகிய நீதிபர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன், பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்."(ஏசாயா 53:11, 12) இயேசு ஞானஸ்நானம் பெறுவதற்கு யோவான் ஸ்நானகனிடம் வந்த பொழுது "எல்லா நீதியையும் நிறைவேற்ற இப்பொழுது இடம் கொடு" என்று அவர் சொன்ன பதிலை நாம் பார்க்கும் பொழுது, இந்த வேலையில் தன்னுடைய பங்கை செய்ய மிக வாஞ்சையாகவும், வைராக்கியமுள்ளவருமாக இருந்தார் என்பதை நாம் அறிந்துக்கொள்ளலாம்.

யாக்கோபின் உபத்திரவத்தின் போது இயேசு இஸ்ரயேலுக்காக யேகோவா தேவனின் வலது கரமாக போரிட்ட நேரத்தில் அவர் தன்னுடைய "நீதியின் மார்க்கவசத்தை" அணிந்திருந்தார். (ஏசாயா 59 :16 - 20)

### இந்த மார்க்கவசத்தை எப்படி அணிவது?

இஸ்ரயேலின் படை தன்னுடைய எதிராளிகளோடு யுத்தத்திற்கு ஆயத்தப்படும்பொழுது புதிதாக வீடு கட்டி அதை பிரதிஷ்டை செய்யாதவர்களும், புதிய திராட்சை தோட்டம் நாட்டி அதின் பலனை புசிக்காதவர்களும், திருமணம் செய்ய பெண்ணை நியமித்து திருமணம் செய்யாதவர்களும் தங்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்ப அனுப்பும்படி படை அதிகாரிகளுக்கு கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது, ஏனெனில் அவர்கள் யுத்தத்தில் மரித்தால் வேறொருவர் அவர்களுடைய வேலையை செய்யவேண்டியதாயிருக்குமே என்று உபாகமம் 20:5 -8 ஆம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாகவே இருந்தன. அதே போல் வீரமாக இருப்பவர்களை இந்த திடனற்றவர்கள் பயமுறுத்தி விடுவார்கள் என்பதால் பயந்தவர்களை வீடு திரும்ப கட்டளை கொடுக்கும்படி இஸ்ரயேலின் படைத்தலைவர்களுக்கு சொல்லப் பட்டிருந்தது. இதற்கு எதிர்மாறாக, இயேசுவை மனப்பூர்வமாக மரணபரியந்தம் பின் பற்றுவதே ஒரு சிறிய கூட்டத்தின் இலக்காக இருக்கிறது. இவர்களின் இரட்சிப்பின் அதிபதி கிறிஸ்துவே. (எபிரேயர் 2:10)இவர்கள் பரலோக பரிசை பெற இருக்கும் கிறிஸ்துவின் சபையாக அழைக்கப்படுவதற்கு மகிமையும், சிறப்புரிமையும் பெற்றவர்கள். (1கொரிந்தியர் 15 :42 -57) இவர்கள் பூமிக்குரியவைகளை விட்டு, விட்டு, விசுவாசத்தோடும், தைரியத்தோடும் தங்களுடைய ஜீவனை சகோதரர்களுக்காக விட்டுக்கொடுப்பவர்கள். இவர்கள் முடிவு பரியந்தம் விசுவாசத்தோடு இருந்து, இந்த யுத்தத்தில் முழுமையாக உலகப்பிரகாரமான வைகளை இழந்தால், முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, பூமியில் உள்ள குடும்பங்களை ஆசீர்வதிப்பார்கள்.

விசுவாசிகள் மனப்பூர்வமாக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தினால் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் அடிப்படையில் மட்டுமே பாவங்களுக்கு தேவையான ஈடுகொடுக்கப்பட்டு, விசுவாசிகள் தேவனுடைய கண்களுக்கு எதிராக கிறிஸ்துவின் நீதியின் சால்வையில் நீதிமான்களாக காட்சியளிக்கிறார்கள். (ரோமர் 3:21-26, 4:22 to 5:2) விசுவாசிகளின் பலியை தேவன் அங்கீகரித்தார் என்பதற்கு, அவர் அச்சாரமாக கொடுக்கும் பரிசுத்த ஆவியே வெளிப்படுத்துகிறது. இப்படியாக, விசுவாசிகள் தேவனுடைய குமாரர்களாகவும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகவும் சிலுவையின் போர் வீரர்களுமாகி றார்கள். ( யோவான் 1:12-13, ரோமர் 12 :1-2, 11கொரிந்தியர் 5: 17, கலாத்தியர் 6:15, 1யோவான் 2 :1, 2 :5 ;18)

ஆகவே விசுவாசிகள் மார்க்கவசத்தின் இரண்டு பகுதிகளை அணிந்து கொள்கிறார்கள். 1, கிறிஸ்துவின் நீதியினால் பெற்ற நீதிமானாக்கப்பட்ட நிலைமை மற்றும் அந்த நிலைமையில் கிறிஸ்துவை தொடர்ந்து அணிந்து

கொண்டு 2, தேவனுடைய அதே நீதியின் குணத்தில் வளர முயற்சிக்கிறார்கள். "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரிந்தியர் 1:31)

இந்த நீதிமானாக்கப்பட்ட நிலைமையை கிறிஸ்தவர்கள் பெற்றதினால் (தேவன் நீதியாக கருதுவது அல்லது பாவிப்பது ) இயேசுவின் இரத்தத்தினால் கொண்ட விசுவாசத்தினால், அவர்கள் தேவனுடைய நீதியான சித்தத்தை செய்வதிலும் விசுவாசத்திலும் தொடர்ந்து வளர வேண்டும். இந்த நீதிமானாக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து இவைகளைச் செய்ய நீதியின் மார்க்கவசத்தை அணிந்தே இருக்கவேண்டும். இவர்கள் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுபவர்கள். (1தீமோத்தேயு 6:12) "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது" என்று பவுல் கூறியதை உறுதிப்படுத்துகிறார் அப்போஸ்தலனாகிய யாக்கோபு. (யாக்கோபு 2:20) "விசுவாசம் மற்றும் அன்பு " என்ற இரண்டு அடிப்படையான குணங்களை அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் போர் வீரர்களின் மார்க்கவசத்திற்கு ஒப்பிடுகிறார். (1தெசலோனிக்கேயர் 5:8) இந்த இரண்டு குணங்களும் கலந்து நீதியை பிறப்பிக்கிறது.

தேவனுடைய ஊழியத்தில் விசுவாசத்தோடு, கிரியைகளை செய்தால், இந்த கவசம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும், பயனற்றிருந்தால் துருப்பிடித்துவிடும். ஆகவே போர்க்களத்திற்கு போகாவிட்டாலும் சரி, வீரர்கள் போருக்கு பயிற்சி பெற்று ஆயத்தப்படவேண்டும்.

"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்கு கிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம். (11கொரிந்தியர் 10 :4,5)

போருக்காக எதிர்நோக்க வேண்டிய அவசியமில்லை. நீதியாக வாழ்பவர்களை போர்க்களம் கண்டுபிடித்துவிடுகிறது. (11தீமோத்தேயு 3:12) இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருப்பதினால், விழுந்து போன மனித நிலைமையில் இருக்கும் சக சகோதரர்களிடம் விசுவாசிகள் போர் தொடுக்க வேண்டுவதில்லை. (ஏசாயா 60:2)இந்த உலகம் தேவ பக்தியுள்ள வாழ்கை வாழ்பவர்களை எதிர்த்தாலும் அவர்களின் அன்பு, இரக்கம், ஆறுதல் இந்த உலகத்திற்கு தேவைப்படுகிறது. மேலும், கிறிஸ்துவின் நீதியுள்ள இராஜ்யத்தின் நற்செய்தியானது இறுதியில் அவர்களை ஆசீர்வதிக்கும். ஆகவே தைரியத்தோடு "நீதியினிமித்தம் துன்பப்படுகிற பாக்கியத்தை பெற்று, பரலோகராஜ்யம் பிரவேசிக்கலாம்."(மத்தேயு 5:10)

ஒவ்வொரு கிறிஸ்தவரும் முகமுகமாய் எதிர்த்து ஜெயிக்க வேண்டிய எதிரிகள் - (சத்தியத்தின் கிரியைகள் நிமித்தம் வரும் சோதனை) உலகமும் அதின் ஆவி, (யாக்கோபு 4 :4) , விழுந்து போன மனித நிலை (மாம்சம்) (ரோமர் 7:23, கலாத்தியர் 5:19 -21, ரோமர் 8 :12,13) மற்றும் சாத்தான். "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு 5:8) "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6 :12) இவை அனைத்துமே ஆகாயத்து பிரபுவாகிய சாத்தானின் வல்லமைக்கு எதிராக போராட வேண்டிய கிறிஸ்தவனின் ஆவிக்குரிய எதிரிகளாகும். (எபேசியர் 2 :2, யோவான் 14 :30)

தங்கள் கைகளினால் தண்ணீரை அள்ளி குடித்தபடியால், கிதியோனால் தேர்வு செய்யப்பட்ட அந்த முன்னூறு பேர்களைப் போல தங்களுடைய சர்வாயுதங்களை பத்திரப்படுத்த வேண்டிய பொறுப்பும் வீரர்களுடையது. சத்தியமாகிய நீரோடையிலிருந்து (தேவனுடைய பரிசுத்தமான வார்த்தைகள்) தண்ணீர் பருகும் பொழுதும் கூட (படித்து ஆவியை புதுப்பித்து கொள்வது ) ஒரு கிறிஸ்துவ போர் வீரனுடைய சர்வாயுதங்கள் கழற்றப்படக்கூடாது. பூமியில் உள்ள காரியங்கள் மேல் அல்ல மாறாக (கொலோசெயர் 3:2) தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே ஒரு போர் வீரனுடைய சிந்தையில் பதிந்திருக்கவேண்டும். மேலும் இந்த பணி மரணபரியந்தம் நிறைவேற்றப்படவேண்டியதாகும்.

## கிறிஸ்துவின் குணாதிசயங்களை அணிதல்

ஒளியின் ஆயுதத்தை அணிந்த பின் இருளின் கிரியைகளை அப்புறப்படுத்தும்படி பவுல் விசுவாசிகளுக்கு கட்டளைக்கொடுக்கிறார். (எல்லா தீமைகள்), களியாட்டு,வெறி, வேசித்தனம், காமவிகாரம், வாக்குவாதம் மற்றும் பொறாமை (ரோமர் 13:13,14) ஒளியின் பிள்ளைகள் மத்தியில் இப்படிப்பட்ட இருளின் கிரியைகள் ஒருபோதும் காணப்படக்கூடாது. அதற்கு பதிலாக அவர்கள் இயேசுவை தரித்துக் கொள்ளவேண்டும். அதாவது கிறிஸ்துவிலிருந்த அதே நீதியின் குணத்தை பயிற்சி பெற வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தது போல (எபிரெயர் 1:9) நாமும் செயல்படவேண்டும். இருளின் கிரியைகளுக்கு எதிராக நீதியில் வளர்ச்சியடைவதற்கும், கிறிஸ்துவைப்போல குணங்களை பொருத்தி கொள்வதற்கும் பவுல் பிலிப்பியர்களுக்கு அருமையான ஆலோசனையை தந்திருக்கிறார்.

"ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலிப்பியர் 2 : 1- 5)

தேவன் அனுமதிக்கும் போர்களின் போதாவது (அ) அதற்கு முன்பாக சீஷர்கள் தங்களுடைய சுய நீதியை அல்லது சுய பெருமையை குறித்து மேன்மைபாராட்ட இடமில்லை. அவர்கள் தாழ்மையாக இருக்கவேண்டும். மேலும், தாங்கள் சிந்திக்கவேண்டிய அளவுக்கு மேல் அவர்கள் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்." (ரோமர் 12:3) இராஜாவாகிய பெனாதாத் சமாரியாவை முற்றுகையிட்டபொழுது, அந்த பட்டணத்தின் தூளையும் விடாமல் எடுத்துச் சென்றுவிடுவதாக வீம்பு பேசினான். அப்பொழுது நிலை குலைந்த ஆகாப் இராஜா சரியான அறிவுரை அளித்தான். "அதற்கு இஸ்ரயேலின் ராஜா பிரதியுத்தரமாக - ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாது என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றான்." (1இராஜாக்கள் 20:11) ஒருவேளை அவனுடைய ஆட்சி காலத்தில் இந்த அறிவுரை மட்டுமே சரியானதாக இருந்திருக்கவேண்டும். "நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே, ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே." (நீதிமொழிகள் 27:1)என்ற இந்த வசனத்தை ஒருவேளை ஆகாப் இராஜா மனதில் வைத்திருந்திருக்கலாம். மறுநாள் தேவன் பெனாதாத்தை ஆகாப் இராஜாவின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். பிதாவாகிய தேவனால் கிறிஸ்து விசுவாசிகளுக்கு நீதி, பரிசுத்தம் மற்றும் மீட்புமாக தந்ததால், ஒருவரும் தன்னைக் குறித்து மேன்மைபாராட்டாமல், கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டவேண்டும். (1கொரிந்தியர் 1 : 30,31)

தேவனுடைய கிருபையால், கிறிஸ்தவர்களின், சிந்தை, வார்த்தை அல்லது தேவ சித்தத்தை பூரணமாக செய்வதினால் நியாயந்தீர்க்கப்படாமல், அவர்களின் இருதயத்தின் நோக்கத்தை அடிப்படையாக வைத்தே நியாயம் விசாரிக்கப்படுகிறார்கள். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." (மத்தேயு 5 :8) வசனங்கள் சொல்லுகிறபடி - "மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். "(1சாமுயேல் 16:7)

நீதியை கவசத்திற்கு ஒப்பிடுவது போல, அந்த கவசம் காக்கக்கூடிய இருதயம் விசுவாசிகளின் புது சிருஷ்டிக்குள் இருக்கும் புதிய சித்தத்திற்கு ஒப்பிடப்படுகிறது. மாம்சத்தின் பலவீனத்தை மறைக்க கிறிஸ்து நமக்கு தந்த நீதிமானாக்கப்பட்ட நிலைமை இருதயத்தை காக்கும் கவசத்தின் வேலைக்கு சரியாக பொருந்துகிறது. இதனிமித்தமாக இந்த புதிய சிருஷ்டியானது (புதிய சிந்தை (அ) விருப்பம்) தொடர்ந்து கிறிஸ்துவின் நீதியின் சால்வையை (குணம்) அணிந்து கொள்ளும். ஒரு கிறிஸ்துவப்போர் வீரன், பாவத்தின் சோதனைக்கு எதிராக போராடும் பொழுது, அவிசுவாசம், பயம், பகை, கசப்பு, பொறாமை, சோர்வு, சாத்தானின் செயல்பாடுகள் விசுவாசத்தின் கேடகத்தை தாக்குகிறது. இதனால் வரும் விளைவுகள் கொடூரமாக அந்த வீரனை தாக்கி பின்னிட்டு கீழே வீழ்த்தினாலும் அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கை முற்றிலுமாக அணைந்து விடுகிறதில்லை. இவைகளின் தாக்குதலை அறியாததினால் வீழ்ந்த நிலையில் இருக்கும் அந்த வீரன் என்னசெய்வது என்று அறியாமல், எதையும் காணாமல் தவிக்கலாம், எப்படி எழுவது அல்லது என்ன செய்வது என்று குழப்பம் அடையலாம். ஆனால் இன்னும் அவன் மார்க்கவசத்தை அணிந்திருப்பதால் கிறிஸ்துவின் நீதியின் மேல் உள்ள வைராக்கியத்தை அவன் இழப்பதில்லை.

அனுபவங்களினால் தாழ்மைப்பட்டு, முழங்காலில் நின்று ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே ஜெபத்தின் வழியாகச் சேரலாம். (எபிரெயர் 4 :16)அவன் கிறிஸ்துவின் நாமத்தினால் மன்னிப்பை வேண்டினால், அவனுடைய தலைவரும், பரிந்துபேசுகிறவருமானவர் இனி சோதனைகளை மேற்கொள்வதாக உறுதியளித்து, மீண்டும் யுத்தத்தில் தொடர்ந்து போர் புரிய தேவனிடம் அனுமதி கேட்கிறார். (1யோவான் 2:1,2) பரலோகத்தில் நம்முடைய இரக்கமுள்ள தகப்பன், பாவங்களை மன்னித்து (1யோவான் 1:9,10) அவரிடம் மறுபடியும் சேர்த்துக்கொண்டு அவனுக்கு அவருடைய வார்த்தைகளின் மூலம் உற்சாகமளிக்கிறார்."நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்..." (நீதிமொழிகள் 24 :16) இதன் மூலம் அனுபவங்களை பெற்றவன், மற்ற சகோதரர்களும் இப்படிப்பட்ட யுத்தகளத்தில் விழாமல் நிற்க உதவிகளைச் செய்ய ஏதுவாகும்.

**இன்று போர்க்களத்தில் நடக்கும் யுத்தம்**

அப்போஸ்தலனாகிய பவுல் சீஷர்களை நோக்கி "ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள்

எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." என்றார்.(எபேசியர் 6:13) அந்த நாள் இதுவே. அதே அப்போஸ்தலன் இக்காலத்தில் விசுவாசிகளின் மனப்பான்மையையும் அனுபவங்களையும் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். "மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள், இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (11தீமோத்தேயு 3 :1 -5)

சிலுவையின் போர் வீரர்கள் இப்படிப்பட்ட நடத்தை, கிரியைகள் மற்றும் சோதனைகளை விட்டு விலகி, நீதியின் மார்க்கவசத்தை மிக உறுதியாக அணிந்திருக்கவேண்டும். தேவனையும் குமாரனையும் நேசித்து, அவர்களை விசுவாசித்து, சுத்த இருதயத்தோடு நீதியின் கோட்பாடுகளை விரும்புகிறவர்கள் ஒன்று கூடலாம். இவர்கள் அனைவரும் ஒரே நிலையில் இருப்பார்கள். "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." (கலாத்தியர் 3:28) இவர்கள் அனைவரும் ஒரே நிலையில் இருந்தாலும், அவர்களுக்குள் அதிகமாக போரிட்டவர்களை மற்றவர்கள் பாராட்டி கிறிஸ்துவ அனுபவங்களின் பொக்கிஷத்தை பகிர்ந்து கொள்ளலாம்.

இப்படியாக நீண்ட நாட்களின் அனுபவம் பெற்றவர்கள் மற்ற அனைத்து சீஷர்கள், அதிமாக ஜெபிக்கவும், விசுவாசத்தை செயல்படுத்தவும், ஊழியம் செய்யவும், நேசிக்கவும், ஊக்குவிக்க விரும்புகிறார்கள். அநேக நேரங்களில், ஆவிக்குரிய காயங்கள் அடைந்த வீரர்களை, பாதுகாத்து, தாகத்திற்கு ஜீவ தண்ணீரை கொடுத்து, மீண்டும் அவர்களுக்குள் ஆவிக்குரிய ஜீவன் புதுப்பிக்க செய்கிறார்கள். அவ்வப்பொழுது, தாங்களும் போராட்டங்களில் காயப்பட்டிருந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாமல், சுயநலமற்ற மனதோடு மற்றவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அவர்கள் தேவனிடம் வந்து சேர, தேவனை மகிமைப்படுத்தும்படி தங்களுடைய ஜீவனையும் தந்து காரியங்களை செய்கிறார்களே தவிர என்றுமே தங்களை மேன்மைப்படுத்தி கொள்ளுவதில்லை.

சீஷர்களாகிய நமக்கு எதிராக வரக்கூடிய யுத்தங்களில் வெற்றி பெற, இப்படிப்பட்ட சகோதரர்களிடம் பாடங்களை கற்றுக் கொள்ளலாம். சிலர் அமெரிக்கா, இந்தியா, நைஜிரியா, ஆஸ்திரேலியா, மற்றும் பூமியின் எல்லா முகனைகளிலும் இருக்கிறார்கள். ஆனால் இன்றைய இணையதளத்தின் மூலமாக "அங்கும் இங்கும் ஓடி", நம்முடைய சகோதரர்களை ஒரு நொடிப் பொழுதில் இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளும் வசதிகளை இன்று நாம் பெற்றுள்ளோம். (தானியேல் 12: 4)

தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கும் வேதவாக்கியங்களெல்லாம் நீதியைப் படிப்பிக்குதலுக்கு பயனுள்ள பயிற்சியை பெற நாம் வேதம் வாசிக்கிறோம். நம்முடைய தளபதியின் வார்த்தைகளையும் ஜீவியத்தையும் கற்றறிகிறோம். மேலும், நீதியின் மார்க்கவசத்தில் உருவகப்படுத்தினது போல நம்முடைய சொந்த குணங்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமையினாலும், ஆவியினாலும், கிறிஸ்துவின் தெய்வீக குணத்திற்கு மாற சுயபரிசோதனைகளையும் செய்கிறோம். (பிலிப்பியர் 3 :15, 16) ஆவிக்குரிய நீதியின் கோட்பாடுகளில் நாம் வாழ முயற்சிக்கும் பொழுது, ஒருவரை ஒருவர் நேசிப்பதற்கும், நற்கிரியைகளை செய்வதற்கும் ஊக்குவிக்கலாம். நாம் அனைவரும் இந்நாள் வரைக்கும் விழுந்துபோன சரீரத்தில் இருப்பதால், குற்றம் செய்வது போல, பிறருடைய குற்றங்களை மனப்பூர்வமாக மன்னிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். (மத்தேயு 18: 35, 21, 22)

நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து தளபதியாகிய இயேசுவின் மாதிரியை பின் பற்றுபவர்கள் தேவனுடைய சேனையாக இருக்கிறோம். நாம் ஒருவரை ஒருவர் உரசிக்கொள்ளாமல் ஊக்குவித்து, ஆவிக்குரிய சர்வாயுதங்களோடு தேவனுக்கு முன் மனத்தாழ்மையாக, தோளோடு தோள் நின்று, நம்முடைய சிறிய கூட்டத்தை எதிர்க்கும் எதிரிகளை எதிர்த்து நிற்கலாம். நாம் விசுவாசமாக இருந்தால், இந்த ஆவிக்குரிய எதிரிகள் நம்மைவிட்டு ஓடிப்போவார்கள். (யாக்கோபு 4:7) ஒரு சமயம் இஸ்ரயேல் படை யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டபொழுது, "இஸ்ரயேலரே, கேளுங்கள், இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்,உங்கள் இருதயம் துவளவேண்டாம், நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும்." (உபாகமம் 20: 3,4) என்று ஆசாரியன் ஜனங்களை பார்த்துச் சொன்னார்.

சமாதானம்

# பாதரட்சை



"..சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்" - எபேசியர் 6 :14,15

**Richard Doctor**

இந்த வார்த்தைகளை வாசிக்கும் நமக்கு முரண்பாடுகள் இருப்பினும் ஆறுதலையும் பெறுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் தேவனுக்கு ஒப்புகொடுக்கும் பொழுது என்ன செய்கிறோம் என்பதை தெளிவாக அறிந்திருந்தார் என்பதை நாம் உறுதியாகச் சொல்லலாம். "ஆவியின் பட்டயத்தை" எடுத்து கொள்ளுவதும் (எபேசியர் 6 :17), போராயுதங்களோடு மற்றொரு யுத்தத்திற்கும் புறப்படுவதும், அதே சமயம் சமாதானத்தின் சுவிசேஷத்தின் ஆயத்தத்தையும் எவ்வாறு செய்வது? நாம் யுத்தத்திற்கு ஆயத்தப்படுகிறோமா? அல்லது சமாதானத்திற்கு ஆயத்தப்படுகிறோமா?

**சர்வாயுதம் எதற்கு பயன்படுத்தக்கூடாது**

அநேக ஆசீர்வதிக்கப்பட்ட அருமையான இளைப்பாறுதல்கள் உள்ளன. ஆனால் இவைகளை அனைத்தையும் பெறுவதற்காக தேவனுடைய சர்வாயுதங்களையும் தரித்துகொள்ளும்படி நாம் அழைக்கப்படவில்லை.

பரிசுத்தத்தின் அடிப்படையில் தேவனுடைய சமூகத்தில் சுத்திகரிக்கப்பட்ட நிலையில், நாம் போர் புரிவதற்கு ஆயுதங்களை தரித்துக்கொள்ளும்படி நாம் அழைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஏனென்றால் அப்படிப்பட்ட பரிசுத்தமான இடத்தில் ஆயுதங்களையோ அல்லது இந்த பாதரட்சைகளையோ அணிய வேண்டிய அவசியமில்லை. முட்செடி எரிகிற அந்த அற்புதமான காட்சியை பார்ப்பதற்கு மோசே தைரியமாக நெருங்கி - "இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதக்காட்சியை பார்ப்பேன் என்றார். அவர் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி - மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன் - இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர் - இங்கே கிட்டிச் சேராயாக, உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்......" (யாத்திராகமம் 3:3 -6)

ஆசரிப்புக்கூடாரத்திலும் கூட ஆசாரியர்கள் எந்த விதமான போர் ஆயுதங்களையோ, பாதரட்சைகளையோ அணியவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இவர்கள் வெறும் கால்களோடு தேவனுக்குப் பணி செய்தார்கள். பற்றி எறிந்த முட்செடியைச் சுற்றி இருந்த இடம் "பரிசுத்தமாக" இருந்தது போல, ஆசாரியர்கள் நடந்த பிரகாரம், பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலமும் பரிசுத்தமாயிருந்தது. நாம் தேவனுக்கு முன் தவறிவிடுவோமோ என்று எந்த விதமான பயமின்றி இந்த ஸ்தலங்களில் நடக்கலாம். ஆனால் அதில் நடப்பவர்களுக்கு ஒரு மிகப் பெரிய ஆபத்திருந்தது. அதற்காகவே தேவன் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பணிபுரியும்பொழுது அந்த ஆசாரியர்களின் கைகளையும், கால்களையும் கட்டாயமாக கழுவும்படி கட்டளை கொடுத்திருந்தார். (யாத்திராகமம் 30:18 -21)பாதங்களில் எந்த விதமான அணிகலன்களை அணிந்திருந்தாலும், நிச்சயமாக அவர் அசுத்தமானவைகளோடு வந்திருக்கிறார் என்று கருதலாம். [1]

நம்மால் நேசிக்கப்பட்டவர்களின் வீடுகள் - குடும்பம், நண்பர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் மத்தியில் போர் புரிவதற்காக இந்த ஆயுதங்கள் தரிக்கப்படுகிறதில்லை. அல்லது பாதரட்சை மற்றும் ஆயுதங்களும் வீட்டுச் சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக அல்ல. வேதாகமத்தின் காலங்களில் ஒரு வீட்டிற்குள் நுழையும் முன் பாதரட்சையை வெளியே கழற்றி விட்டு செல்வது வழக்கமாக இருந்தது. நம்முடைய ஆண்டவரின் கடைசி இராபோஜனத்தின் போது கால்களை கழுவின பின்பு ஒரு நட்புக்குரிய சூழலில் அமர்ந்ததை நாம் பார்க்கும் பொழுது அவர்களுடைய பழக்கத்தை நாம் அறிந்துகொள்ளலாம். பாதரட்சையை கழற்றி கால்களை கழுவும்பொழுது, அந்நாளின் வெப்பத்திலிருந்தவர்களுக்கு ஒரு புத்துணர்வை தந்தது. இவ்வாறாக கால்கள் கழுவப்பட்ட விருந்தாளி, வீட்டிற்குள் நுழையும் பொழுது விரிக்கப்பட்டிருக்கும் சமுக்காளத்தின் மேல் நடக்கும் கால்களுக்கு எவ்வளவு இன்பமாயிருக்கும்.

இவை அனைத்தையும் நாம் பார்க்கும் பொழுது, நாம் எதிர்நோக்கும் சமாதானத்தின் நாளின் எந்த விதமான துறைகளிலும் இந்த ஆயுதங்களை எடுத்துச் செல்ல அவசியமில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் நாம் வாழக்கூடிய இந்த நாட்களில் இப்படிப்பட்ட சமாதானத்தை தேடுபவர்களோடு இசைந்திருக்க நம்முடைய முழு வலிமையை செலவழிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆயினும்,தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய எண்ணை நம்முடைய விளக்குகளில் இருந்தால் மட்டுமே இந்த அமைதியையும், சாந்தத்தையும் நாம் அடையலாம். இந்த எண்ணை தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டால் மட்டுமே, நாம் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில், நம்முடைய

1. Atwater, E., The Sacred Tabernacle of the Hebrews: The History and Significance, orig. published by Dodd, Mead, New york (1876), p.333

முயற்சிகளினால் காரிருள் நிறைந்த உலகத்தில் ஒளி வீச முடியும். பத்து கன்னிகைகளின் உவமையில் புத்தியில்லாத கன்னிகைகளின் விளக்கு அணைந்து போனது போல காலபோக்கில் நம்முடைய விளக்கின் ஒளியும் மங்கி, இறுதியில் அணைந்து விடும்.

மாம்சமானது கோபத்தை துரிதமாக பிறப்பிக்காதபடிக்கு சமாதானத்தின் பாதரட்சையை அணிந்து ,ஒரு பூரணமான மாதிரியை நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்கு முன் வைத்திருக்கிறார். ஒரு நாள் பிரயாணத்திற்கு பின் இயேசுவும் சீஷர்களும் களைப்படைந்தவர்களாக சமாரியா பட்டணத்திற்கு வந்தார்கள். என்பதை குறித்து சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். அங்கு அவர்கள் தங்கி ஓய்வெடுக்கும் படி இடத்தை தேடிச் சென்றார்கள். ஆனால் அந்த கிராமத்தில் இயேசு எந்த விதமான ஊழியங்களையும் செய்ய விரும்பாததினால், அங்குள்ள மனுஷர் எந்த உதவியையும் செய்யவில்லை என்பது தெளிவாகிறது. எனவே அவர்கள் தொடர்ந்து எருசலேமுக்குச் சென்றார்கள். (லூக்கா 9 :52-56) அப்பொழுது அப்போஸ்தலர்கள் மிகவும் கோபமடைந்தார்கள். மேலும் யோவானும் யாக்கோபும், வானத்திலிருந்து அக்கினியை வருஷித்து அந்த கிராமத்தை அழித்துவிடும்படி, கட்டளை கொடுக்க இயேசுவிடம் மிக தீவிரமாக அனுமதி கேட்டார்கள். இதை இயேசுவும் மனப்பூர்வமாக சம்மதிப்பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ அவர்களை கண்டித்து, எச்சரித்தார். அதற்கு பின் அவர்கள் மற்றொரு கிராமத்திற்கு சென்றார்கள்.

நம்முடைய கிருபை நிறைந்த் பரலோகபிதாவும் இதே பாடத்தை எந்த நோக்கமும் இல்லாமல் சுற்றிக் கொண்டிருந்த ஊழியக்காரனாகிய யோனாவுக்கு கற்றுக்கொடுத்தார். யாக்கோபும் யோவானும் போல யோனாவும் நினிவே பட்டணத்தில் உள்ள துன்மார்க்கரின் அழிவை மிக ஆவலோடு எதிர்பார்த்தார். (யோனா 4 :1 -11) யோனா இரக்கமும், கிருபையையும் பெற்றிருக்கவேண்டும் என்பதை செயல்பூர்வமான, ஒரு எடுத்துகாட்டின் மூலம் விளக்கினார். அதாவது சமாதானத்தின் பாதரட்சையை எவ்வாறு அணிவது என்று புரிய வைத்தார். "....மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்."(வசனம் - 11)

நம்முடைய மாம்சம் நாம் படும் கோபத்திற்கு நியாயம் கற்பிக்க விரும்பும். ஆகவே நாம் இந்த சமாதானத்தின் பாதரட்சையை அணிந்து, நம்முடைய பரலோகப் பிதாவின் நீதியை முழு உறுதியாக, அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் செயல்படுத்த அப்போஸ்தனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார். இதன் காரணமாக ஏசாயா - "நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்." (ஏசாயா 32 : 17) என்று சாட்சி கொடுத்தார்.

நம்முடைய முழு சிந்தையை பரலோகப்பிதாவின் மேல் வைத்திருந்தால், நிச்சயமாக நாம் நித்திய சமாதானத்தை பெறுவோம். (ஏசாயா 26:3) இந்த சமாதானத்தை பற்றி பவுல் சொல்லும்பொழுது -கிரியைகளிலும், நிகழ்வுகளிலும், நடத்தையிலும் நாம் சமாதானத்தை பிரதிபலிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். "தீமையை விட்டு விலகி, நன்மை செய், சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்து கொள். "(சங்கீதம் 34 :14) ஆம், எபேசியர்களின் வார்த்தையானது, போர்க்கு அழைக்கும் ஒரு விநோதமான முறையாகும். மற்ற யுத்தங்களை போல் இது இல்லை. முற்றிலுமாக பகைவர்களை அழிப்பதோ, முடமாக்குவதோ அல்லது அவர்களை கைப்பற்றி அடிமைகளாக மாற்றுவதோ இந்த யுத்தத்தின் நோக்கமல்ல.

**உங்கள் பகைவர்களை நேசியுங்கள் - இதுவே சமாதானமான வாழ்க்கை**

நம்முடைய நோக்கம் என்ன? இயேசு கிறிஸ்துவின் போர் வீரர்களாகிய நாம் நம்முடைய ஆவியின் பட்டயத்திற்கு எதிராக வரும் எதிராளிகளை அழிப்பதே நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும். "விழுந்து போன எதிரி மீண்டும் எழும்பலாம், ஆனால் மீண்டும் நண்பனாக்கப்பட்ட எதிரி அழிகிறான் "என்று ஒரு ஞானி குறிப்பிட்டார். நம்முடைய பாதங்களை பாதரட்சைகளில் வைக்கும் அந்த நிலைக்கு, "ஆயத்தம்" என்ற வார்த்தை (ஸ்டராங்க்ஸ் # 2091) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது " சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை ஆகும். பாதரட்சையானது கால்களுக்கு சரியாக பொருந்துவதை குறிக்கும். இது பாதங்களின் வெளிப்புறமாக அணியக்கூடியதாக இருப்பதால், எந்த நேரத்திலும், எந்த வேலைகளையும் தொடர்ந்து பாதரட்சையை அணிந்தவர்களாக, அதாவது "ஆயத்தமான" நிலையில் நம்முடைய சிந்தை இருக்கவேண்டும் என்பதை காட்டுகிறது. இன்றைய தினங்களில், பந்தயங்களில் ஓடுபவர்கள், தங்களுடைய பாதங்கள் பாதரட்சைகளில் சரியாக பொருந்துகிறதா என்பதில் மிக கவனமுள்ளவர்களாக இருப்பார்கள். இந்த கூடுதலான "ஆயத்தம்", நிழலான முதல் பஸ்காவின் ஆயத்தபணியில் நாம் காணலாம். இவ்விரண்டிற்கும் தொடர்பு இருப்பதாக தோன்றுகிறது. "அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள், அது கர்த்தருடைய பஸ்கா." (யாத்திராகமம் 12 :11) என்று பஸ்கா உணவை புசிக்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய வாழ்க்கையின் பாதை மற்றும் நம்முடைய மனநிலையாகிய இவ்விரண்டிலும், எல்லா கிரியைகளிலும் "சமாதானத்தை" பிரதிபலிப்பவர்களாக இருக்கவேண்டும். நம்மால் இயன்ற வரைக்கும்,

அனைவரோடும் சமாதானமாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறோம். (ரோமர் 12 :18) மலைப் பிரசங்கத்தில் இயேசு பேசும்பொழுது - " நாம் நம்முடைய எதிராளிகளையும் நேசிக்க வேண்டும்" என்றார். "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." (மத்தேயு 5 :43 -45)

நமக்கு கொடுத்த ஒவ்வொரு சட்டங்களையும் முதலில் தேவன் தாமே கடைபிடிக்கிறார். இப்பொழுது அவருடைய பகைவர்களை அழிக்காமல், அவர்களுக்கு உணவளித்து, மழையை வர்ஷித்து, சூரியனை பிரகாசிக்கச்செய்கிறார். இனி அவன் வாழ்வதற்கு தகுதியற்றவன் என்று தேவனால் நிர்ணயிக்கப்பட்ட நம்முடைய எதிரி பசியாயிருக்கும் பட்சத்தில் நாம் அவனுக்கு உணவு அளிக்க வேண்டும் என்றும் மற்ற காரியங்களை தேவனிடத்தில் விட்டுவிடும்படி அவர் நமக்கு போதிக்கிறார். தேவனுடைய சட்டங்களை செயலாற்றுவதற்கு நாம் இன்னும் அதிகாரம் பெறவில்லை. இருந்தபோதிலும், தேவனுக்கோ, நமக்கோ எந்தவிதமான எதிரிகளும் இல்லை என்று தேவன் நமக்கு உறுதியளித்திருக்கிறார். ஆனால், நாம் இரக்கத்தையும் கருணையையும் பாராட்டுவதால், மனப்பூர்வமாக நீதிக்கு எதிராக இருப்பவர்கள் தேவனுடைய தண்டனைக்கு தப்பமாட்டார்கள்.

கீர்த்தி பெற்ற அஹிம்சையை குறித்த கோட்பாட்டை, இயேசுவின் மலைப்பிரசங்கத்திலிருந்து[1] எடுத்துக்கொண்டேன் என்று இந்தியாவில் வாழ்ந்த மகாத்மா காந்தி, ஞானஸ்நானம் பெற்ற தன்னுடைய நண்பனும், தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோனாஷ்பர்கின் மந்திரியுமான ஜே. ஜே டோக் என்பவருடன் சம்பாஷிக்கும் பொழுது குறிப்பிட்டார். (சார்லஸ் ஜாய், The Spiritual Life – the selected writings of Albert Schweitzer, Ecco press (1996), p . 69) அதற்கு பின் காந்தி தன்னுடைய விசுவாச அமைப்புக்குள் இந்த வார்த்தைகளை பொருத்தினார் -

> "ஒரு நண்பனின் சிநேகிதனோடு, நட்பு கொள்வது எளிது, ஆனால் நம்மை எதிரி என்று நினைப்பவரிடம் நட்புகொள்வது உண்மையான மதத்திற்கு சரியான எடுத்துகாட்டாகும். மற்ற அனைத்தும் வியாபாரமே" .

"பகைவர்களை நேசியுங்கள்" என்ற வாக்கியத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவதை பற்றி சகோ. ரசல் எழுதும்பொழுது - "மனப்பூர்வமான எதிராளிகளுக்கு தேவன் எந்த விதமான ஆசீர்வாதங்களையும் வாக்களிக்கவில்லை. இராஜ்யத்தின் நன்மைகளும், நித்திய ஜீவனும் இப்படிப்பட்டவர்களுக்கு இல்லை. ஒரு வேளை முழு மனுக்குலமும் இப்படிப்பட்ட குணலட்சனங்களை பெற்றிருந்தால், எந்த விதமான இரட்சிப்பும், திரும்பகொடுத்தலும், தேவனிடமிருந்து கிடைத்திருக்காது. ஆனால், தேவன் சகலத்தையும் முன் அறிந்தவர். மனுக்குலத்தின் பெரும்பான்மையான பகுதியானது நன்மை, தீமையின் அனுபவங்களை பெற்று சரி எது என்றும், தவறு எது என்றும் நன்கு அறிந்து சட்டங்களின் நோக்கங்களை உணர்ந்து அவரை பணிந்து சேவிக்க மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்து, மகிழ்ச்சியோடு தங்களுடைய முழு இருதயத்தோடும், சிந்தையோடும், பலத்தோடும் அவைகளை கடைபிடித்து அயலகத்தாருடனும் அதே அன்போடு பழகி தங்களை நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிப்பார்கள். ஏனென்றால் தேவன் ஆதாமின் சந்ததியில் அவருக்கு சிநேகிதர்கள் இருப்பார்கள் என்று முன் அறிந்து, சிலுவையில் அறையப்பட்ட தன்னுடைய ஒரே பேரான குமாரனின் இரத்தத்தின் மூலம் மீட்பை கொடுத்து, மீண்டும் நட்புறவை ஏற்ப்டுத்தினார். ( Reprints. pp. 1175,1176)

இப்படிப்பட்ட மார்க்கவசகத்தையும், பாதரட்சையையும் அணிந்த நாம் இன்று ஜனங்கள் மத்தியில் இருக்கும் அதிகமான பலவீனங்கள், அூரணங்கள் மற்றும் தவறாக புரிந்து கொள்வது போன்ற நம்முடைய பகைமையையும், எதிர்ப்புகளையும் கண்டறியக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மொத்தத்தில், இப்பொழுது நாம் மற்றவர்களின் இருதயத்தின் நோக்கத்தையும் சித்தத்தையும் ஆழமாக உணர்ந்து அவர்களை நியாந்தீர்க்க முடியாது. (1சாமுயேல் 16:7) அதேபோல் நீதி செயல்களுக்கு விரோதமான சில உண்மையான எதிரிகளையும், பாவத்தினால் உருக்குழைந்த, குருடாக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட சோதனைகளில் அகப்பட்ட அல்லது சரியாக புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத காரியங்களின் மத்தியில் உள்ள வித்தியாசங்களை அறிந்து நியாயம் விசாரிப்பதும் இயலாத காரியமாகும்.

ஆகவே, நம்முடைய எதிரி பசியாயிருந்தால், நாம் போஜனம் கொடுக்க வேண்டும். ஒரு வேளை அவன் தேவனை ஏமாற்றிய எதிரியாக இருந்தால், நமக்கும் எதிரியாகவே இருக்கிறான். ஆனால் முழு உலகத்தை இரட்சிப்பதற்கும் இது காலம் அல்ல. தேவனை எதிர்த்து நின்று மனப்பூர்வமாக பாவம் செய்பவர்கள் -"....அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்." (சங்கீதம் 72 :9)என்று தேவன் சொல்கிறார். மேலும், "இதோ, எல்லா

1. Charles Joy, The Spiritual Life - the selected writings of albert Schweitzer, Ecco Press (1996), p.69

ஆத்துமாக்களும் என்னுடையவைகள்..... பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்." (எசேக்கியேல் 18:4, சங்கீதம் 145 :20) என்றும் தேவன் பிரகடனம் செய்கிறார். நீதிக்கு எதிராக இருப்பவர்களை பற்றி தேவனுடைய இராஜ்யத்தில் முடிவெடுக்கப்படும். "அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்க வராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப் படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய ஆக்கினையாகிய தண்டனையை அடைவார்கள். " (11 தெசலோனிக்கேயர் 1 :9,10)

தேவனுக்கும் அவருடைய நீதிக்கும் மனப்பூர்வமாக எதிர்த்து நிற்கும் துன்மார்க்கனான சாத்தானும் அவனுடைய எல்லா பிள்ளைகளுக்கும் என்றுமே சமாதானமில்லை. (ஏசாயா 57:20) இவர்கள் நித்திய அழிவாகிய, அக்கினி கடல் என்று அடையாளமாக சொல்லப்படுகிற "இரண்டாம் மரணத்தில்" (வெளி 20 :14) பங்கடைவார்கள். இப்படியாக மனப்பூர்வமாக பாவம் செய்பவர்களை தேவன் என்றுமே தன்னுடைய வழிக்கு இசைவாக வணைக்க விரும்புவதில்லை மாறாக மனம் திருந்த விரும்புவோருக்கு கிருபையளித்து, உதவி செய்து முந்தின சீருக்கு அவர்களை சீர்பொருத்துவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். ஆகவே நாம் பழிவாங்குவதற்கு பதிலாக நம்முடைய சத்துருக்களை போஷிக்க வேண்டும் என்ற, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவரே பதில்செய்வார் என்று அவரை விசுவாசிக்கவும் வேண்டும். (ரோமர் 12 :19, யாக்கோபு 5 :1 -6)

**போராட்டத்துடன் சமாதானத்தை தொடர்ந்து கொள்வது.**

அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய சர்வாயுதங்களையும், "சமாதானத்தின் சுவிசேஷத்திற் குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை " பற்றி எழுதுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன் தீர்க்கதரிசியாகிய ஏசாயா, பாதங்களை, சமாதானத்தின் சுவிசேஷத்தோடு சம்மந்தப்படுத்தி தீர்க்கதரிசனம் உரைத்தார். "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன." (ஏசாயா 52 : 7)

உண்மையில், ஆயிரவருட ஆட்சியின் சந்தோஷங்களையும் சமாதானத்தையும் மற்றும் அனைவருக்கும் கொடுக்கப்படும் ஈடுபலியையும் அதினால் அனைவரும் பெறப்போகும் ஆசீர்வாதங்களையும் பற்றி அறிவிக்கக்கூடிய வாய்ப்பை இன்று நாம் பெற்றிருப்பது மிக பெரிய பாக்கியமாகும். (1தீமோத்தேயு 2:5,6 எபிரெயர் 2 :9)

நாம் செயலற்றிருந்தால் சமாதானத்தைப் பெற முடியாது. இந்த சமாதானத்தை தேடிச் செல்வதற்கு ஏதோ ஒரு வகையான பாதரட்சை தேவைப்படுகிறது என்று சங்கீதக்காரன் மிக அழகாக பாடியிருக்கிறார். ".. நன்மை செய், சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்" (சங்கீதம் 34:14) செயலற்றிருப்பது, சமாதானம் என்று பொருள்படாது. சமாதானத்தை தேடும் பொழுது, சில பொதுவான காரணங்களின் அடிப்படையில், நம்முடைய எதிராளியோடு மீண்டும் சமரசமாக நாம் ஒத்துக்கொள்ளும் விஷயத்தில், நம்முடைய தனி உரிமைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது நம்முடைய சுய விருப்பத்தை நிலைநாட்டி, சமாதானத்தை தேடுவது உண்மையில் முரண்பாடாகவே இருக்கும். சமாதானத்தை தேடுவது என்றால் நம்மை நாம் தாழ்த்தி மற்றவர்களுக்கு விட்டுக்கொடுப்பதாகும். ( Reprints, p.4407 )

சாலொமோன் சமாதானத்தை பின்தொடர்வது, ஒரு போராட்டமான செயல் முறை என்று கண்டு, தேவனுடைய ஞானத்தையும் கட்டளைகளையும் பின்தொடர்ந்து சமாதானத்தின் பாதையையும் அதனோடு இணைத்தார். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய ஞானத்தை நடைமுறைப்படுத்தி, சுவிசேஷத்தையும் அதன் கட்டளைகளையும் கடைபிடிப்பதினால் வருகிறதே சமாதானமாகும். மற்ற எந்த விதமான வழியிலும் சமாதானத்தை பெறுவது இயலாத காரியம். தோல்வியே அதனுடைய முடிவு.

"என் மகனே, என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம்." ( நீதிமொழிகள் 3:1,2,13,16,17)

இயேசுவோடு, சமாதானத்தின் பாதையில் நடப்பதே நம்முடைய வாழ்க்கையின் முக்கிய பகுதியாக இருந்தாலும், இதில் நாம் தனித்து நடப்பதில்லை. நம்மோடு அநேகர் இருக்கிறார்கள் - நம்முடைய பிரியமான சகோதரர்கள் - அவர்களும் நம்மைப் போல சர்வாயுதங்களை தரித்தவர்களாக, அதே யுத்தகளத்தில் போராடிக் கொண்டும், சமாதானத்தின் பாதரட்சையை அணிந்திருக்கிறார்கள் - "நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன், கர்த்தர் என்னை இரட்சிப்பார். திரளான கூட்டமாய்க் கூடி என்னோடு எதிர்த்தார்கள். அவரோ எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவைச் சமாதானத்துடன் மீட்டுவிட்டார். " (சங்கீதம் 55 :16,18)

நம்முடைய சகோதரர்களை பொருத்த வரைக்கும் நாம் சமாதானத்தின் பாதரட்சையை அணிவது எவ்வளவு முக்கியமாக இருக்கிறது பாருங்கள்,

சகோதரர்களுக்குள் எதிர்ப்புகள் உள்ளதா ? பிரச்சனைகள் உள்ளதா ? அனைத்தையும் சமாதானத்தோடு இணங்குகிறீர்களா ? ஆனால் சமாதானத்தை நிலைநாட்டாத இடங்களில் முக்கியமான. ஒரு இடம் சதோதரர்கள் வாசம் செய்யும் சபையாகும். இதை சொல்வதற்கே மிக வேதனையாக உள்ளது. அற்பமான காரியங்கள் அடிக்கடி பெரிதாக்கப்பட்டு, திரும்ப சமாதானத்தை கொண்டு வரமுடியாத அளவுக்கு பிரிவுகள் ஏற்பட்டுவிடுகிறது. நாம் சத்துருக்களை நேசிக்கவேண்டியவர்களாக இருக்க, நம்முடைய சகோதரர்களை நேசிக்க எவ்வளவு கடமைபட்டிருக்கிறோம். (1பேதுரு 1:22, யோவான் 13:34,35, ரோமர் 12:10, எபிரெயர் 13 :1, மத்தேயு 18 :21,22) சபைகளுக்குள் இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழும்பும்பொழுது இந்த சமாதானத்தின் பாதரட்சையை நாம் அனைவரும் அணிய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இனி உபத்திரவமும், ஒழுங்கின்மைகளும் வருவதினால் சமாதானத்தின் பாதையில் நாம் நடப்பது மிகக் கடினம். ஆனால் நாம் பெற்ற விசுவாசத்தினால், இன்று சமாதானத்தின் பாதையில் சமாதானத்தோடு நடக்க கிருபை பெற்றிருக்கிறோம். (Reprints, p.1833 காண்க) இந்த உலகத்தின் மனுக்குலம், பகைமை எண்ணத்தோடு தங்களுடைய முழு முயற்சிகளையும் அல்லது. பெரும்பான்மையாக பகைமையோடு தங்களுடைய மோசமான முயற்சிகளிலும், பெரும் மகிழ்ச்சியாக நீதியையும், சமாதானத்தையும் ஒருமித்து ஏற்படுத்துவது போல், போலியான அன்பை உண்மையைப் போல் வெளிப்படுத்தி அனைவரையும் வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு முயற்சி செய்தாலும் இந்த யுகத்தில் இந்த சமாதானம் உண்மையானதல்ல. இராஜ்யத்தில் - "கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன், அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார், அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்கள். நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது. "....கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும் ." (சங்கீதம் 85 :8 -10)

தேவனுடைய கற்பனைகளை விரும்பும் நாம், அதிகமான சமாதானத்தை பெற்றிருக்க வேண்டும். (சங்கீதம் 119 :165) நமக்கு முன் இருக்கும் கற்பனைகளையும் வசனங்களில் எழுதியிருக்கிறவைகளின் கோட்பாடுகளை நம்மால் இயன்ற வரைக்கும் கடைபிடித்து நம்முடைய பிரயாணத்தில் நீதியின் பாதைகளில் அடிகளை பதித்து நம்முடைய பரலோகப் பிதாவின் மேல் நம்முடைய அலைபாய்கிற சிந்தையை கவனமாக வைத்து நடப்போமானால் இந்த சமாதானத்தை பெற்றுக்கொள்வோம். (ஏசாயா 26 :3)நாம் போராட்டத்தின் மத்தியில் சமாதானத்தை பின் தொடர சமாதானத்தின் பாதரட்சையை அணிந்தால், வாக்களிக்கப்பட்ட இளைபாறுதலுக்குள் பிரவேசிப்போம். இந்த சமாதானத்திற்குள் முழுமையாக நுழைந்தாலும் வசனங்கள் இதை குறித்து அதிகமாக பேசுவதில்லை. "ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும், அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்." (ஏசாயா 48 :18)


மற்ற ஆயுதங்களோடு, சமாதானத்தின் பாதரட்சையை அணிந்திருப்பதினால் நாம் பெறும் ஆசீர்வாதங்கள் என்ன ? இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு நாம் பெறும் சமாதானமே. (அப்போஸ்தலர் 10 :36, ரோமர் 5:1)"தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள், நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக..." (கொலோசேயர் 3 :15,16)

தேவனுடைய சமாதானம் மாம்சத்திற்குரியவைகள் அல்ல, அது இருதயத்தில் இருக்ககூடியது. இந்த சமாதானமானது, நம்முடைய ஒவ்வொரு அனுபவங்களிலும் பரிசுத்தமான உள்ளாற்றலோடும் கட்டுக்குள் வைத்து செயலாற்ற வேண்டும். நாம் நம்மை எந்த விதத்திலும் ஒளிக்காமல் முழுமையாக ஒப்புகொடுத்து சமாதானத்தை "தொடர்ந்து" காண்பிக்கப்பட்ட பாதையில் சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை அணிந்தால் மட்டுமே இந்த சமாதானம் நம்மை தேடிவரும். இந்த சமாதானம் தேவனோடு நெருங்கிய ஐக்கியம் கொள்வதின் மூலம் நேரடியாக கிடைக்கும் பலனாகும். இந்த சமாதானமானது தன்னுடைய கண்ணீரின் மூலம் மகிழ்ச்சியாக நம்முடைய மகிமையான எதிர்காலத்தின் நம்பிக்கைகளை எதிர்பார்த்திருக்கும். (Reprints,p .5432 காண்க) நாம் சமாதானத்தின் பாதரட்சையை அணிவதின் நிமித்தம் நம்முடைய வாழ்க்கையில் கிடைக்கும் பலன் - "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர்4:7)

இது உண்மையானது என்று நாம் அறிந்திருக்கிறோம், ஏனென்றால், நம்முடைய எஜமானும், இரட்சிப்பின் அதிபதியுமானவர் "என் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்" (யோவான் 14 :27) என்று வாக்களித்திருக்கிறார்.

## தேவனுடைய வார்த்தை

# பட்டயத்தை எடுப்பது



".....தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்."- எபேசியர் 6:17

Peter Karavas

எபேசியர் 6 : 10 - 18 வசனங்களில் தேவனுடைய சர்வாயுதங்களை பற்றி விவரிக்கப்பட்டிருப்பதில், ஆவியின் பட்டயமும் ஒரு பகுதியாகும். இதை "தேவனுடைய வார்த்தை" என்று17 ஆம் வசனம் விவரிக்கிறது. சுருக்கமாக, ஆவியின் பட்டயம் என்பது பரிசுத்த ஆவியால் நமக்கு வெளிப்படுத்தும் தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியமே.

பரிசுத்த ஆவியும், தேவனுடைய வார்த்தையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள விளக்குத் தண்டுகளிலிருக்கும் எண்ணை, பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துவதை நமக்கு நினைப்பூட்டுகிறது. இவை இரண்டும் ஒருமித்து செயல்பட்டு, பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்போருக்கு வெளிச்சம் வீசுகிறது. (11கொரிந்தியர் 5:17) தேவனுடைய வார்த்தைகளின் பொருளை வெளிப்படுத்த பரிசுத்த ஆவி உதவி செய்கிறது -"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."(சங்கீதம் 119 : 105) எண்ணெய் எவ்வாறு விளக்கை எரியச் செய்கிறதோ, அதேபோல், பரிசுத்த ஆவி வேத வசனங்களை பிரகாசிக்கச் செய்கிறது. கடைசியாக, ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள தூப பீடம், இயேசு மற்றும் பரிசுத்தவான்களின் ஜெபங்களை சித்தரிக்கிறது. (வெளி 5:8, 8:3)தேவனுடைய சர்வாயுதங்களை அணிந்த பின் கடைசியாக அவைகளை முழுமைப்படுத்துவது ஜெபம் என்று எபேசியர் 6 :18 ஆம் வசனம் குறிப்பிடுகிறது. தேவனுடைய வார்த்தை, பரிசுத்த ஆவி, மற்றும் ஜெபம் - இம்மூன்றும், சுவிசேஷ யுகத்தில் புது சிருஷ்டிகளின் வளர்ச்சிக்கான கருவிகளாக இருக்கிறது.

### சர்வாயுதங்களை அணிதல்

"....... ஆகையால் அந்தகாரத்தின்கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, **ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.**" (ரோமர் 13 :12) தேவனுடைய சர்வாயுதங்களை முழுமையாகவும் சரியாகவும் அணிந்தால் மட்டுமே எதிரியின் திடீர் தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்க முடியும். ஆண்டவரின் மகத்தான சர்வாயுதங்களிலும், வீசும் ஒளியோடு (அவருடைய வார்த்தை அதாவது வேதாகமம்) நாம் அணியவேண்டும். ஆனால் இந்த சர்வாயுதங்களை அணியவும், பயன்படுத்தவும் கற்றுக்கொள்ள கொஞ்சக் காலம் தேவைப்படுகிறது. நாம் தனித்திருப்பதில்லை, நாம் ஒருவருக்கொருவர் அன்பின் அடிப்படையில், இந்த ஆயுதங்களை தரித்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும்.

சில தேவ பிள்ளைகள் இந்த உலகத்திற்குரிய வைகளுக்காக அதிக அளவில் காலத்தையும், திறமைகளையும் செலவழித்துவிட்டு தேவனுடைய வார்த்தைகளை (ஆவியின்பட்டயம்) படிக்கத் தவறி அதை புறக்கணித்ததால் தேவனுடைய சர்வாயுதங்களை அணிய வாய்ப்பு பெறுவதில்லை. அவருடைய வார்த்தையின் ஞானத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவைகளின் பாடங்களை நடைமுறைப் படுத்துவதால், புது சிருஷ்டியானது எந்த விதமான சோதனைகளையும், தைரியத்தோடு மேற்கொண்டு, சத்தியத்தினால் தம்மை பாதுகாத்து கொள்ளும்.

தேவனுடைய சர்வாயுதங்களின் ஒவ்வொரு பகுதியிலும் சத்தியம் (ஒளி) வெளிப்படவேண்டும் என்பதை பொருள் கொள்ளும்படியாக "ஒளியின் ஆயுதத்தை தரித்துகொள்ளுங்கள்" என்று பவுல் நமக்கு எச்சரிக்கிறார். சத்தியம் இல்லாத நம்முடைய விசுவாசம் (கேடயம்), நீதி (மார்க்கவசம்), இரட்சிப்பின் நம்பிக்கை (தலைச்சீரா), சுவிசேஷம் (பாதரட்சை) மற்றும் ஊழியம் (கட்சை) அனைத்தும் தவறுகளின் அடிப்படையை கொண்டிருக்கும். இந்த சூழ்நிலையில் நமக்கு ஆபத்து வரும்பொழுது நம்முடைய சர்வாயுதங்கள் நம்மை முழுமையாக பாதுகாக்க முடியாது.

ஒவ்வொரு நாளும், தேவனுடைய வார்த்தைகளை வாசித்து நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தும் பொழுது ஒவ்வொரு நாளும், அவருடைய ஆயுதங்களை நாம் அணிந்து கொள்கிறோம். உதாரணமாக, விசுவாசத்தினால் தாவீது கோலியாத்தை யுத்தக்களத்தில் சந்தித்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். மனித நிலையை பார்க்கும் பொழுது தாவீது யுத்தத்தை ஜெயிக்க எந்த விதமான வாய்ப்பும் இல்லை. (1சாமுயேல் 17:24) ஆகவே மனித உடமைகளுக்கும் பதவிக்கும் எந்த விதமான நஷ்டம்

ஏற்பட்டாலும், விசுவாசத்தோடு தேவனுடைய சித்ததை தொடர்ந்து செய்தால், இராட்சதரை போலிருக்கும் தடைகளும் நீங்கிவிடும் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு ஏற்ற பாடமாக அமைகிறது. இப்படியாக நாம் விசுவாசத்தின் கேடயத்தை அணிந்து கொள்கிறோம். மற்றொரு எடுத்துகாட்டை பார்க்கலாம் - தானியேலின் விரோதிகள் அவரை குற்றவாளி என்று தீர்க்க அவரிடத்தில் எந்த விதமான குற்றத்தையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. (தானியேல் 6 :4,5) நாம் பூமிக்குரிய லாபங்களை இழந்தாலும் நம்முடைய எல்லா கிரியைகளிலும், நீதியிலும், நேர்மையாக இருக்கவேண்டும் என்ற பாடத்தை கற்றுகொள்கிறோம். இப்படியாக நாம் நீதியின் மார்க்கவசத்தை தரித்துக் கொள்கிறோம்.

ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவனுடைய சர்வாயுதத்தை தரிக்கும் போதும், சத்தியமாகிய பட்டயம் அதை சரியாக அணிவதற்கான கோட்பாடுகளை அறிவித்து, நம்மை கிறிஸ்துவின் வழி நடக்க உதவிசெய்கிறது.

## ஆவியின் பட்டயத்தை பயன்படுத்துவது எப்படி?

தேவனுடைய சர்வாயுதங்கள் பெரும்பாலும் தற்பாதுகாப்புக்காக பயன்படுத்தப்பட்டாலும், ஆவியின் பட்டயமானது சத்தியத்தை கற்றுக்கொடுக்கவும், சத்தியத்திற்கு எதிராக உள்ள தவறுகளை வெட்டி களையவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த பட்டயத்தை சிறந்த முறையில் பயன்படுத்த ஒரு போர் வீரனுக்கு முறையான பயிற்சி தேவைப்படுகிறது. புது சிருஷ்டியானது மிக வாஞ்சையோடு தேவ வசனங்களை தேடி ஆராயும் போது, தங்களை தற்காத்துக் கொள்ளவும், மற்றவர்களை பாதுகாத்துகொள்ளவும் இந்த பட்டயத்தை பயன்படுத்த திறமையாக கற்றுக்கொள்கிறது. இவ்விதமாக தவறுகளிலிருந்து நாம் பாதுகாக்கப்பட்ட பட்டயத்தை, எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதை கற்றுக் கொள்ளலாம்.

எந்த சூழ்நிலையிலும், நாம் வெட்கப்பட்டோ, சத்தியத்தை தழுவுவதற்கு தயங்கியோ நம்முடைய பட்டயத்தை பதுக்கி வைத்து பின்வாங்காமல் இருக்கவேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட சத்தியத்திற்கு தேவனே ஆசிரியராக இருக்கிறார். ஆயினும்,அன்பினால் இந்த சத்தியத்தை அறிவித்தால் மட்டுமே தேவனுடைய வார்த்தைகளை கையாளுபவர்கள், தங்களையோ அல்லது மற்றவர்களையோ காயப்படுத்தக்கூடிய அபாயத்திலிருந்து தப்பலாம். சத்தியம் தன்னுடைய பாதையில் செல்ல, எந்த விதமான இரக்கமற்ற முறைகளையும் பயன்படுத்துவதில்லை. சத்தியம் தேவையான இடங்களில் தேவையற்ற காரியங்களை தரித்து எறிவதினால், அந்த வேலைகளை நாம் செய்யவேண்டிய அவசியமுமில்லை.

தேவனுடைய வார்தையானது சத்தியத்தோடு, உபதேசங்கள், தீர்க்கதரிசனம், தேவனுடைய ஊழியம் மற்றும் கிறிஸ்துவின் குணலட்சனங்களுக்கான வளர்ச்சியை நமக்கு போதித்து கற்றுக் கொடுக்கிறது. புது சிருஷ்டி சத்தியத்தை மேற்கூறியவைகளோடு இணைத்து பேசுகையில் அநேகர் ஆசீர்வதிக்கப் படதக்கதாக ஆவியின் பட்டயம் அறிவை புகட்டி வழிநடத்துகிறது. ஆகவே நாம் எந்த தீர்க்கதரிசனத்தையும் அடிப்படை சத்தியத்தையும், அதற்குள் இருக்கும் கிறிஸ்துவின் குணலட்சனத்தின் வளர்ச்சிக்கு தக்க வளர்ச்சி அடையும் பாடங்களை இணைத்து படிக்கவேண்டும். தீர்க்கதரிசனங்களுக்கும், உபதேசங்களுக்கும் தேவனே நூலாசிரியராக இருக்கிறார். எடுத்துகாட்டாக - நீதிமானாக்கப்பட்ட நிலை, நல்லொழுக்கமுள்ள நீதியில் வாழக் கற்றுக் கொடுக்கிறது. பலியின் ஊழியத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு ஆச்சரியமாக வளர்ச்சி அடையச் செய்கிறது, மற்றும் புறஜாதியின் காலம் நிறைவு பெற்றவுடன் கருணையுள்ள தேவன் இஸ்ரயேலின் பாவங்களை மன்னித்து, அவர்களின் குருட்டாட்டத்தை முற்றிலுமாக அகற்றுவார் என்பதை காட்டுகிறது....

"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.." (எபேசியர் 4 :15) என்று பவுல் குறிப்பிடுகிறார். நாம் மனித இயல்புகளை எதிர்த்து போராட வேண்டும். இதை குறித்து பவுல் சொல்லும் பொழுது - "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்." என்கிறார். (எபேசியர் 4 : 29) ஆகவே நாம் பேசுவதற்கு முன், கேட்போருக்கு நம்முடைய வார்த்தைகள் கிருபைபொருந்தியதாயும், அறிவை புகட்டக்கூடியதாகவும் இருக்கிறதா என்று நமக்குள் கேள்வியை எழுப்பவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டு பவுல் எழுதும் பொழுது -"ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோன்னிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்க வைகளையும் நாடக்கடவோம். (ரோமர் 14 :19) என்று எழுதியிருக்கிறார்.

சில காரியங்கள் உண்மையாக இருந்தாலும், அதை பற்றி நாம் கட்டயாமாக பேச வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு சகோதரனுக்கு எதிராக ஒரு பிரச்சனை சொல்லப்பட்டு, அது உண்மையாக இருந்தாலும், "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள், சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான், நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயதிபதியாயிருப்பாய். " (யாக்கோபு 4 :11) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை பாதுகாக்கவும், வழிநடத்துவதற்காக மட்டுமே கடிந்து கொள்கிறார்களே தவிர அவர்களை காயப்படுத்துவதற்காக அல்ல. நம்முடைய சகோதரன் ஆபத்தில் இருக்கும்பொழுது, "அன்புடன் சத்தியத்தை பேசி" ஆவிக்குரிய வகையில் அவர்களை ஊக்குவிக்க நாம் உந்தப்படுவோம். இதே போல் ஒரு சமயத்தில், பவுல் ஒரு காரியத்தை குறித்து மிகவும் புலம்பினார் -" நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ ? " (கலாத்தியர் 4:16) இப்படிப்பட்ட வார்த்தைகளை, வெகு ஜாக்கிரதையோடு ஆழமாக சிந்தித்து, ஜெபத்தோடு நன்மையான பின் விளைவுகளையும் அல்லது தீமையான பின் விளைவுகளையும், நிறுத்து பார்த்து அதற்கு பின் பேச வேண்டும். நம்முடைய வார்த்தைகளினால் ஏற்பட்ட நஷ்டங்களை நாம் திரும்ப ஈடு கொடுக்க முடியாது மற்றும் முன் கூட்டியே எதிர்பார்த்ததை விட பின் விளைவுகள் அதிகமாகவும் இருக்கலாம்.

சத்தியத்தை அன்பாக போதிப்பதை விட, எடுத்துகாட்டுகளின் மூலம் கற்று கொடுப்பது உத்தமம். இயேசு - " இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது " (மத்தேயு 5 :16) என்றார். மூப்பர்கள் நியாயமாக எச்சரிக்கப்படுகிறார்கள். "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்." (1பேதுரு 5 :2,3) நாம் அனைவரும் இவைகளையே செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறோம்.

ஆவியின் பட்டயத்தை மிகத் திறமையாகவும், எச்சரிப்போடும் கையாளுவதற்கு ஓர் சிறந்த எடுத்துகாட்டு - அப்போஸ்தலனாகிய பவுல். தன்னுடைய செய்தியை பாராட்டத்தக்கதாக மற்றவர்களோடு இசைவாய் பேசி, தொடர்பு கொள்வது எப்படி என்று நன்கு அறிந்திருந்தார். அவர் "பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன், எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்." (1கொரிந்தியர் 9 : 22) என்றெழுதினார். பவுலின் திறமைவாய்ந்த பேச்சானது - " அகரிப்பா பவுலை நோக்கி - நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான். " (அப்போஸ்தலர் 26:28 ) அந்த இராஜாவை மனமாறத் தூண்டியது.

ஆவியின் பட்டயத்தை மிகத் திறமையாக பயன்படுத்திய எடுத்துகாட்டுகள் நம்முடைய வேதாகமத்தில் நிறைய உண்டு. சிந்திக்கும் பாவிகளுக்கு, தங்களை குற்றவாளிகள் என்று தீர்க்கப்படுவதைக் காட்டிலும் நம்பிக்கையை அதிகமாக கொடுத்தது. அபிகாயேலின் தாழ்மை மற்றும் வருத்தம் தெரிவித்த வார்த்தைகள் தாவீதின் கோபத்தை தனித்தது. (1சாமுயேல் 25) பிலிப்பு அந்நியனான எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷத்தை திறமையாக பிரசங்கித்து அவருக்கு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் கொடுத்தார். (அப்போஸ்தலர் 8:26 -40) இதுபோல் நாமும் ஆவியின் பட்டயத்தை திறமையாய் பயன்படுத்துவோமாக

**எபிரெயர் 4:12 - தேவனுடைய வார்த்தை**

ஆவியின் பட்டயத்திற்குள் மறைந்திருக்கும் சிறப்பான அர்த்தத்தை நாம் புரிந்துகொள்வதற்காக கொடுக்கப்பட்ட வேத பகுதியாக இருக்கிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபிரெயர் 4:12)

இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமையின் நிமித்தமாக தேவனுடைய இளைபாருதலுக்குள் பிரவேசிக்கவில்லை என்பதை காட்டுகிறது. ஆயினும், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கீழ்படிவதன் மூலமாக நாம் இப்பொழுது அந்த இளைப்பாருதலுக்குள் பிரவேசிக்கலாம் என்பதை

இந்த வசனப்பகுதியில், பட்டயம் அதற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

Amplified மொழிபெயர்ப்பு - எபிரெயர் 4 : 12 - " தேவன் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஜீவன் மற்றும் முழு வல்லமையும் உள்ளது. (சுறுசுறுப்புள்ளதாயும், வலிமைமிக்கதும், ஆற்றலுடையதும், நடைமுறைப் படுத்துவதும், பயனுள்ளதாயும் இருக்கிறது)" என்று எழுதியிருக்கிறது தேவனுடைய வார்த்தையானது ஜீவனுள்ளது மற்றும் வல்லமையுள்ளது என்றால் - நம்முடைய இருதயத்தையும் சிந்தையையும், விசுவாசத்தின் கிரியைகளுக்கு உட்படுத்தி, கீழ்படிதல் மற்றும் ஊழியத்தில் சிறப்பாக செயலாற்ற நமக்கு ஊக்கமளித்து, தேவனுடைய இளைப்பாருதலில் வெற்றிகரமாக பிரவேசிக்க செய்வதாகும்.

ஆனால் சகல ஞானம் பெற்றிருந்தாலும், அன்பில்லாமல் ஒரு பயனும் இல்லை என்று 1கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கையில் நன்மை பெற, ஞானமானது நம்முடைய இருதயத்தையும், சிந்தையையும் உருமாற்றவேண்டும். தேவனை போல் குணலட்சனங்களை நாம் அன்றாட வாழ்க்கையில் அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கை அறியாமல், அடிப்படை சத்தியம் மற்றும் தீர்க்கதரிசனத்தை மட்டுமே அநேகர் கற்றுகொண்டிருக் கிறார்கள். தேவனுடைய வார்த்தையில் பதிவாயிருக்கும் உபதேசங்களும், தீர்க்கதரிசனங்களும், தேவனுடைய உள்ளான சிந்தையையும், இருதயத்தின் நோக்கத்தையும் தெளிவாக எடுத்துகாட்கிறது. இவைகளைக் காணும் நாம் நம்முடைய வாழ்க்கையில் இவரைப்போல் மாற அன்றாட முயற்சி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## இருபுறம் கருக்குள்ள பட்டயம்

தேவனுடைய வார்த்தைகளின் கோட்பாடுகளை நம்முடைய வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதற்கும், மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதினாலும் இந்த பட்டயம் "இருபுறம் கருக்குள்ளது" என்று விவரிக்கப்படுகிறது. கூடுதலாக, தேவனுடைய வார்த்தை பாவங்களை கண்டித்து உணர்த்துவதற்கும் பயன்படுகிறது.

தேவனுடைய வார்த்தை "....... ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."என்று விவரிக்கப் படுகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால், தேவனுடைய வார்த்தைகளை புரிந்துகொள்ளும்பொழுது, புதுசிருஷ்டியானது, உலகத்தின் ஞானத்திற்கும், தேவனுடைய ஞானத்திற்கும் உள்ள வேறுபாடுகளை புரிந்துகொள்ளும். மாம்சம் மற்றும் ஆவிக்குரிய எதிர்பார்ப்புகள், விருப்பம், செயல்பாடுகளில் உள்ள வித்தியாசங்களை நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ளலாம். பவுல் இதற்கான விளக்கத்தை எழுதும் பொழுது - "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான் ? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்." (1கொரிந்தியர் 2:11,12) என்றெழுதினார்.

## இருதயத்தின் உள்நோக்கம் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது

எபிரெயர் 4 :12 ஆம் வசனத்தில், "இருபுறமும் கருக்குள்ள பட்டயம்" எவ்வாறு வேலை செய்கிறது என்று வெவ்வேறு மொழிபெயர்ப்பு பதிவுகளை நாம் வாசித்து அறியலாம் -

☆ இருதயத்தின் ஒவ்வொரு சிந்தையையும், நோக்கத்தையும் விரிவாக்கி,நுட்பமாய் ஆராய்ந்து நியாயந்தீர்ப்பதாகும். (Amplified )

☆ இருதயத்தின் தூண்டுதல்களையும், அதில் வகுக்கப்படும் திட்டங்களை நியாயந்தீர்ப்பதாகும். (Rotherham )

☆ இருதயத்தின் இரகசியமான சிந்தைகளையும் நோக்கங்களையும் பகுத்தறிவதாகும். ( Weymouth)

☆ தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து, வாசிப்பதன் மூலம் தேவனுடைய நீதியின் தரம் என்னவென்றும் நாம் அறிந்து கொண்டு நம்முடைய நோக்கத்திலும், கிரியைகளிலும், நன்மை எது தீமை எது என்று சீர்த்தூக்கி பார்க்கும் அறிவைப் பெறுகிறோம். இதனால் தேவனுடைய நீதிக்கேற்ப நம்முடைய நன்மையான காரியங்களில் வளர்ச்சி அடையவும், அவருடைய நீதிக்கு முரண்பாடானவைகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து களைந்து போடவும் பயன்படுகிறது. மொத்தத்தில் நாம் வளர்ச்சி அடைய வேண்டிய அளவிற்கு நாம் இன்னும் எவ்வளவு குறைவாக இருக்கிறோம் என்பதை சரியாக சுட்டி காட்டுகிறது. இதனால், தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்தின் ஒவ்வொரு நோக்கத்தையும், சிந்தையையும், சீர்த்தூக்கி, நியாயமாக சோதித்து, நம்முடைய கிரியைகளையும், சிந்தையையும் நல்வழிப்படுத்துகிறது.

ஆவியின் பட்டயத்தை பயன்படுத்தும் முக்கியத்துவத்தை நாம் அதிகமாக வலியுறுத்தி நம்முடைய இருதயத்தின் நோக்கத்ததையோ, எண்ணத்தையோ, நியாயம் விசாரிக்க முடியாது. சகோ. ரசல் எழுதியது போல - "ஆண்டவருக்கு விசுவாசமுள்ள இருதயம் என்றால், எல்லா நல்ல குணங்களையும் நம்முடைய வாழ்க்கையில், சிந்தையிலும், இருதயத்தின் நோக்கத்திலும், தெய்வீக சித்தத்திற்கு ஒப்புகொடுக்க தொடர்ந்து முயற்சிப்பதாகும். "( vol.6,p136)

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.." (எரேமியா 17:9, நீதிமொழிகள் 4 :23) என்ற வசனங்களை நினைவில் கொண்ட நாம் நம்மையே சோதித்து அறியும்படி வசனங்கள் எச்சரிக்கிறது.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து........"(1கொரிந்தியர்11:28) "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம்." (1கொரிந்தியர் 11:31)

* "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள், உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்...."(11கொரிந்தியர் 13 :5)

இயேசுவை மறுதலித்தபின், அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னைத் தான் ஆராய்ந்து பார்ப்பதற்குரிய காலத்தின் அனுபவத்தை பெற்றார். இதன் விளைவாக அவருடைய நடத்தையில் ஒரு மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு, தைரியத்தோடு ஆலோசனை சங்கத்தில் நின்று இயேசுவை பற்றி பிரசங்கிக்காமல் இருக்க முற்றிலுமாக மறுதலித்தார். (அப்போஸ்தலர் 4) சுய - பரிசோதனைக்குரிய காலங்களை நாம் கடக்கையில், நம்முடைய சிந்தை, எண்ணம், நடக்கைத்தை அனைத்தும் புதுசிருஷ்டிகளாக தொடர்ந்து உருமாறுவதற்கு வழி நடப்பதே அதன் பலனால் இருக்கவேண்டும். (ரோமர் 12:2)

ஆவியின் பட்டயமானது, நம்முடைய இருதயத்தின் நோக்கங்களை நியாயந்தீர்ப்பது மாத்திரம் அல்ல. ஆனால் அந்த சத்தியம் அதற்கேற்றபடி மனித சிந்தையும், இருதயத்தின் நோக்கமும் எவ்வாறு செயல்படுகிறது என்றும் வெளிப்படுத்துகிறது

## சத்தியத்தின் அரிவாள்

"பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்."(வெளி 14 :14)

அரிவாள் அறுவடைக்கு பயன்படுத்தப்படும் ஒரு கருவி. அது வளைந்த பட்டயம் போலிருக்கும். அடையாளமாக இந்த அரிவாள், ஆவியின் பட்டயத்தை போல சத்தியத்தையே குறிப்பிடுகிறது. சுவிசேஷ யுக அறுவடையின் போது சத்தியமானது சுவிசேஷ யுகத்தின் முடிவில், கோதுமை மணிகளையும் (உண்மையான கிறிஸ்தவர்கள்), களைகளையும் (போலி கிறிஸ்தவர்கள் ) (மத்தேயு 13:39,40) பிரிவுக்குண்டான வேலைகளைச் செய்கிறது. யூத அறுவடையின் போது, இயேசு தூற்றுக்கூடையை கையில் பிடித்திருப்பதாக விவரிக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 3:12) அறுவடை செய்த கோதுமையை காற்றில் தூற்றுவதற்கு இந்த தூற்றுக்கூடை பயன்படுத்தப்பட்டது. பதரை காற்று அடித்து சென்றது. அரிவாளையும் தூற்று கூடையும் போல, பட்டயமும் சபையின் ஆதிகாலத்தில் யூத அறுவடையில் கிறிஸ்தவர்களையும் (கோதுமை) பேர் கிறிஸ்தவர்களையும் பிறப்பதற்கு பயன்பட்டது.

## அறுவடையில் போர் நடவடிக்கை

இரண்டாம் உலக போரில் நடந்தது போல இன்று இந்த சுவிசேஷ யுகத்தில் அநேக யுத்தங்கள் நடந்து வருகிறது. அதற்குரிய தலைவர்கள், தூதர்கள் மற்றும் யுத்தத்திற்கு தேவையானவைகளை சேகரிப்பதற்கும், போர்க்கலைகளை கற்றுக்கொடுப்பதற்கும் தனித் தனி ஆட்களும் இருக்கிறார்கள். (வெளி 2, 3 அதிகாரங்களை காண்க) நாம் யுத்தங்களின் கடைசி நாட்களில் இருப்பதை புரிந்துகொண்டு, சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் லவோதிக்கேய சபையானது, தனித்து யுத்தம் புரிந்து, ஜெபிப்பது மிக அவசியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஏனெனில் இது நாம் செய்யவேண்டிய காரியங்களுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றுகிறது. (வெளி 3:14 - 22)

## சோதனை கால வஞ்சனைகள்

வெளி 3 :10 -" என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்." என்று குறிப்பிடுகிறது.

"கடைசி மணி நேர சோதனையை சந்திக்காதபடி ஆறாம் சபையான பிலதெல்பியா விட்டுவிடப்பட்டது. ஆனால் நாம் அதிலிருந்து தப்பிபோவதில்லை. இந்த "சோதனையின் காலத்தில் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கதக்க சாத்தான் அவர்களை தவறாக வழிநடத்துவான். "ஏனெனில்,

கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்." (மத்தேயு 24 : 24)

நாம் வெளி வரவேண்டிய பாபிலோனின் அதாவது "அவளின் பாவங்களில் பங்கெடுப்பவர்கள்" பொய் மத அமைப்புகளிலிருந்து இந்த வஞ்சகங்கள் வருகிறது. (வெளி 18 :4) இவைகளின் பாதிப்புகளினால் நம்முடைய சகோதர ஐக்கியத்திற்குள் நுழைய வாய்ப்புகள் உண்டு. மேலும் இயேசு இதை குறித்து திரும்பி பார்த்த லோத்தின் மனைவியைப் போல, நாம் விட்டு வந்த அமைப்புகளை திரும்பி பார்க்கக்கூடாது என்று இயேசு இதை குறித்து ஒரு எடுத்துகாட்டின் மூலம் எச்சரிக்கிறார். (லூக்கா 17 :32)

இந்த அறுவடையில் நம்மை ஏமாற்றக்கூடிய வஞ்சகங்களை பற்றி சகோதரர் ரசல் விவரிக்கிறார் -

> "தேவ ஆவியால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் இந்த யுகத்தின் முடிவை பற்றி குறிப்பிடும் போது சாத்தான் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்துகொள்வான் என்றும் ..." வல்லமையான அடையாளங்களும், பொய்யான அற்புதங்களையும், இந்த யுகத்தின் அறுவடைக்கான சோதனை களாகும். (11தெசலோனிகேயர் 2:9 -12) - vol 6,pp. 638, 639

"உண்மையில் இந்த முடிவு காலத்தில் - புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறந்தவர்களாய், முடிவு காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை உணரும் ஒவ்வொருவரும் முன்அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு காரியமும் நிறைவேறிக்கொண்டிருப்பதை காணவேண்டும். ஆகையால் கிறிஸ்தவ மண்டலத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் செயலாற்றிகொண்டிருக்கும் அற்புதங்கள் அடையாளங்கள் மற்றும் கவர்ச்சிகரமான ஏமாற்றக்கூடிய உபதேசங்களை, நாம் அடையாளம் கண்டுகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்." - vol 6,p .639

"நூற்றுக்கணக்கான விசுவாச அறிக்கைளும், பொய் போதகங்கள் கொண்ட அமைப்புகள் மற்றும், பெருகிக்கொண்டிருக்கும் தவறுகள், வஞ்சகங்களை நாம் இப்பொழுது கண்டுகொண்டிருக்கிறோம். உண்மையான விசுவாசத்தில் இருக்கும் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் ஏமாற்றத்தக்கதான காரியங்கள் நடந்துகொண்டிருக்கிறது. (மத்தேயு24:24)" -What Pastor Russell Said,p.775.

### விடுவிக்கக்கூடிய ஆவியின் பட்டயம்

- கடைசிக் காலத்தில் சோதனையின் போது இயேசு விடுதலையளிக்கிறார். "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்."(மத்தேயு 24: 28) அறுவடையின் சத்தியங்களை சூழ, வந்து நிற்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிச்சயமாக இந்த பேர் சபைகளின் பொய் போதகங்களினால் வஞ்சிக்கப் படமாட்டார்கள். தவறான போதனைகளை ஆராய்ந்து கண்டறிய நாம் ஆவியின் பட்டயத்தை பயன்படுத்தி இந்த வஞ்சகமான போதனைகளை வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏற்ற கால ஆகாரம் என்பது ஆவியின் பட்டயமாகிய அதே சத்தியமாக இருக்கிறது, ஆனால் இது சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் லவோகோக்கிய சபையின் காலத்தில், விசேஷமாக நம்முடைய நிகழ் காலத்தின் யுத்தங்களுக்குரிய அறிகுறிக்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

### பரலோகத்தில் போர் நடவடிக்கை

ஆவிக்குரிய யுத்தங்கள் சுவிசேஷயுகம் முழுவதும் நடந்து வந்தாலும், இந்த அறுவடையின் போது இந்த யுத்தம் முடிவையும். " பின்பு பரலேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன், அது - கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது, அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள், அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம், ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று"(வெளி 14 :13)

"இது முதல்" சுவிசேஷ யுக அறுவடை துவங்குகிறது என்பதை அடுத்த வசனம் குறிப்பிடுகிறது. (வெளி 14 :14)இந்த அறுவடையானது 1874 ஆம் வருடம் துவங்கியது, இந்த வருடத்திற்கு பின் கிறிஸ்துவுக்குள் மரித்த ஒவ்வொருவரின் "வேலைகளும் அவர்களை தொடரும்" திரையின் இருப்பக்கத்திலும் அறுவடையாளர்கள் சத்தியமாகிய அரிவாளை (பட்டயம்) பயன்படுத்தி கோதுமையை களஞ்சியத்தில் சேர்த்து, களைகளை எரிப்பதற்கு கட்டுகளாக கட்டப்படுகிறது. (மத்தேயு 13 : 30, 41) யூத அறுவடையின் போது, ஆதிகால சபையில் சகோதரர் ஒருமித்திருந்ததுபோல, இன்று ஐக்கியப்பட்டிருக்கும் சபை மக்களை களஞ்சியம்

குறிப்பிடுகிறது. கடைசியாக பரலோகத்தில் சபையின் ஐக்கியத்தையும் இது சித்தரிக்கிறது. தவறான போதனைகளின் அடிப்படையில், கட்டுகளாக இறுக கட்டப்பட்டிருக்கும், குழப்பமுள்ள மத அமைப்பு களிலிருந்து வரும் ஈர்க்கக்கூடிய காரியங்களிலிருந்து காத்துகொள்ள சத்தியத்திற்கு அதிக வல்லமை உண்டு.

பரிசுத்தவான்கள் அனைவரும் தங்களுடைய பூமிக்குரிய பணியை முடித்ததைபற்றி வெளி 19 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இவர்கள் பரலோகத்தின் சேனைகள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். "பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன், இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமு முள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன, அவருக்கேயன்றி வேறொருவருக்குந்தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார், அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவாகளாய்,வெள்ளைக்குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார் அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். " (வெளி 19 :11 -15)


பொய்கள், வஞ்சகங்கள் மற்றும் தவறுகளை எதிர்த்து செயல்பட சத்தியத்தின் பட்டயமே திரைக்கு இப்புறத்தில் நம்முடைய ஆயுதமாக பயன்படுகிறது. மேலும், திரைக்கு அப்புறத்தில் இன்னும் மேன்மையான நிலையில், பரலோகத்தில் உள்ள சேனை தொடர்ந்து இவ்வேலைகளை செய்து கொண்டிருக்கிறது. அந்தக் காலம், நிறைவடையும் போது ஒருவரும் பார்வையற்றவராகவும், பொய்களினாலும் தவறுகளினாலும், வஞ்சகங்களினாலும் குழப்பப்படுவதில்லை. இன்றைய நாளிலும், இந்த வேலையில் துவக்க நிலைகளை காணலாம். சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஆளுனர்கள், வணிகம், சபை அமைப்புகள் அனைத்தும் உண்மையில் என்ன என்பது அனைவரும் அறிந்ததே. அதிகதிகமாக, பேரரசர்கள் நிர்வாணமாக( அந்தரங்கள் அனைத்தும் வெளியரங்கமாயிருக்கிறது ) இருப்பதை மக்கள் காணமுடிகிறது. "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமஎரிந்து அழிந்துபோம்." (II பேதுரு 3 :10)

## சத்தியத்தை ஒவ்வொருவரும் கற்றுக் கொள்வார்கள்.

வருங்காலத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியில், ஆவியின் பட்டயம் சுவிசேஷ யுக வேலைகளை நிறைவு செய்வதால், கிறிஸ்தவர்களின் போர் முடிவுக்கு வந்துவிடும். எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு சத்தியத்தின் அறிவு பூமி எங்கும் பரவும். ".. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.... "(ஏசாயா 11:9), "...செவிடர் ..கேட்பார்கள், குருடரின் கண்கள் ...பார்வையடையும் வழுவிப்போகிற மனதை உடையவர்கள் புத்திமான்களாகி, முறுமுறுக்கிறவர்கள் உபதேசம் கற்றுக்கொள்ளுவார்கள்."(ஏசாயா 29 :18, 24)". திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."(மீகா 4:2)

## நாம் யுத்தத்தை ஜெயிக்கலாம்

இதற்கு இடையில் நாம் போரிட வேண்டிய யுத்தம் ஒன்று உண்டு .மனித நிலையிலிருந்து பார்க்கும் போது வெற்றி அடைய முடியாதபடி தோன்றலாம், ஆனால் "தேவனால் எல்லாம் கூடும்" (மாற் 10 :27) என்று நாம் அறிவோம். நாம் இந்த யுத்தத்தில் ஜெயிப்பதற்கு தேவையான ஆயுதங்களை நமக்கு தந்திருக்கிறார். "நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ள வைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." (11கொரிந்தியர் 10 : 3- 5)



# விசுவாசத்தை காத்துக்கொள்வது

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." (11தீமோத்தேயு **4:**7)

**Carl Hagensick**

**பா**ஸ்டோரல் பைபிள் சொசைட்டி சார்பாக கலந்துரையாடலை நடத்திய டாவிஸ் ஸ்மைலி தன்னுடைய நிகழ்ச்சியை பின்வரும் மூன்று வார்த்தைகளை சொல்லி முடிப்பது வழக்கமாயிருந்தது " விசுவாசத்தை காத்துகொள்ளுங்கள்." விசுவாசம் வைப்பது வேறு, அந்த விசுவாசத்தை காத்துகொள்வது என்பது வேறு.விசுவாசத்தை காத்துகொள்வது என்பது அதை உறுதியாக பற்றியிருப்பது மாத்திரம் அல்ல, அதற்கு கீழ்ப்படிந்து, விசுவாசமுள்ள வாழ்க்கையை வாழ்வதாகும்.

### சமமற்ற யுத்தம்

இந்த பிரதியில் விவரிக்கப்பட்ட போராட்டம் (எபேசியர் 6:11-17) ஒரு சமமானது அல்ல. கிறிஸ்துவப்போர் வீரன் பட்டயத்தோடும், அருகாமையில் இருக்கும் எதிராளியோடு போர் புரிவதற்கேற்ற வடிவமைக்கப்பட்ட கருவிகளோடு போர் புரிந்துகொண்டிருக்கிறான். ஆனால், எதிராளியானவன் வெகு தூரத்திலிருந்து , பொறி பறக்கும் ஈட்டிகளை பயன்படுத்தி அவைகளை தூரத்திலிருந்து எய்கிறான். இங்கு பயன்படுத்தப்பட்ட "டார்ட்" என்ற ஆங்கில வார்த்தையை (ஸ்டாரங்க்ஸ் - 956 )அம்பு அல்லது ஈட்டி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இப்படியாக கிறிஸ்துவ எதிராளி வெகு தூரத்திலிருந்து தாக்குகிறான். அதாவது ஒரு கிறிஸ்தவனுடைய பட்டயம் பயனற்று போவத்தக்கதாக எதிராளி வெகு தொலைவிலிருந்து எய்யும் அம்புகளை முறியடிக்க மிகுதியாய் போராட வேண்டியதாகியிருக்கிறது. அதே போல் "பையரி" என்ற ஆங்கில வார்த்தைக்கு எரிதல் என்று பொருள்படுகிறது. (ஸ்டராங்க்ஸ் # 4448) அம்புகள் எய்யப்படும் முன் நெருப்பு பற்றவைக்கப்படுவதையும் கூட இது குறிப்பிடலாம். அல்லது சதையை ஊடுருவி பாய்ந்து கொடூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் விஷ அம்புகளையும் எய்திருக்கலாம்.


மரத்தினால் செய்யப்பட்டு, மிருகங்களின் ரோமங்களால் மூடப்பட்டு, ஒலிவ எண்ணை, பூசப்பட்ட கேடகங்கள், எரியக்கூடிய தன்மை இல்லாததினால், பொறி பறக்கும் அம்புகளை ஓர் அளவுக்கு அவித்துவிடும். அதே போல, நம்முடைய சொந்த சிந்தைகளும், மரத்தை போல, சாத்தானுடைய பொறி பறக்கும் அம்புகளை முழுமையாக அவித்து போட முடியாத அளவிற்கு திராணியற்றதாக இருக்கிறது. ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆதாம், ஏவாளுக்கு தேவன் தோல் உடைகளை உடுத்து வைத்தது போல, மரத்தை போலிருக்கும் விசுவாசத்தை அடிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிருபையாக கொடுக்கப்பட்டுள்ள நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட வேண்டும். அதற்கு பின் இந்த கேடகம் தொடர்ச்சியாக பரிசுத்த ஆவியாகிய எண்ணையினால் அபிஷேகம் பண்ணப்படவேண்டும். இந்த பரிசுத்த ஆவியின் செயல்களை குறித்து தெளிவாக விவரிக்கப்படடுள்ளது - "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோவான் 14:26) இவ்வாறாக சாத்தானின் அக்கினி அஸ்திரங்களை அவித்து போடலாம்.

எப்படி இருந்தாலும், கிறிஸ்தவன் ஒரு பாதகமான நிலையில் இருப்பது தெளிவாகிறது. இந்த சூழ்நிலையில் இவனை முழுமையாக காத்துகொள்வது இந்த கேடகமே. இந்த கேடகத்தை இவன் சரியாக பயன்படுத்த அறிந்திருக்க வேண்டும். பெரும்பான்மையான போர் வீரர்கள் வலது கை பழக்கம் உள்ளவர்களானபடியால், கேடகத்தை இடது கையில் பிடிக்கும் படி வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த இடது கையில் உள்ள கேடகத்தை பயன்படுத்தி, வரும் அம்புகளை துல்லியமாக தடுப்பதற்கு பல மணி நேரங்கள் பயிற்சி மிக அவசியமாயிருக்கிறது.

சரீரம் முழுவதையும் மூடும் கேடகங்கள், படைவரிசையில் நிற்கும் வீரர்களால் பயன்படுத்தப்பட்டது. இந்த கேடகங்களை பிடித்து வரிசையில் நகரும் வீரர்களைப் பார்த்தால் ஒரு சுவரை போல் தோன்றும். முதல் வரிசையில் உள்ள ஒரு வீரன் வீழ்ந்தால் அவனுக்கு பின் இருப்பவன் விழுந்தவனுக்குப் பதிலாக நிற்பான்.

இப்படியாக, அந்த முழு வரிசையும், அணி வகுத்து தொடர்ச்சியாக சம நடை போட்டு நடப்பதை எதிரிகள் காணும் பொழுது எதிராளிகள் இவர்களை விட்டு ஓடிவிடுவார்கள் அல்லது தாங்கள் இருந்த இடத்திற்கு திரும்பிவிடுவார்கள். இந்த ஒரு காரியத்தை பழைய யுத்தம் ஒன்று மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. அங்கு முந்நூறு ஸ்பார்டென் படைவீரர்கள், மலைக்கும் கடலுக்கும் இடையில் நின்ற ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்ட முழு பெர்சிய வீரர்களை விரட்டினார்கள். ரோம வீரர்களைப் பொருத்தவரையில் மேலே இருந்து பொழியும் அம்புகளும் ஈட்டிகளும் இவர்களை காயப்படுத்தாதபடிக்கு பின் வரிசையில் நிற்பவர்கள் தங்களுடைய கேடகங்களை தங்களுடைய தலைக்கு மேலும், முன் வரிசையில் உள்ளவர்களின் தலைக்கு மேலும் பாதுகாப்பாக பிடித்திருப்பார்கள். ஆகவே ஒரு கிறிஸ்துவனுடைய விசுவாசம் முழுமையாக தனித்துவமானது அல்ல, சக கிறிஸ்தவர்களின் விசுவாசத்தையும் சார்ந்தேயிருக்கிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் சரியான விசுவாசத்தை காத்துகொள்ளவது மிக அவசியமாயிருக்கிறது.

### கேடகமும், பட்டயமும்



ஒரு போர் வீரனுக்கு இரண்டு கைகள் உள்ளது. ஒன்று கேடகத்தை பிடிக்க, மற்றொன்று பட்டயத்தை பிடிக்க. இவை இரண்டும் சரியான முறையில் இசைவாக பயன்படுத்தப்படவேண்டும். ஒரு வீரன் தன்னுடைய முழு பலத்தையும் பட்டயத்தை உபயோகிக்க பயன்படுத்திவிட்டு கேடகத்தை தன் அண்டையில் வைக்கும் காட்சியை சற்று உங்கள் கண்களுக்கு முன்பாக கற்பனை செய்து பாருங்கள். எதிராளி வேறொன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. அந்த வீரனுக்கு பின் பாய்ந்து ஒரு அம்பை எய்தால் போதும், அந்த வீரன் மடிந்து விடுவான். மற்றொரு பகுதியில், ஒரு வீரன் கேடகத்தை மட்டும் உறுதியாக பிடித்திருந்தால், நிச்சயமாக அந்த வீரனுக்கு முழு பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே ஒரு போர் வீரனுக்கு தனக்கு முன் வைத்திருக்கும் சத்தியத்தின் மேல் உள்ள விசுவாசமே அவனுக்கு முழு பாதுகாப்பளிக்கிறது.


பெரும்பாலும் வீரர்கள், சந்தேகங்களினால் குழப்பமடைவது வழக்கமாக இருக்கிறது. ஆனால் ஒரு கிறிஸ்தவன் தனக்கு முன் வைத்திருக்கும் விசுவாசத்தின் நிமித்தம் அனைத்து காரியங்களையும் நன்மையாகவே நிருபிக்க இயலாது. ஆனால் அவன் அனைத்தையும் இந்த விசுவாசத்தின் அடிப்படையில் ஏற்று கொண்டால், முழு பாதுகாப்பை பெறுவான்.

### கிறிஸ்தவனுடைய கேடகம்

கேள்விக்கு இடமில்லாதபடி ஒரு கிறிஸ்தவனுடைய கேடகம் அவனுடைய விசுவாசமே. ஆனால் விசுவாசம் என்பது என்ன?

விசுவாசம் ஒரு ஆதாரம் அல்ல. ஆவியின் பட்டயம் ஒரு ஆதாரமாக இருக்கிறது. நேரடியான விளக்கம் அளிக்கும் வசனங்கள் நம்மிடம் இருக்கும் பொழுது, அது அந்த காரியத்திற்கான ஆதாரமாகிறது. ஒரு வேளை நேரடியான வசனங்கள் இல்லாவிட்டால், அதற்கான விளக்கங்கள் மற்ற வசனங்களில் இருக்கலாம் அது சில நேரங்களில் சரியாகவும், சில நேரங்களில் தவறாகவும் இருக்கலாம்.

எப்படியிருந்தாலும், விசுவாசம், ஒரு குத்து மதிப்பான காரியமல்ல. அவநம்பிக்கையில் உள்ள நம்பிக்கையும் அல்ல. விசுவாசம் என்பது அப்போஸ்தலர்கள் எழுத்துக்களை ஆதாரமாக கொண்ட ஒரு உறுதியான நம்பிக்கையாக இருக்கிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."



(எபிரெயர் 11 :1) விசுவாசம் இரண்டு முக்கியமான மூலப்பொருட்களை ஆதாரமாக கொண்டுள்ளது. ஒன்று கண்ணுக்கு புலப்படாமல் செயலாற்றலற்றதாக இருக்கிறது. (ஸ்டாரங்க்ஸ் # 1650 )மற்றொன்று செயலாற்றல் உள்ளதாக இருக்கிறது. மேல் கூறிய வசனத்தில் "விசுவாசமானது " என்ற வார்த்தையில் உள்ள "அது" என்பதை நாம் ஆங்கிலத்தில் "சபஸ்டன்ஸ்" என்று வாசிக்கிறோம். இதை "ஹூப்போஸ்டாசிஸ்" (ஸ்டாரங்க்ஸ் #5287) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு உறுதி அல்லது தெளிவாகப் புரிந்துகொள்ளும் தன்மை என்று பொருள்.

ஆகவே நம்முடைய எடுத்துகாட்டுகளின் படி உறுதியான பொருளில் செய்யப்பட்ட கேடகம் ("ஆதாரம்" ) மற்றும் அதை பயன்படுத்தும் திறன் (அது) ஆகிய இரண்டும் ஒரு போர் வீரனுக்கு மிக அவசியம்.

நம்முடைய விசுவாசமானது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தையும், அதை சம்பந்தப்பட்ட எல்லா பாடங்களையும் உறுதியான ஆதாரங்களை கொண்டதாக இருக்கிறது. உறுதியான கேடகத்தை செய்ய பல மணி நேரங்கள் தேவைப்படுகிறது. அதே போல் நம்முடைய சொந்த விளக்கங்களை அல்ல மாறாக வேத வசனங்களில் உட்பொருளை அறிந்து கொள்ள பல மணி நேரங்கள் வேத வாசிப்பு தேவைப்படுகிறது.

எவ்வளவு நேரம் எடுத்து கொண்டாலும், சரியான விளக்கங்களை அறிந்து கொள்ள நேரம் போதாது. ஒரு யுத்தவீரனாக இருப்பவன் கேடகத்தை பயன்படுத்துவதற்கு பல மணி நேரம் பயிற்சி பெற வேண்டும். மேலும், இன்றைய கிறிஸ்தவ யுத்த வீரர்கள் விசுவாசத்தை பல வகையில் செயலாற்ற பல மணி நேரங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

### பொறி பறக்கும் அம்புகள்

ஒரு கிறிஸ்தவன் அவித்துப் போட வேண்டிய பொறி பறக்கும் அம்புகள் எது ? சந்தேகம் என்ற அம்புகளே. நம்முடைய விசுவாசத்தை சாத்தானானவன் சந்தேங்களின் மூலம் தகர்க்க முயற்சிக்கிறான். " நீங்கள் சரியாகத் தான் செய்கிறீர்கள் " என்று சொன்ன பின்பு, "ஒருவேளை இது தவறாயிருந்தால்...." என்று சொல்லி, இதை குறித்து சற்று யோசியுங்கள் என்ற சந்தேகங்களை எழுப்பலாம். இப்படிப்பட்ட சந்தேகங்களை நாம் அவித்து போட வேண்டும்.

எல்லா சந்தேகங்களும் தவறான சந்தேகங்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை. சில காரியங்கள் நியாயமானதாகவும், சில காரியங்கள் தவறானதாகவும் இருக்கிறது. எடுத்துகாட்டு - இந்த பூமி அண்டசராசத்தின் மத்தியில் உள்ளது, என்பதை கலிலேயோ சந்தேகிக்க வில்லை என்றால், இந்த தவறான கருத்தை பல நூற்றாண்டுகள் நம்பிக்கை கொண்டிருந்திருப்பார்கள். அடுத்து மார்டீன் லூத்தர் பாவ மன்னிப்பு சீட்டைக் குறித்து சந்தேகிக்கவில்லை என்றால், அதுவும் தொடர்ந்து நீடித்திருக்கலாம். மேலும் சகோ. ரசலும் அவருக்கு முன் இருந்த சகோதரர்களும் எரியும் நரகத்தை குறித்து சந்தேகிக்காமல் இருந்தால், நாம் இந்நாள் வரைக்கும் பயங்கரமான தெய்வங்களை வழிபட்டு வந்திருப்போம்.

### விசுவாசத்தின் வளர்ச்சி

எலும்புகளின் வளர்ச்சியை புரிந்து கொள்வது மிக சுவாரிசமாக இருக்கும். நாம் வளர வளர நம்முடைய எலும்புகளும் வளர்ச்சிடைகிறது. ஆனால் அதனுடைய வடிவம் மாறுவதில்லை. இது எப்படி சாத்தியப்படுகிறது ? இந்த வேலையை , ஓஸ்டியோபிலாஸ்ட் ( osteoblasts ) மற்றும் ஓஸ்டியோகிலாஸ்ட் (osteoclasts ) ஆகிய இரண்டு விதமான அணுக்கள் நடப்பிக்கிறது. முதலாவது, ஓஸ்டியோபிலாஸ்ட் அணுக்கள் எலும்புக்குள் சிறிய

துவாரங்களை தோண்டும். அதற்கு பின் சிமெண்ட சாந்தை நிரப்புவது போல ஓஸ்டியோகிலாஸ்ட அணுக்கள் அந்த இடத்தை உடனடியாக நிரப்பி விடுகிறது. ஒரு நாளில் பல மில்லியன் முறைகள் இது நடைபெறுகிறது. விசேஷமாக இளவயதில் வேகமாக நடைபெறும்.

இந்த எலும்புகளைப் போல், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருக்கும் கட்டமைப்புகள், போதனைகளை ஏடுத்துகாட்டுகிறது. எலும்புகள் வளர்ச்சி அடைவதை போல் போதனைகளும் வளர்ந்து கொண்டிருக்கும். ஆனால் சில நேரங்களில் ஓஸ்டியோபிலாஸ்ட் அணுக்கள் துவாரங்கள் ஏற்படுத்துவது போல சந்தேகங்கள் எழும்புகிறது. ஆனால் துவாரங்களை நிரப்பும் ஓஸ்டியோகிலாஸ்டை போல இருக்கும் சரியான சத்தியங்கள் அந்த விசுவாசம் முன் இருந்ததை விட இன்னும் உறுதியடையும்.

எப்படியிருந்தாலும் சில சந்தேகங்கள் தேவையற்றதாக இருப்பதால் அதை அழித்து விட வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் விசுவாசிக்கும் அநேக காரியங்களை அனுபவப்பூர்வமாக நிரூபிக்க முடியாது. நம்முடைய விசுவாசம் ஒவ்வொரு முறைகளும் தாக்கப்படும் பொழுது, நாம் அந்த காரியத்தை குறித்து மீண்டும் நிதானமாக ஆராய்ச்சி செய்யவேண்டியது மிக அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் பொழுது - "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள், உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா ? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்." (11கொரிந்தியர் 13:5 ) மேலும் அப்போஸ்தலனாகிய யோவான் - "பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்." (1யோவான் 4 :1 )

இந்த யுகத்தின் கடைசிக் காலத்தில் நாம் அனைவரும், வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின் மூலம் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுகிறோம். விசேஷமாக சகோ. ரசலின் எழுத்துக்கள் மூலமாக அநேக ஆவிக்குரிய காரியங்களை அறிந்திருக்கிறோம். ஆனால் அவர் எழுதின அனைத்தையும் கட்டாயமாக நம்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை. சகோ. ரசலின் அறிவுரையின்படி நாம் அவருடைய வார்த்தைகளை தேவனுடைய வார்த்தைகளோடு இசைந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தபின் அதை விசுவாசிக்கவேண்டும்.

வரும் சந்தேகங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்றவைகளா அல்லது தகாதவைகளா என்று எப்படி தெரிந்துகொள்வது ? ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆதாரத்தோடு ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

**ஆதாரங்களை சீர்தூக்கிபார்ப்பது**

சிந்திக்கும் செயல்களிலிருந்து சந்தேகங்கள் எழும்பலாம். சிந்தை என்பது இரண்டு உண்மைகளை இணைக்கக்கூடிய தொடர்பாக உள்ளது. நம்முடைய சிறு வயதின் போது, புள்ளிகளை இணைத்து வடிவங்களை வரைவது பழக்கம். இந்த புள்ளிகளில் எண்கள் எழுதப்பட்டிருந்தால் நாம் சரியாக வரைந்து விடுவோம். ஒரு வேளை புள்ளிகளில் எண்கள் கொடுக்கப் படாவிட்டால், சில நேரங்களில் தவறாகவும் புள்ளிகளை இணைத்து வரையும் பொழுது படம் தவறாக போய்விடும். அதேபோல் அநேக வசனங்களின் விளக்கங்களை கொடுக்கும் பொழுதும் இப்படி நடக்கலாம். வசனங்கள் அனைத்தும் சத்தியம், ஆனால் சில நேரங்களில் நாம் அவைகளை சரியாக பொருத்துவதில் தவறிவிடுகிறோம்.

இப்படியாக நாம் வசனங்களை இணைக்கும் பொழுது அதனுடைய விளக்கங்களையும், புனைக்கருத்துக்களையும் கண்டடையலாம். நாமே இப்படிப்பட்ட ஒரு விளக்கவுரைகளை கண்டு பிடித்துவிட்டால், அதை நம்முடைய கண்டுபிடிப்பாக (சொத்து ) பாவிக்க முயற்சிக்கிறோம். துவக்கத்தில், நம்முடைய சந்தேகங்களை சற்று சிந்திக்கிறோம், ஆனால் நம்முடைய கண்டு பிடிப்புகளை முறியடிக்கும் சந்தேகங்களை எளிதில் விட்டு விடுகிறோம். நாம் யோசிக்கும் காரியங்கள் சரியாகத்தான் இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையில் நாம் ஆழ்ந்து விடுகிறோம்.

அநேக சரியான விளக்கங்கள் உடனடியாக வருவதில்லை என்பதை ஒரு கிறிஸ்தவன் முதலில் அறியவேண்டும். பதில் கண்டுபிடிக்கப்படாத கேள்விகளை அனைவரின் கவனத்திற்கும் வைக்கப்படவேண்டும். அதற்கு பின் அதற்குரிய ஆதாரங்களை திரட்ட வேண்டும்.

**ஆதாரங்களை திரட்டுதல்**

ஆதாரங்கள் என்பது என்ன ? அதை நாம் எவ்வாறு சேர்ப்பது ? எல்லா ஆதாரங்களும் ஒரே தரமாக இருப்பதில்லை. சில ஆதாரங்கள் வலுவாக

இருப்பதினால் அவைகள் தக்க ஆதாரமாக விளங்குகிறது. ஆனால் சில நேரங்களில் ஆதாரங்கள் தற்செயலாகவும் இருக்கிறது. இவைகளை நாம் எவ்வாறு பகுத்து அறிந்து கொள்வது? இங்கு சில தேவையான கோட்பாடுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது -

1. வேத பகுதியின் எளிமையான விளக்கங்கள் பெரும்பாலும் சரியான ஒன்றாக இருக்கும் .

2. இந்த வார்த்தைகளை கேட்போர், இவைகளை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் ?

3. இதை விளக்குவதற்காக புதிய ஏற்பாட்டில் ஏதேனும் எடுத்து காட்டுகள் உண்டா ?

4. இந்த பகுதிக்கான விளக்கம் சரியாக அந்த சூழ்நிலைக்கு பொருந்துகிறதா என்று சோதிக்க வேண்டும்.

5. நிழலான பாடங்களில், இது சரியான நிழலா என்று அறிந்துகொள்ள வேண்டும். இது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தால், சரியாகத்தான் இருக்கவேண்டும். குறிப்பிடப்படாமல் இருந்தால், சரியாக இருப்பதற்கு வாய்ப்பில்லாதிருக்கும்.

6. நாம் வேத பகுதிகளில் ஒன்றை புரிந்து கொள்வதின் நிமித்தமாக மற்ற உண்மையான காரியங்களின் மேல் நாம் கொண்ட நம்பிக்கை பாதிக்கப்படுகிறதா ?

## தனிப்பட்ட விசுவாசம்

போதனைகள் மற்றும் தீர்க்கதரிசனங்களின் மேல் உள்ள விசுவாசத்தை காட்டிலும், நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவனுடைய வழிநடத்துதலின் மேல் உள்ள தனிப்பட்ட விசுவாசமே முக்கியமானது. இங்கு சாத்தான் சந்தேகம் என்னும் அம்பை எய்யாமல், பேதுரு கூறினது போல பொறி பறக்கும் சோதனைகளை அம்பாக எய்கிறான். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." (1பேதுரு 1:7) இதில் நம்பிக்கை குறைவு, உடன் பலவீனங்கள் மற்றும் மனச்சோர்வுகள் அடங்கும். ஆனால் இவைகள் எவ்வளவு கடினமாகவும், பொறி பறக்கக்கூடியதாக இருந்தாலும் சரி, கவலை வேண்டாம். இவை அனைத்தும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் நன்மைக்காகவும், வருங்காலத்தில் புதிய சிருஷ்டியின் வேலைக்கான தேவையான பயிற்சியையும் அதன் மூலமாக வளர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை நாம் வாழ்ந்து, தேவன் பேரில் முழு விசுவாசம் வைக்க கற்று கொள்ளும் பொழுது தான் - "நல்ல போராட்டததைப்போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். " (11தீமோத்தேயு 4:7,8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னது போல நாமும் சொல்லமுடியும்.

## சோதனைகள் சிறிதோ, பெரிதோ, ரோமர் 8 மற்றும் 28 ஆம் ஆதிகாரங்கள்


ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனி நபர்களாக தேவனால் கையாளப்படுகிறார்கள். சரீரத்தில் எந்த இரண்டு அவயங்களும் ஒரே மாதிரியாக இராததைப் போல், சாலோமோனின் ஆலயத்தில் எந்த இரண்டு கற்களும் ஒரே விதமாக இல்லாததை போல், இரண்டு கிறிஸ்தவர்கள் ஒரே விதமாக இருப்பதில்லை. ஆகவே ஒவ்வொருவரும் தேவனுடைய கரத்தினால் தனித்தனியாக உருவாக்கப்படுகிறார்கள். "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்." (எபிரெயர் 12:6)

ஆகவே, கிறிஸ்தவன் வைத்திருக்கும் விசுவாசத்தின் பொருட்டு, சாத்தானின் எந்த விதமான சோதனைகளுக்கும் அஞ்சவேண்டாம். ஒரு பழைய பழமொழி பின் வருமாறு - "பயம் கதவை தட்டியதாம்" அதற்கு விசுவாசம் "அங்கு ஒருவரும் இல்லை" என்று பதில் அளித்ததாம்.

ஆகவே "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் " (1யோவான் 5: 4) என்பதை நினைவில் வைத்து கொண்டு நாம் அனைவரும் "விசுவாசத்தை காத்துக்கொள்வோமாக".

சத்தியம்

# கச்சையை அணிதல்



"சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்.." (எபேசியர் 6 : 14)

Tom Gilbert

கிறிஸ்தவ பயணம் ஒரு யுத்தத்திற்கு ஒப்பாக புதிய ஏற்பாட்டில் சொல்லப்படுகிறது. எபேசியர் 6:10-17 ஆம் வசனங்களில் "தேவனுடைய சர்வாயுதங்களை தரித்துக்கொள்ளுங்கள் என்று நாம் அதிகமாக ஊக்குவிக்கப்படுகிறதற்கு மிக விவரமாக இந்த வசன பகுதியில் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது.

"கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்."

கட்சை ஆயுதமாக இராவிட்டாலும், ஒரு படை வீரனுக்கு இது முக்கியமானதொன்றாகும். நம்முடைய சீரத்தில் அணிந்திருக்கும் உடைகளை இருக்கப் பற்றி கொள்வதற்காக தோல் அல்லது கயிற்றினால் இடுப்பில் இருக்ககட்டி கொள்வது வழக்கம். யுத்தக்களத்தில் ஒரு யுத்த வீரன் அணிந்திருக்கும் உடைகள் எந்த விதத்திலும் அவன் போரிடுவதை தடுக்காதபடி இந்த கட்சை கட்டப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல்,இந்த கச்சையை சத்தியத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். இதை அவர் தற்செயலாக பேசாமல், கருத்தூன்றி பேசுகின்றார். இந்த சத்தியத்திற்குண்டான முக்கியத்துவத்தை அவர் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் வலியுறுத்தினார். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவை களெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். " (பிலிப்பியர்4:8) இப்படியாக இந்த சத்தியத்தை தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும் மிக கவனமாக பதியவைக்கும்படி சொன்னார்

ஆவிக்குரிய மற்றும் தற்காலிகமான காரியங்களிலும் சத்தியம் எதுவோ, உண்மை எதுவோ, இதன் அடிப்படையில் தான் விசுவாசம் உள்ளது என்று இந்த பகுதியில் பவுல் குறிப்பிடுகிறார். எனவே, முதல் முதலில் சகல காரியங்களிலும் உண்மையாக நடந்து சத்தியத்தை தேடுவதே ஒரு கிறிஸ்தவனுடைய கடமையாகும்.

**சத்தியம் - குணலட்சனங்களில் முக்கியமான அம்சம்**

தேவன் மற்றும் அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் குணங்களில் சத்தியமே அடிப்படையானது என்று வேதத்தில் அநேக சாட்சிகள் உண்டு. ஆகவே ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த சத்தியமே, (உண்மை) சட்டப்பூர்வமாக தேவைப்படுகிற அடிப்படை குணலட்சனம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

"நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம், கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்" (சங்கீதம் 89:14)

"அதற்கு இயேசு - நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6)

"பின்பு பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்,இதோ ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்." (வெளி 19:11)

"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின." (யோவான் 1:17)

நம்முடைய முழு முயற்சியினால் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்பி, தேவனுடைய நாமத்தினாலும், குமாரனாகிய இயேசுவின் நாமத்தினாலும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்தாலும், அவருடைய குணலட்சணங்கள், திட்டங்கள், நோக்கங்களை பற்றிய உண்மையான விசுவாசமும், நம்மை சுற்றி நடக்கும் உலகத்தின் காரியங்களை பற்றிய உண்மைகளை அறிந்திராவிட்டால், அது பயனற்றதாகிவிடும் - " தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்." (யோவான் 4 :24)

## சத்தியத்தின் கட்சையை கட்டிகொள்ளுதல்

நம்முடைய இடுப்பை சுற்றி சத்தியத்தை கட்சையாக அணிவது எதை பொருள்படுத்துகிறது அல்லது இந்த கட்சையை எப்படி அணிவது ? இந்த கட்சையை நாமே நம்முடைய இடுப்பை சுற்றி கட்டிக்கொள்கிறோம். சத்தியம் இன்னதென்று நாம் சோதித்து, மற்றவர்களோடு எல்லா வகையிலும் உண்மையாய் நடந்து கொள்வதின் தரத்தின் படி நாம் இதை கட்டிக்கொள்கிறோம். சத்தியம் என்னும் கட்சையை நாம் அணிந்திருப்பது என்பது, ஒரு சூழ்நிலையையோ அல்லது செய்தியையோ நிதானிக்கையில் - "இது உண்மையா ? இந்த சூழ்நிலையின் அல்லது சம்பவத்தின் உண்மையான பின்னணி என்ன ?" என்ற கேள்விகளை கேட்டு அதன் மூலம் நிதானிப்பதை குறிக்கும். இவ்விதமாக, நிதர்சனமான உண்மை இன்னதென்று நாம் உறுதிப்படுத்திகொள்வது நமக்கு நங்கூரம் இடப்பட்ட சூழ்நிலையை தருகிறது. அதிலிருந்து நாம் ஏற்றுகொள்ளவேண்டிய அல்லது ஒரு கிறிஸ்தவனாக பிரதிபலிக்கவேண்டிய நடக்கையை தீர்மானிப்பது சுலபமாகிறது.

நம்மை சுற்றி சத்தியம் என்னும் கட்சையை அணிந்திருப்பதின் மூலம், "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே.."(நீதிமொழிகள் 23: 23) என்ற வேத வசனத்தின் ஆலோசனைக்கு கீழ்படிபவர் களாயிருக்கிறோம்.

இயேசுவும் அப்போஸ்தலனாகிய பவுலும் சத்தியத்தின் படி வாழக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்." (யோவான் 17:17)

நாம் சத்தியத்தை முழுமையாக அறிந்து கொண்டு துல்லியமாகவும், தெளிவாகவும் புரிந்து கொண்டு தேவனுடைய வார்த்தைகளை கையாளுவதற்கு விடாமுயற்சியோடு பிரயாசப்படும்படி பவுல் நம்மை துரிதப்படுத்துகிறார். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." (11தீமோத்தேயு 2 :15)

## நம்மை சூழ்ந்திருக்கும் உண்மைகள்

நாம் சத்தியத்தின் படி வாழ விரும்பினால், நாம் சத்தியத்தை தழுவுபவர்களாகவும் - தேவன் மற்றும் இயேசு நமக்கு வாழக் கற்றுகொடுத்த உண்மையான காரியங்களை அறிந்தவர்களாக இருக்கவேண்டும். கடந்த யுகங்களில் சுயநலமாக வாழ்ந்த மனுக்குலத்தை தேவனும், இயேசுவும் எவ்வாறாக கையாளப்போகிறார்கள் என்ற காரியங்கள் அனைத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இந்த உண்மைகள் - இந்த சத்தியங்கள் - ஒரு கிறிஸ்துவ விசுவாசத்தை மற்ற மத அமைப்புகளின் நம்பிக்கையிலிருந்து வேறுபடுத்துகிறது. இவைகளில் சில பின்வருமாறு -

* தம்முடைய சிருஷ்டிகள் அனைத்திற்காகவும் விசேஷமாக தம்முடைய மனித சிருஷ்டிகளுக்கு இறங்குகிற சர்வவல்லமையுள்ள, சர்வ ஞானமுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார் என்பது.

* தான் ஏற்படுத்தின சட்டங்களுக்கும் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் தேவன் கிரியை செய்து, அதே சட்டங்கள் மற்றும் கொள்கைளுக்கு உட்படும் தம்முடைய நுண்ணறிவுள்ள சிருஷ்டிகள் அனைத்திற்கும் ஜீவன் அளிக்கிறார் என்பது.

*அவர் தம்முடைய மனித சிருஷ்டிகள், நியாயமாக சிந்தித்து தங்களுடைய விசுவாசத்தை நிரூபிக்கவேண்டும் என்பதை எதிர்பார்க்கிறார்.

*ஒவ்வொரு மனித சிருஷ்டிக்கும் உரிய மதிப்பு உள்ளது, அவர்களில் ஒருவரும் தன்னிடம் சேர்வதற்கான நியாயமான வாய்ப்பின்றி அழிவதை விரும்பவில்லை என்பதும் அதற்காக தம்முடைய குமாரனை பலி செலுத்தியிருக்கிறார் என்பதுமாகும்.

*தனிப்பட்ட நபர்களுடைய அபூரண நடத்தை என்பது அவர்களுடைய சுபாவத் தன்மை மற்றும் பாத்திரத் தன்மையிலிருந்து வேறுப்பட்டிருக்கிறது என்பதும் மீட்டுகொள்ளக்கூடியதுமாக இருப்பது என்பதாகும்.

*சுயநலம் என்பது ஒரு தனிப்பட்ட நபரையும், கூடுமானால் அவரை சுற்றியிருப்பவர்களையும் அழிவுக்கு மற்றும் உபத்திரவங்களுக்கு வழி நடத்துகிறது. சுயத்தை மற்றவர்களுக்காக பலியிடுவது என்பது ஒரு தனிப்பட்ட நபரையும் அவர் சார்ந்திருக்கும் இனத்தையும் உயர்த்தக்கூடியதாகவும் இருக்கிறது.

*ஒரு தனிப்பட்ட நபர் தேவனுடைய குணநலன்களாக நம்பப்படும் - சத்தியம், கிருபை, அன்பு, இரக்கம், சாந்தம் மற்றும் மன்னித்தல் ஆகியவற்றை பிரதிபலிப்பதின் மூலம் அவரை நெருங்கலாம்.

## நமக்கு முன் வைத்திருக்கும் மாதிரிகள் ( திருஷ்டாந்தங்கள்)

நம்முடைய ஆண்டவர் சத்தியமாகவே வாழ்ந்து, நமக்கு சத்தியத்தின் படி வாழ சரியான ஒரு மாதிரியை எற்படுத்தினார். இயேசுவின் ஊழியத்தை குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும் பொழுது, அவருடைய ஒவ்வொரு பாடங்களும், "மெய்யாகவே, மெய்யாகவே" என்ற வார்த்தைகளோடு துவங்குவதை குறிப்பிடுகிறார். இயேசுவை வார்த்தையினால் குற்றப்படுத்த வேண்டும் என்று அவரிடம் வந்த எதிரிகள் கூட - "தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து - போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும்,தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்."(மத்தேயு 22 :16) என்று சொன்னார்கள்.

முதல் முதலில் இயேசு நாத்தான்யேலை பார்த்தபொழுது, அவரை பாராட்டின வார்த்தைகள் மிக நேர்த்தியாக இருந்தது."இயேசு நாத்தான்யேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து - இதோ, கபடற்ற உத்தம இஸ்ரயேலன் என்றார்." (யோவான் 1:47) நாம் இயேசுவோடு மத்தியஸ்தரின் வேலைகளை அவருடைய இராஜ்யத்தில் செய்ய வேண்டுமானால். இயேசு நாத்தான்யேலை பார்த்து சொன்ன அந்த சாட்சியை பரலோக பிதாவுக்கு முன் இயேசு நம்மைபார்த்து சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட உயர்தர உண்மை நிலைக்கான ஒரு சரியான எடுத்துகாட்டு, "***Journals of the Lewis and Clark Expedition***" - 1813 ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதை அச்சிட்ட நிக்கோலஸ் பிடில், இந்த புத்தகங்களில் உள்ளடக்கிய விவரங்களை பற்றி மெரிவெத்தர் லூயிஸை பற்றி ஒரு சிறிய வாழ்கை வரலாற்றை எழுதும்படி வேலையிலிருந்து ஓய்வெடுத்து கொண்டிருக்கும் தாமஸ் ஜெபர்சனிடம் கேட்டார். இந்த தாமஸ் ஜெபர்சன் ஐய்யாயிரம் வார்த்தைகளை ஒரு நிரூபத்தின் வடிவில் எழுதி பிடிலிடம் அனுப்பினார். அவரை பற்றி அநேக பெருமையான காரியங்களை எழுதினார். அதோடு “அவர் தருகிற சான்றிதழ், நாம் நேரடியாக பார்த்தது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில், உண்மையும், பாராபட்சமில்லாமலும் ஆழமான புரிந்துக்கொள்ளுதலும், சத்தியத்தின் மீதான விசுவாசத்தினாலும் நிறைந்துள்ளது.”

## இன்று கட்சையின் முக்கியத்துவம்

எந்த காலத்திலும் இல்லாத அளவுக்கு இன்று விஞ்ஞான அறிவு அதிகமாக பெருகியிருந்தாலும், கிறிஸ்தவர்கள் வாழவும், இந்த உலகத்தில் உண்மை எது , சத்தியம் எது என்று அறிந்து கொள்வதற்கு மிகவும் அவதிப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த உலகம் முழுவதும் மனசாட்சிக்கு அஞ்சாதவர்களாய், தவறாக வழிநடத்தும் சதியாளர்களால் நிறைந்திருக்கிறது. அதிகமான தகவல் கிடைக்கும் யுகத்தில் உண்மையை தெரிந்து கொள்வது மிக கடினமாக உள்ளது. தொலை காட்சிகளும், இணையத்தளமும் அதிகமான தகவல்களை குவித்துகொண்டிருக்கிறது. சிலவற்றை பார்ப்பதினாலும், கேட்பதினாலும், சரியான ஆதாரத்தோடே இருப்பதினாலும் அநேகர் இவைகளில் சிலவற்றை நம்புவதற்கும் ஏதுவாக இருக்கிறது.

இன்றைக்கு இருக்கும் இணையத்தளத்தின் காலத்தில் எந்த ஒரு காரியத்தையும் கிராபிக்ஸின் மூலம் நிஜமாக்குவது மிக எளிதாக உள்ளது. இதன் விளைவாக, இப்பொழுது இருக்கும் புதிய தலைமுறைகள் உண்மைக்கும், கற்பனை கதைகளுக்கும் உள்ள

வித்தியாசத்தை கண்டுபிடிப்பதற்கு உள்ள திறன் குறைந்திருக்கிறது. தலைமுறைகள் அனைத்தும் இந்த விதமான தொடர்பு சாதனங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது. துரதிஷ்டவசமாக, உண்மையாக தோன்றும் கற்பனைகள் அனைத்தும் பிசாசுக்குரியவைகளாயிருக்கிறது. அல்லது அநேக வழிகளில் ஜனங்களை தரம் குறைத்து, இழிவுப்படுத்துகிறது. நமக்கு எப்படிப்பட்ட சவால் காத்திருக்கிறது என்று பாருங்கள் - நம்மை சுற்றியுள்ள வஞ்சகங்கள் மத்தியில் சாத்தானானவன் உண்மைகளை குழப்பி, நம்முடைய சொந்த சிந்தையில் வஞ்சகங்களை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறான். "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.. " (11கொரிந்தியர் 11:14)

இன்றைக்கு சமுதாயம் வார்த்தைகளின் அர்த்தங்களை குழப்பி அல்லது தவறாக பொருள் கற்பித்திருக்கிறது. குறிப்பாக, விளம்பரம், அரசியல் .. இது உண்மைகளை மறைத்து, அசத்தியத்தை பேச அநேகரை துாண்டியுள்ளது. எடுத்துகாட்டுக்கு ஒரு வார்த்தையை பார்க்கலாம் - "இலவசம்" சில நட்சத்திர உணவு விடுதிகளில், வாடகைக்கு வருபவருக்கு "காலை உணவு இலவசம்" என்றும், சில அடுக்கு மாடி வாடகை வீடுகளில் "புதிதாக குடிவருபவர்களுக்கு தொலை காட்சி பெட்டிகள் இலவசம் " என்றும் நாம் பார்க்கலாம். ஆனால் இவை அனைத்தும் உண்மையில் இலவசம் அல்ல மாறாக, இவைகளுக்கு கூடுதலான எந்த பணமும் செலுத்தவேண்டியதில்லை என்பது பொருள் என்று சிந்திக்கக்கூடிய சிலர் மட்டுமே புரிந்து கொள்கிறார்கள். இப்படியாக இன்றைய அரசியலும், அசத்தியத்தை உண்மையை போல் பேசுகிறார்கள்.இதில் ஒருபோதும் உண்மை இருப்பதில்லை.


இந்த உலகத்தில் இருக்கும் அநேக சாத்தானின் கவர்ச்சிகரமான வஞ்சகங்கள் எண்ணிக்கையில்லா வகைகளில் நம்மை அவனுக்குள் ஈர்த்து விடாதபடிக்கு, நம்முடைய வாழ்க்கையில் சத்தியத்தை அறிந்து கொண்டு, சத்தியத்தை மட்டுமே பேசுவது மிக முக்கியமானதொன்றாயிருக்கிறது. வேத வசனங்கள் நமக்கு இந்த ஆலோசனையை அடிக்கடி நினைப்பூட்டுகிறது. "நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால் - அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள், உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள். ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள்,இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். " (சகரியா 8:16,17)

"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும்,அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. (எபேசியர் 4:14-16)

சத்தியத்தை பற்றி ஒரு வல்லமையான வாக்கியத்தை இயேசு குறிப்பிட்டார் - ".........நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்"(யோவான் 8 :31,32) சாத்தானின் வஞ்சகங்களிலிருந்தும், கவர்ச்சிகரமான போதனைகளிலிருந்தும், மற்ற எந்த விதமான சூழ்நிலைகளிலிருந்தும் நம்மை முழுமையாக விடுவிக்க சத்தியத்திற்கு மட்டுமே வல்லமை உண்டு. நம்மை சுற்றி சத்தியம் இருந்தால், அந்த சத்தியத்தின் வல்லமை, தேவனை பற்றியும், அவரின் திட்டங்களை பற்றியும் தவறான போதனைகளிலிருந்தும் விடுவிக்கும். தீவிரமான மனித உணர்வுகளில் அடிமைதனத்திலிருந்தும், மாயையிலிருந்தும், சுய மனசாட்சியின் கட்டுபாட்டிலிருந்தும், ஜனங்கள் நம்மை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்ற பயத்திலிருந்தும் , சமுதாயத்தில் நம்முடைய தரத்தை அளவிடுவதிலிருந்தும் இன்னும் இப்படிப்பட்ட அநேக பயங்களிலிருந்தும் சத்தியம் நம்மை நிச்சயமாக விடுவிக்கும். இவைகளை தகர்த்து எறியும் அளவிற்கு நமக்குள் இருக்கும் சத்தியத்தின் தரம் உயர்வாக இருக்கவேண்டும். இதனால் சாத்தானின் தாக்கங்களை கண்டுகொண்டு அதற்கு ஏற்றவாறு நாம் ஆயத்தப்பட்டு, "சாத்தான் எய்யும் பொறி பறக்கும் தீய அம்புகளை" நாம் தகர்த்துவிடலாம்.

# இரட்சிப்பு

# தலைச் சீரா



"இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 6 :17)

எபேசியர் 6:11-18 ஆம், வசனங்களில் கிறிஸ்துவ சர்வாயுதங்களில் ஐந்தாம் பகுதியாக இரட்சிப்பின் தலைச்சீரா சொல்லப்பட்டிருக்கிறது. "பெரிகீபாலாயியா" (perikephalaia) என்ற (ஸ்டராங்ஸ் # 4030) வார்த்தைக்கு தலையை சுற்றியுள்ள கவசம் அதாவது தலைச்சீரா என்று அர்த்தம். எந்த ஒரு படைவீரனுக்கும் அவன் அணியும் தலைச்சீரா மிக முக்கியமானதாகும். ஆதி காலத்தில் அடர்த்தியான தோல் அல்லது வெண்கலத்தினால் தலைச்சீரா செய்யப்பட்டது. அவைகளை பழங்கால கிரேக்க படை வீரர்கள், அம்புகளுக்கும் ஈட்டிகளுக்கும் தங்களுடைய தலையை காப்பாற்ற இப்படிப்பட்ட தலைச்சீராவை அணிந்தார்கள். பவுலின் காலத்தில் ரோம படை வீரர்கள் "காலியா" என்ற இரும்பு தலைச் சீராவை அணிந்தார்கள். அந்த இரும்பு தலைச்சீரா தலைக்கு மட்டும் அல்ல, காது, கன்னம் மற்றும் கழுத்துக்கும் பாதுகாப்பை தந்தது.

படை வீரனுக்கு தலைச்சீரா மிக அவசியமானதொன்றாகும். ஒரு படைவீரனை வெகு சீக்கிரத்தில் அழிப்பதற்கோ அல்லது செயல் இழக்க செய்வதற்கு அவனை தலையில் காயப்படுத்தினால் போதும். அந்த படைவீரனுக்கு யுத்தம்செய்யும் சகல நெறிமுறைகளும், கட்டளைகளும் தலையிலிருந்து தான் வரவேண்டும். ஆகவே அவனுடைய தலையை அழித்தால், அவனுடைய யோசனை அழிந்து விடும். அதற்கு பின் அவன் செயல் இழந்து, வீழ்ச்சி அடையும் வீரனாவான்.

சாத்தானானவன், கிறிஸ்துவின் படைவீரனோடு போர் தொடுக்கும் பொழுது இந்த கோட்பாட்டை பயன்படுத்துகிறான். அவன் புதிய சிந்தையை அல்லது புது சிருஷ்டியை அழித்து விடுகிறான். தொடர்ந்து இவ்வேலையை செய்து கிறிஸ்துவை பின்பற்றுபவர்களை ஜெயங்கொள்கிறான். அதன் விளைவாக, சாத்தான் இவ்வுலகத்தின் அவிசுவாசிகளின் மனதை குருடாக்கி அழிப்பது போல தன்னால் முடிந்த வரைக்கும் ஆவிக்குரிய சிந்தையை தாக்குகிறான். (11கொரிந்தியர் 4:4) சாத்தானுடைய தாக்குதல்கள், பலத்த அடிகள் திடீர் தாக்குதல்கள் ஆகியவற்றிடமிருந்து புது சிருஷ்டியின் சிந்தை நிச்சயமாக காக்கப்படவேண்டும். இதற்காகவே கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு தேவன் இரட்சிப்பின் தலைச்சீராவை தந்திருக்கிறார்.

**இரட்சிப்பின் தலைச்சீரா என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்பின் தலைச்சீரா என்பதை குறித்து தெளிவாக விவரித்திருக்கிறார். "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்." (1தெசலோனிக்கேயர் 5:8)

வசனங்கள் விவரிக்கிறது போல தலைச்சீரா இரட்சிப்பின் நம்பிக்கையாக இருக்கிறது. மேலும், தேவனுடைய பரிசுத்த ஆவியின் மூலம் அதன் மலர்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது. சகோ. ரசல் தலைச் சீராவை, "தெய்வீக திட்டம் மற்றும் வாக்குத்தத்தங்களை கிரகிக்கக்கூடிய நுண்ணறிவு" என்று அழைக்கிறார். (Reprints, p. 2195) இந்த தலைச்சீராவின் மூலம் நாம் பெறும் பெரிதான நன்மைகளை குறித்து விவரிக்கும்பொழுது - "தவறாக வழிநடத்தப்பட்டு, அறியாமையில் முழ்கி, சாத்தானின் வஞ்சகங்களில் அகப்பட்டிருந்த நம்மை, அறிவுப்பூர்வமான ஞானத்தை கொடுத்து, அதாவது தேவனுடைய சர்வாயுதவர்க்கமான அவருடைய வார்த்தைகளை கொடுத்து நம்மை காப்பாற்றினதற்காக அவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம்."என்கிறார். (Reprints, p.2310)

தேவனுடைய இரட்சிப்பின் திட்டங்களை புரிந்துகொள்வதே இரட்சிப்பின் தலைச் சீராவாகும். இது கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஆவிக்குரிய நம்பிக்கையையும் ஆவிக்குரிய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆவிக்குரிய வெகுமதிகளை பெறுவதற்கான சகல நெறிமுறைகளையும் கொடுக்கிறது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும்,

சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (11தீமோத்தேயு 3:16,17)

## தலைச்சீராவை அணிதல்

பரலோகப் பிதாவை குறித்து கற்றுக் கொள்ள ஆர்வம் வந்தவுடன், அவரிடத்தில் நெருங்குவதற்கு, விசுவாசிகள், முதன் முதலில் இந்த இரட்சிப்பின் தலைச்சீராவை வேகமாக எடுத்து அணிவது வழக்கம். இவர்கள் சரியான நோக்கத்துடனும், சிந்தையுடனும் தேவனை நெருங்கினால், நிச்சயமாக நாம் அனைத்து காரியங்களையும் அறிந்து கொள்வோம் என்று பவுல் குறிப்பிடுகிறார் - "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்.." (எபேசியர் 1:17,18)

தலைச்சீராவை அணிவதற்கு முன், வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய ஞானத்தை ஏற்றுக்கொள்ளவும், சுய சிந்தை மற்றும் முன் திட்டமிடுகிற உணர்வுகளை நம்முடைய சிந்தையிலிருந்து களைவது மிக அவசியம். இந்த ஒரு தடையை அநேகர் சந்திப்பதே இல்லை. ஏனென்றால், தவறான - விசுவாச அறிக்கைகளும், தேவனை பற்றிய பொய்யான கருத்துக்களும் அநேக சபைகளில் போதிக்கப்படுகிறது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தையும், வசனங்களில் உள்ள ஞானமான காரியங்களையும் ஏற்றுகொள்வதற்கு இந்த பொய்யான கருத்துக்கள் தடையாக அமைந்துள்ளது. பொதுவாக தாங்கள் கற்று கொள்வதையும், தங்களுடைய சொந்த விருப்பு, வெறுப்புகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தேவன் இலவசமாக கொடுக்கும் சத்தியங்களையும் மற்ற காரியங்களையும் ஏற்றுகொள்வதற்கு தேவையான மனத்தாழ்மையை அநேகர் இழந்திருக்கலாம். (1கொரிந்தியர் 2 :12) பழைய ஐக்கியத்தை இழக்க அநேகர் தயங்கலாம். அல்லது வேலையிலிருந்தும் , சமுதாயத்திலிருந்தும் விலக்கப்படுவதை நினைத்து சிலர் அஞ்சலாம். (மத்தேயு 10 : 34-39)

இரட்சிப்பின் தலைச் சீராவை அணியும், விசுவாசிகள், தேவனுடைய சித்தம் செய்ய தங்களை முழுவதும் அர்பணித்து, ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவின் மரணத்தில் பங்கெடுத்து, புதியதோர் ஜீவனுக்குள் அடிவைத்து நடக்கவேண்டும். (ரோமர் 6:3-5) இந்த அர்பணிப்பை தேவன் ஏற்று கொண்டால் அவர் தம்முடைய பரிசுத்த ஆவியை கொடுத்து கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக வளர்த்து - தேவனுடைய குமாரர்களாக ஏற்றுகொள்கிறார். (11கொரிந்தியர் 5:17) தேவனுடைய பரிசுத்த ஆவியானது, தேவனுடைய திட்டங்களை குறித்த ஆவிக்குரிய சத்தியங்களை புது சிருஷ்டியின் சிந்தைக்கு, புரிய வைக்கும் . இதை குறித்து பவுல் விவரிக்கும் பொழுது - "எழுதியிருக்கிறபடி - தேவன் தம்மில் அன்புகூருகிறவர் களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். ... நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். " (1கொரிந்தியர் 2:9,10,12)

மனிதர்கள் பயன்படுத்தும் சொல்லார்த்தமான தலைச் சீராக்களை போல் இல்லாது, தாங்கள் அறிந்த சத்தியத்தை வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதை பொறுத்து இரட்சிப்பின் தலைச்சீராவின் பலம் வேறுபடுகிறது. இவ்விதமான அறிவு, தேவனுடைய பிரபலமான திட்டங்களையும் வாக்குறுதிகளையும் கற்றறிய பயன்படுகிறது. இவ்விதமாக தலைச் சீராவை அணிதல், போர் வீரனுடைய எதிரிகளை எதிர்க்க வல்லமை தருகிறது. அந்த போர் வீரனை சுற்றி வஞ்சகங்களும், தவறுகளும் வீசும் பொழுது, அவனுடைய தலைச்சீரா, அந்த அடிகளை தடுத்து, புது சிருஷ்டியின் சிந்தையை காத்துகொள்கிறது. அந்த படைவீரன், தேவனுடைய வாக்குத்தத்தத்தையும், நீதியின் கோட்பாடுகள், மற்றும் தேவனுடைய திட்டங்களையும், குணலட்சனங்களையும் இருகப் பற்றி கொண்டு, எந்த விதமான தாக்குதலினாலும் விழுந்து விடாமல், தவறாக வழிநடத்தாமலும் காத்துகொள்ளும். எப்படியிருந்தாலும், வலுவற்ற தலைச்சீரா அதாவது,

குறைவான வேதபடிப்பினால் வேகமான அடிகளை தாங்கமுடியாததினால், புதிய சிந்தையானது அதிர்ந்து, அசைகிறது. இது சம்பவிக்கிற சமயம், விசுவாசமும் புரிந்துகொள்வதலுக்கான தன்மைகளும் சற்று தடுமாறுகிறது. ஆகவே, ஒரு கிறிஸ்தவ வீரன் தொடர்ந்து வசனங்களை வாசித்து, தலைச்சீராவை பலப்படுத்தி, சாத்தானின் தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்கவேண்டியது மிக அவசியம். (11தீமோத்தேயு 2 :15) சங்கீதக்காரன் எழுதினது போல - "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர், அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது." (சங்கீதம் 119:97,98) நாம் நம்முடைய வாழ்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் .

**ஆவிக்குரிய அழைப்பிதழ்**

ஏதேன் தோட்டத்தின் மத்தியில், புசிக்கவேண்டாம் என்று சொல்லப்பட்ட மரத்தின் கனியை புசித்து தேவனுடைய கற்பனையை எவ்விதமாக ஆதாமும், ஏவாளும் மீறி, அதன் பலனான மரணத்தீர்ப்பை பெற்றார்கள் என்று இந்த தலைச் சீரா வெளிப்படுத்துகிறது. (ஆதியாகமம் 3:6,11-19) முழு மனித குடும்பமும் மரணத்தீர்ப்பை தலை முறை தலைமுறையாக இந்த மரணத்தீர்ப்பை சுதந்தரித்தார்கள். (1கொரிந்தியர் 15:21, ரோமர் 5:12) எப்படியிருந்தாலும், ஸ்திரியின் வித்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கி இந்த மரணத் தீர்ப்பிலிருந்து முழு மனுக்குலத்தையும் விடுவிக்கும் என்று தேவன் வாக்களித்திருந்தார். இவ்விதமான வளர்ச்சியை தேவன் முன் அறிந்திருந்தார். (ஆதியாகமம் 3:15) அதற்கு பின் அந்த வித்தின் மூலம் பூமியில் உள்ள முழு குடும்பத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார் (ஆதியாகமம் 22: 16 -18)

அடுத்து, இயேசு தன்னை தாழ்த்தி, தன்னுடைய ஆவிக்குரிய நிலைமையை இழந்து, மாம்சமாகி, ஆதாமுக்கு ஈடாக சரி நிகர் சமான விலையாக தன்னுடைய ஜீவனை கொடுத்து, இந்த வித்தானார் என்று விசுவாசிகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. (யோவான் 1:14, 1தீமோத்தேயு 2:5,6) மரண பரியந்தம் இயேசு கீழ்படிந்ததினால், இயேசுவே வாக்களிக்கப்பட்ட சந்ததியும் மெல்கிசிதேக்கின் முறைமையின்படி ஆவிக்குரிய பிரதான ஆசாரியரானார். (எபிரெயர் 5 :5-10)

கடைசியாக, இயேசுவின் பலியின் ஜீவியத்தை பின் பற்றுபவர்கள், தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்களாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியின் பங்காளிகளுமாகிறார்கள் என்று இயேசுவின் சீஷர்கள் அறிந்துகொள்கிறார்கள். (கலாத்தியர் 3:26-29) இவர்கள் இயேசுவை பின்பற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாதியாக, பரிசுத்த தேசமாக, பூமியின் குடும்பங்களை ஆண்டவரோடு ஆசீர்வதிக்க அழைக்கப் பட்டிருக்கிறார்கள். (1பேதுரு 2 :9,10) சபையாகிய , கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆவிக்குரிய ஆட்சியாளர்களாயிருப்பார்கள். (மத்தேயு 19:28, 1கொரிந்தியர்6 :2,3) இந்த இராஜ்யத்தில் கிறிஸ்துவும் சபையும், கல்லறையில் உள்ளவர்களை எழுப்பி, அவர்களின் வேதனைகளை குணப்படுத்தி, நீதியை போதித்து, மீண்டும் இராஜ்யத்தின் சட்டங்களை கீழ்படிந்து நித்திய ஜீவனில் வாழ வாய்ப்பளிப்பார்கள். (யோவான் 5:28,29, எரேமியா 31 :29,30)

**சீஷத்துவத்திற்குரிய தகுதிகளும், நிபந்தனைகளும்**

இரட்சிப்பின் தலைச்சீராவானது, ஆவிக்குரிய வாய்ப்பில் பங்குக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு,இந்த அழைப்பிற்கான தகுதிகளையும் நிபந்தனைகளையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. முதலாவது விசுவாசிகள் தங்களை இயேசுவின் மரணத்திற்குள்ளாக தங்களுடைய பூமிக்குரிய வாழ்க்கையை பலி செலுத்தி, தேவனுக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். (மத்தேயு 16:24, ரோமர் 6:3-5 , ரோமர் 12 :1,2) கிறிஸ்துவின் இரத்தத்தின்மேல் உள்ள விசுவாசத்தினாலே அவர்களின் பலி தேவனால் அங்கீகரிக்கப்படுகிறது. (ரோமர் 3:25,26, 5:1,2, 9)விசுவாசிகள் தங்களுடைய சுயவிருப்பத்தையும், சித்தத்தையும் விட்டு விட்டு இயேசுவை தலையாகவும் மேய்ப்பனாகவும் கொண்டு, தேவனுடைய சித்தத்தை வாழ்க்கையில் நிறைவேற்றுவதே இவர்கள் செலுத்த வேண்டிய பலியாகும் (வெளி 14:4, யோவான் 10 :4,14) கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இவர்கள் இந்த பூமிக்குரிய உயிர்த்தெழுதலின் உரிமைகளை விட்டு விடுவதும் இந்த பலியின் பொருளாகும்.

இவர்களின் அர்ப்பணிப்பை தேவன் அங்கீகரித்தால், புது சிருஷ்டிகளாக அவர்களை பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கிறார். (11கொரிந்தியர் 5 :17, எபேசியர் 1:13,14) இப்பொழுது அவர்கள் தேவனுடைய குமாரர்களாக கருதப்படுகிறார்கள். இவர்களின் குடி

உரிமை பரலோகத்தில் உள்ளது. ஆகவே இனி, புது சிருஷ்டியின் சிந்தை இயேசுவின் குணலட்சனங்களின் அளவிற்கு வளர்ச்சி அடைவதின் மூலம் மறுரூபமாக்கப்படுகிறது. (ரோமர் 12:2, 8:29, 1பேதுரு 2:21) இந்த மறுரூபமானது தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும், வசனங்களில் குறிப்பிட்டிருப்பதை போல தேவனுடைய பரிசுத்த ஆவியின் கனிகளாகிய அன்பு சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் மற்றும் இச்சையடக்கம் (கலாத்தியர் 5:22,23, 11பேதுரு1 :5-11) போன்ற குணங்களை கிறிஸ்துவின் அளவிற்கு வளர்ச்சி அடைய செய்வதாகும். கிறிஸ்துவின் சிந்தை நமக்குள் முழுமையாக நுழைந்து, நம்முடைய சுய சிந்தையின் மேல் கட்டுபாடுகளை செலுத்தி தங்களுடைய சொந்த விருப்பு, வெறுப்பு செயல்களை அதாவது வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள (கொலோசேயர் 3 :5-10, 12:14) மாம்சத்தின் கிரியைகளின் பழைய மனிதனை முற்றிலும் களைய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த பூமிக்குரிய பலி மற்றும் மறுரூபமாக்குதல் மிகக்கடினமான ஒன்று என்று வசனங்கள் விவரிக்கிறது. விழுந்துபோன மாம்சம், உலகம் மற்றும் சாத்தான் நம்முடைய இந்த பரிசுத்தமான செயல்களை எதிர்க்கலாம். இம்மூன்றும் கிறிஸ்துவின் குணலட்சனங்களை நமக்குள் வளர்ச்சியடையாதபடி தடுக்கும் எதிரிகளாக இருப்பதால், இவைகள் உபத்திரவத்திற்கும், பற்றி எரியும் சோதனைகளுக்கும், வழிவகுக்கும். "இந்த வார்த்தை உண்மையுள்ளது, என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம், அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் , அவரும் நம்மை மறுதலிப்பார். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."(11தீமோத்தேயு 2 :11,12, 3 :12) இப்படி பற்றி எரிகிற சோதனைகள், விசுவாசிகள், தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. இதன் பலனாக ஆவிக்குரிய வெகுமதிகளாகிய - மகிமை, வல்லமை, கனம், அழியாமையையும் மற்றும் நித்திய ஜீவனையும் பெற பாத்திரவான்களாவோம். (1பேதுரு 1:7, 4 :12 -14) கிறிஸ்தவர்கள், மரண பரியந்தம், உண்மையுள்ளவர்களாக இருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஜீவ கீரீடத்தை பெறவேண்டும். (வெளி 2:10)

சீஷர்கள் இயேசுவின் அடிச் சுவடுகளை பின்பற்றுவதற்கு தேவனுடைய வார்த்தை வரைபடமாக வழிக்காட்டுகிறது.ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் வளர வேண்டிய குணலட்சனங்கள் என்ன என்று கற்றுக்கொடுக்கிறது. இது இயேசு, தேவன் மேலும், அவரின் சட்டங்கள் மற்றும் இரடசிப்பின் திட்டங்கள் மேலும் வைத்த பெரிதான அன்பை வெளிப்படுத்துகிறது. வெற்றி பெறுவதற்காக கிறிஸ்தவர்கள் தழுவியணைக்கும் அன்பாகும். (சங்கீதம் 40 :7,8) இந்த தலைச் சீரா, விசுவாசிகளுக்குரிய அறிவுரைகள் மற்றும் எதிராளிகளோடு போர்புரிய தேவையான கருவிகளையும் கொடுத்து வரும் எதிரிகளை ஜெயிக்கவும் ஆலோசனையையும் தருகிறது.

இறுதியாக ஒரு சீஷன் கற்று கொள்வதற்கும், கிறிஸ்துவின் சாயலை தன்னுடைய இருதயத்தில் பதிந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் சத்தியம் மற்றும் கோட்பாடுகளையும் தலைச்சீரா தருகிறது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலிப்பியர் 2 :5)

### தலைச்சீரா தேவனுடைய வாக்குத்தத்தங்களை வெளிப்படுத்துகிறது

கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொந்த அறிவினாலும் வல்லமையினாலும் எதிராளியை ஜெயிக்க முடியாது என்பதை தலைச்சீரா வெளிப்படுத்துகிறது. இதற்கு பதிலாக சீஷர்கள் ஜெயிக்க, தேவன் மற்றும் கிறிஸ்துவினிடத்திலிருந்து உதவிகளும், வழிநடத்துதலும், தேவைப்படுகிறது. இந்த வெற்றிக்கு தேவனுடைய வார்த்தைகள் வெளிப்படுத்தின அநேக வாக்குறுதிகளை விசுவாசிக்க வேண்டியதாக இருக்கிறது. கிறிஸ்துவை பின் பற்றுபவர்களை தேவன் ஒரு போதும் கைவிடவோ, புறக்கணிப்பதோ இல்லை. (எபிரெயர் 13:5,6) தேவனுடைய கரங்களிலிருக்கும் சீஷர்களை எந்த எதிரியினாலும் பிடுங்க முடியாது... (யோவான் 10:28,29, 1யோவான் 4:4) "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். " (ரோமர் 8 :28) மேலும் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். " (1கொரிந்தியர் 15:57)

எந்த விதமான சூழ்நிலைகளிலும், சீஷர்களின் மனதில் விதைக்கப்பட்ட சந்தேகங்களினால் அவர்கள் விழாமல் நிலைத்திருக்க, தேவன் அநேக வாக்குத்தத்தங்களை கொடுத்து, உறுதியளித்து பலப்படுத்துகிறார். (சங்கீதம் 46:1-7, 91:1-12) எத்திசையிலிருந்து எய்யப்படும் சாத்தானின் சோதனைகள், தவறான போதனைகள், சந்தேகங்களையும் எதிர்க்க திராணியுள்ளவர்களாகும்படி இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உறுதியான அடித்தளமாயிருக்கிறது. சந்தேகங்களையும், சோர்வுகளையும் விதைப்பது சாத்தானுக்கு கைவந்த கலையாகும். விசேஷமாக இப்படிப்பட்ட நேரங்களில் இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உதவியாக இருக்கிறது. தேவன் தாமே நம்மை நேசித்ததினால், அவருடைய ஒரே பேரான குமாரனை நமக்காக தந்தார். (யோவான் 3:16, 16 :27) இயேசுவின் இரத்தத்தின் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசமே, நம்மை தேவனோடு நிலைநிற்கவும், அவர் நம்மை ஏற்றுகொண்டதற்கும் அடிப்படையான காரணம் என்று இந்த வாக்குத்தத்தங்கள் குறிப்பிடுகிறது. (எபேசியர் 1:5-7, 2:5-8) எந்த அளவுக்கு விசுவாசம் உறுதியாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை.(11தீமோத்தேயு1:7, 1யோவான் 4:18)

### இயேசு இரட்சிப்பின் தலைச்சீராவை அணிந்தார்

இயேசுவுக்கு தலைச் சீரா தேவைப்பட்டது என்றும், அவர் அதை அணிந்தார் என்றும் வசனங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. "அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதிசரிக்கட்தலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொண்டார்." (ஏசாயா 59 :17)தன்னுடைய தந்தையின் திட்டங்களையும், கோட்பாடுகளையும் அறிந்த இயேசு தன்னுடைய மரணபரியந்தம் விசுவாசத்தோடு கீழ்படிதலை, தன்னுடைய பூமிக்குரிய ஊழியத்தில் நிருபிக்கவேண்டியதாக இருந்தது. ஆகவே ஏசாயா - "அவர் தமது ஆத்துமா வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்." (ஏசாயா 53:11) என்று எழுதினார்.

நம்முடைய ஆண்டவரின் முதலாம் வருகையில் இரட்சிப்பின் தலைச் சீராவை, அவர் அணிந்த விதத்தை மிகத்தெளிவாக வசனங்கள் எடுத்துகாட்டுகிறது. அவர் வனாந்திரத்தில் இருக்கும் பொழுது சாத்தானின் மூன்று சோதனைகளுக்கும், தேவனுடைய வார்த்தைகளை பதிலாக கொடுத்தார். "..மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.." (மத்தேயு 4:4), மீண்டும் ".. அதற்கு இயேசு - உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். "(மத்தேயு 4:7) மற்றும் "...அப்பொழுது இயேசு - அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.... " (மத்தேயு 4:10)

இயேசு தன்னுடைய பூமிக்குரிய ஊழிய பணியில் இந்த தலைச் சீராவை முழுமையாக சார்ந்திருந்தார். "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி - மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார், அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்..."(யோவான் 5:19),"ஆதலால் இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்."(யோவான் 8:28)

இயேசு இரட்சிப்பின் தலைச் சீராவை அணிந்தது போல அவரை பின் பற்றுபவர்களும் அணிய வேண்டும். அவர்கள் எதைப் பேசினாலும், சிந்தித்தாலும், தங்களுடைய சுய சிந்தையின்படி செய்யாமல் இரட்சிப்பின் தலைச்சீரா சித்தரிக்கிறது போல தேவனுடைய போதகங்களின் அடிப்படையில் அமைந்துள்ள விதிமுறைகளின்படி வழிநடத்தப்பட வேண்டும்.

### தலைச்சீரா எதற்கு தேவைப்படுகிறது?

இந்த தலைச்சீராவானது சாத்தானால் அறிமுகப்படுத்தப்பட்ட பொய்யான உபதேசங்களுக்கும், தவறான போதனைகளுக்கும் புது சிருஷ்டியின் சிந்தை காப்பதற்கு தேவைப்படுகிறது. தேவனுடைய இரட்சிப்பின்

திட்டத்தை குறித்து சாத்தான் குழப்பத்தை ஏற்படுத்தினால், கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் விழாதபடி தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்மை விழாதபடி காத்துக் கொள்ளும். அதற்காகவே சாத்தான் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்து கொண்டும், அவனுடைய தூதர்கள் நீதியின் ஊழியக்காரரின் வேஷத்தை தரித்து, சீஷர்களை வஞ்சித்து வருகின்றனர். (11கொரிந்தியர்11:14, 15) அதாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் படியாக இவர்கள் ஏமாற்றுவார்கள். (மத்தேயு 24:24) அப்போஸ்தலனாகிய பவுல் இதை குறித்து எச்சரிக்கையில் - "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்.." (எபேசியர் 4:14)

இரட்சிப்பின் தலைச்சீராவாக சித்தரிக்கப்படும் தேவனுடைய வார்த்தையானது, பொய் உபதேசங்களாகிய காற்று அடிக்கும் ஒவ்வொரு அடிக்கும் நம்மை காத்துகொள்கிறது. நம்முடைய நாட்களில் இப்படிப்பட்ட அநேக காற்றுகளை நாம் காண்கிறோம் - குரங்கிலிருந்து மனிதன் வந்தான், எனக்கும் என் நண்பர்களுக்கும் தவிர மற்ற அனைவருக்கும் நரகம் காத்துக் கொண்டிருக்கிறது. .... இன்னும் பல. இந்த தலைச் சீராவானது தேவ திட்டத்தையும், அவருடைய சித்தம் மற்றும் நம்முடைய சிந்தையில் வரும் ஒவ்வொரு யோசனைகளையும் சீர்தூக்கி பார்த்து நியாயந்தீர்க்கும் தேவனுடைய கோட்பாடுகளின் தரத்தை நமக்கு போதிக்கிறது. இவ்விதமாக மதிப்பிடும் முறையை பற்றி பவுல் விவரிக்கிறார். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெ வைகளோ, கற்புள்ளவைக ளெவைகளோ, அன்புள்ள வைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் " (பிலிப்பியர் 4:8)

## நாம் தலைச்சீராவை அணிந்தே இருக்க வேண்டும்


சீஷர்கள் இந்த இரட்சிப்பின் தலைச்சீராவை அணிந்திருக்கும் வரை பாதுகாப்பை பெறுவார்கள். தங்களுடைய சொந்த ஞானத்தையும், யோசனைகளையும், பயன்படுத்தி, தேவனை பின் பற்ற முடிவு செய்து, இந்த தலைச்சீராவை கழற்றி விட்டால் எதிராளிகளுக்கு முன் நிராயுதபாணியாக, அழிவை தடுக்க இயலாதவர்களாய் நிற்க வேண்டும். இது எவ்வாறு சம்பவிக்கிறது ? மனத்தாழ்மை குறைவுப்பட்டால் இவைகள் சம்பவிக்கும். தங்களுடைய சுய யோசனைகளையும், சிந்தைகளையும் மிகைப்படுத்தி, வளர்ச்சி அடையச் செய்கிறார்கள். இவைகள் தொடர்ந்து நீடித்தால் ஆவிக்குரிய பெருமை நம்மை ஆட்கொண்டுவிடும். இந்த பெருமை வளர்ச்சியடைந்தால் நாம் அணிந்திருக்கும் தலைச்சீராவை அணிவது மிக கடினமாகிவிடும். இதன் விளைவாக அதை கழற்றவேண்டிய அவசியம் ஏற்படும். இனி அவர்கள் தேவனாலும் அவருடைய வார்த்தைகளினாலும் வழிநடத்தப்பட விரும்புவதில்லை. ஒரு முறை தலைச்சீரா கழற்றப்பட்டால் அவர்களை எளிதில் விழ்த்திவிடலாம் என்று அறிந்த சாத்தான், இப்படிப்பட்ட வளர்ச்சியை அதிகரிக்க ஊக்குவிக்கிறான்.

இவ்விதமான கண்ணியிலிருந்து நாம் தப்பிப்பதற்கு நம்முடைய மனத்தாழ்மையை தக்கவைத்து கொண்டு, வசனங்களினால் தேவனுடைய ஞானத்தின்படி வழிநடத்தப்படவேண்டும். இரட்சிப்பின் தலைச் சீராவானது நம்முடைய தலை மேட்டிமையானவைகளை சிந்திப்பதற்காக கொடுக்கப்படவில்லை. "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை , நீ சிறுவயது முதல் அறிந்த வனென்றும் உனக்குத் தெரியும்." (11தீமோத்தேயு 3:15) என்பதற்காவே தலைச்சீரா நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் குணலட்சனங்களில் வளர்ச்சியடைந்து, தேவனுடைய குமாரர்களாக மாற தேவன் நமக்கு இந்த தலைச்சீராவை கொடுத் திருக்கிறார். புது சிருஷ்டியின் சிந்தையை காத்து இருதயத்தில் கிறிஸ்து இயேசுவின் சிந்தையை விரிவாக்க நம்மை வழிநடத்துகிறது. (2 கொரிந்தியர் 6:11)

சாத்தானின் நயவஞ்சகத்திற்கு எதிர்த்து போரிடுவதற்காக தேவன் நமக்கு தந்த ஒளியின் ஆயுதத்திற்காக (ரோமர் 13:12) நாம் நன்றி சொல்லுவோம். நம்மை நாம் தாழ்த்தி, சர்வாயுதவர்க்கங்களின் ஒவ்வொரு பகுதிகளின் பலன்களையும் அடைவோமாக. இந்த உலகத்தையும், மாம்சத்தையும் , சாத்தானையும் எதிர்த்து ஜெயிக்க இதுவே வழி. தொடர்ந்து தேவ பாடங்களை படிக்கும் பொழுதும், ஜெபிக்கும் பொழுதும் இரட்சிப்பின் தலைச் சீராவை அணிந்தே இருக்க வேண்டும். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். (1தீமோத்தேயு 6:12)

"தந்தையிடமிருந்து" "மகனுக்கு" அறிவுரை

# விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள்



"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" - 1தீமோத்தேயு 4 :12[1]

**Russ Marten**

1தீமோத்தேயு 6ஆம் அதிகாரத்தின் வசன வாரியாக ஆய்வு -

தீமோத்தேயு என்ற பெயருக்கு "தேவனுடைய மகிமை" என்று பொருள். இந்த பெயரின் அர்த்தத்தில் நமக்கு ஒரு துருப்பு கிடைத்துள்ளது. பவுலின் வார்த்தைகளில் ஆதிகால சபையில் நடந்த சம்பவங்களையும், சூழ்நிலைகளை மட்டும் குறிப்பிடாமல், சுவிசேஷ யுகம் முழுவதிலும் "தேவனுடைய மகிமைக்காக" " தொடர்ந்து நிலைத்து நிற்கும் தலைப்பேறான "தீமோத்தேயு வகுப்பாரை" குறித்தும் பேசியிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இதன் அடிப்படையில் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

பவுல் இந்த நிருபத்தை எழுதும் பொழுது, தீமோத்தேயு வாலிபனாக இருந்தபோதிலும் அவர் சபையின் மூப்பராக இருந்தார். இந்த இளவயதில் அனுபவமற்ற நிலையானது, மூப்பருக்கான பொறுப்புகளோடு இணையும்பொழுது, சாத்தானுக்கேற்ற கண்ணியாக தீமோத்தேயு ஆகிவிடுவார் என்று பவுல் அறிந்திருந்தார். பவுல் தீமோத்தேயுவின் ஆவிக்குரிய காரியங்களில் வைத்திருக்கும் உறுதியான அக்கறையை அவர் தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் நிருபத்தில் "என் மகனே" என்று துவங்கின தினிமித்தமாக வெளிப்படுகிறது. மூப்பர்களுக்கு வேண்டிய தகுதிகள் மற்றும் சபையில் ஊழியம் செய்யும் காரியங்களை குறித்து தெளிவாக எழுதியிருந்தாலும், தொடர்ச்சியான எச்சரிக்கை, ஆலோசனை, ஊக்குவித்தல் மற்றும் அறிவுரைகளை இந்த நிருபத்தில் பின்னி பிணைத்து எழுதியிருக்கிறார்.

**அடிமைகளின் நடத்தை - 1 தீமோத்தேயு 6:1,2**

*"தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு, அடிமைத்தன நுகத்திற் குட்பட்டிருக்கிற வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக்கொள்ளக்கடவர்கள். விசுவாசிகளாகிய எஜமான்களை உடையவர்கள், தங்கள் எஜமான்கள் சகோதரராயிருக்கிறதினாலே அவர்களை அசட்டைபண்ணாமல், நல்வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்கிறபடியால், அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ்செய்யக்கடவர்கள், இந்தப்படியே போதித்துப் புத்திசொல்லு."*

சபையில் உள்ள ஊழியக்காரர்களுக்குரிய வழிநடத்துதலை பற்றிய காரியங்கள் சற்று விந்தையாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்கள், தங்களுடைய எஜமானுக்கேற்ற ஊழியக்காரனாக மாறுவது எப்படி என்ற விவரத்தை இந்த அதிகாரத்தில் பவுல் விவரிக்கிறார்.

டோலஸ் (ஸ்டாரங்க்ஸ் # 1401) என்ற வார்த்தை "அடிமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதாவது நிரந்தரமான அடிமைத்தனத்திற்கு, பொதுவாக இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இன்னும் ஐந்து கிரேக்க வார்த்தைகள் வெவ்வேறு விதமான வேலைக்காரர்களுக்கு பயன்படுத்தப் பட்டிருக்கிறது. வீட்டு வேலைக்காரர்களுக்கு -ஒயிக்கிடெஸ் (ஸ்டாரங்க்ஸ் # 3610) என்றும் மதிப்புக்குரிய வேலைக்காரர்கள், அதாவது கடனுக்கு வேலை செய்வது இல்லாவிட்டால் அவர்களால் அந்த கடனை தீர்க்க முடியாத நிலை - தீராப்புன் (ஸ்டாரங்க்ஸ் # 2324) போன்றவைகள்.

பவுல் இதனை ஏன் குறிப்பிட்டார் ? ஒருவருடைய பணியை அல்லது பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற முடியாததினால், இன்றைக்கு நாம் இப்படிப்பட்ட நித்தியமான அடிமைத்தனத்தை கொஞ்சம் இழிவாக கூட நினைக்கலாம். ஆனால் இதைக் குறித்து பேசுவது பவுலின் நோக்கமாக இருக்கவில்லை. வீட்டு எஜமானனுக்கு விசுவாசமாக வேலை செய்வதால் கிடைக்கும் மகிமையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். நல்ல ஊழியக்காரனுடைய பணியை எஜமான் சரியாகவும், தெளிவாகவும் மதிப்பிடுவார். பவுல் தேவனோடு செய்த உடன்படிக்கையின் மூலம் தொடர்பு கொண்டு "நித்தியமான ஊழியக்காரர்களாக" தங்களையே அர்ப்பணித்த கிறிஸ்தவர்களை குறித்து பேசுகிறார்.

தீமோத்தேயுவின் ஆவிக்குரிய காரியங்களை மனதில் வைத்தவராய் பவுல் மனத்தாழ்மையை குறித்த இந்த எடுத்துக்காட்டை விவரித்தார். நாம் உச்சிதமான பரிசுக்காகவும், பரம அழைப்பில், திவ்விய சுபாவத்தை பெற ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்மேல் அதிகாரம் கொண்டு, நம்மை வழிநடத்துபவர்களாகிய , பெற்றோர், ஆசிரியர்கள், நமக்கு கடன்பட்டவர்களை (பண சம்பந்தப்பட்ட கடனாக இருக்கவேண்டிய அவசிய மில்லை) விட நாம் மேன்மையுள்ளவர்களாக இருக்கிறோம் என்று யோசிப்பது மிக எளிதாக இருக்கலாம், ஆனால் பவுல் இதைக் குறித்து பேசும் பொழுது - "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம் " (கலாத்தியர் 6 :10 ) என்று குறிப்பிடுகிறார்.

1. All Scripture citations are from the new american standard Bible.

வசனம் -2 - ல் பவுல் குறிப்பிடுகிறதைப் போல, சகோதரர்களுக்கு இடையில் இருக்கும் உறவு அதாவது ஒருவருக்கொருவர் கொடுக்கும் மரியாதையும், செய்யும் வேலைகளும் என்றுமே குறைவதில்லை என்கிறார். இதற்கு முன்பாக ஊழியக்காரரின் வகுப்பின் தகுதிகளை பற்றி சொல்லும் பொழுது, மூப்பர்களுக்குரிய மரியாதையை குறித்தும் ,அந்த மூப்பர்கள் தங்களுக்குள் கொடுக்கும் மரியாதையை குறித்தும் பேசினார்.

**போதனையின் முக்கியத்துவம்**
**1 தீமோத்தேயு 6:3-5**

*"ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக் கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான், அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சமசயங்களுமுண்டாகி கெட்டசிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும், இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு."*

இந்த வசனங்களில் தேவனிடத்தில் தப்பறையான நோக்குடன் செயல்படுகிறவர்களை பற்றி பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார். மேலும் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளும் முறைகளையும் குறித்து விவரிக்கிறார். பவுலின் வார்த்தைகள் சற்று கடுமையாகவே இருக்கிறது. தீமோத்தேயுவை எச்சரிக்கும் பொழுது தயவாய் கண்டியாதபடி இப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தின காரணம் என்ன என்ற கேள்வி நமக்குள் எழும்பலாம்.

குணலட்சனங்ளை பொருத்த வரை போதனையின் முக்கியத்துவம் நிராகரிக்கப்பட முடியாது. ஆனால், கிறிஸ்துவின் குணலட்சனங்களை தரித்து கொள்ளுவதில் குறைவுப்படும் சிலர் , மற்றவர்களுடைய போதனைகளில் உள்ள தவறுகளை சுட்டிக் காட்டுவதை பார்க்கலாம். ஆனால் நாம் இப்படிப்பட்ட வித்தியாசமான போதனைகளை குறித்து ஆலோசிப்பதை பற்றி பவுல் நம்மை எச்சரிக்கிறார். நம்முடைய அடிப்படையான நோக்கம் என்ன ? நம்முடைய அறிவுப்பூர்வமான உரையாடல்களை குறித்து மற்றவர்களின் அளவுக்கு மிஞ்சின புகழ்ச்சிக்கு மதி மயங்கி விட விருப்பப்படுகிறோமா ?

சத்தியத்தின்படி ஜீவிக்க ஊக்கமளித்து, உற்சாகப்படுத்துவதைக் காட்டிலும் அந்த சத்தியத்தை குறித்து வாக்குவாதம் செய்பவர்களுக்கு பவுல் ஒரு போதும் இரக்கம் காட்டுவதில்லை. இந்த தவறான மனநிலை ஒருவருடைய சுயலாபங்களை மாத்திரம் பார்க்கிறதாக இருப்பதையும், தேவனிடத்தில் உண்மையாயிருப்பது மற்றும் மனிதர்களுக்கு விசேஷமாக சகோதரர்களுக்கு செய்யும் ஊழியத்தில் கிடைக்கப்படும் இன்பத்தை உணராமல் இருப்பதையும் அவர் கவனித்தார். நிச்சயமாக பவுல் இந்த வார்த்தைகளை , இலக்காக வைத்து தீமோத்தேயுவிடம் பேச வில்லை. மாறாக, இப்படிப்பட்டவைகளை சமாளிக்க போதுமான ஆயத்தங்கள் இருக்கவேண்டும் என்ற உள்நோக்குடன் பவுல் எச்சரித்தார். இவர் ஒரு இளைய மூப்பராக இருந்ததினால், இயற்கையாகவே, இப்படிப்பட்ட நபர்களை தைரியமாக கண்டிக்க சற்று கடினமாகத் தான் இருக்கும். எப்படியிருந்தாலும், மந்தையை இடைவிடாமல் கண்காணிக்கும் மூப்பர்களுக்கு இது ஒரு கவனத்திற்குரிய பொறுப்பாகும்.

**மனநிறைவு - 1 தீமோத்தேயு 6:5-8**

*"போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை,இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை, என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்."*

சில காரியங்களை விட்டு கொடுப்பதினாலும், அதை இழப்பதினாலும், தாங்கள் ஒரு பகுதியை பலி செலுத்துவது தெய்வீகமானது என்று சில கிறிஸ்தவர்கள் பொதுவாக சிந்திப்பது வழக்கம். ஆனால் பவுல் எப்பொழுதும் போல இதற்கு எதிரிடையாகவே பேசுகிறார். அதிகமான ஆதாயம் பெறுவதற்கு - "..... எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்." (பிலிப்பியர் 3:7,8) என்ற சிந்தை இருக்கவேண்டும் என்கின்றார்.

வரக்கூடிய தெய்வீகமான வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் எண்ணத்தோடு இந்த வாழ்க்கையை நாம் நோக்கினால், இந்த ஜீவனுக்குரிய நம்முடைய அடிப்படை தேவைகளை நாம் எளிதில் பூர்த்தி செய்து திருப்தியடையலாம். "ஒரு கிறிஸ்தவனுடைய திருப்தி தெய்வத்தன்மையிலும், உலகப் பிரகாரமான திருப்தி சுயநலம் மற்றும் சுகபோகமான கடினமற்ற வாழ்க்கையின் மேல் உள்ள பற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று சகோ. ரசல் மிகத் தெளிவாக ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார். நாம் ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு திருப்தியடைந்திருக்கிறோம் என்ற கேள்வி நம்மிடத்தில் இப்பொழுது கேட்கப்படுகிறது. தெய்வீகத்தை பின்பற்றுவதற்கு நம்முடைய அர்ப்பணிப்பை நாம் அடையும் திருப்தியை (போதும் என்ற மனம்) அளவு கோலாக வைத்துக் கொள்ளலாம்.

**பண ஆசை - 1 தீமோத்தேயு 6:9,10**

*"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."*

ஒரு கிறிஸ்தவனின் ஐசுவரியத்தை குறித்தோ, வசதி வாய்ப்புகளை குறித்தோ பவுல் இங்கு குற்றம் சாட்டுவதில்லை. மாறாக, அவைகளை தீமையாகவோ, நன்மையாகவோ கருதாமல் ஒரு பொருளைப் போல் பாவிக்கிறார். ஆயிரக்கணக்கான வருடங்களாக தீமை மற்றும் பாவத்தின் பலன்கள் அனுமதிக்கப் பட்டிருந்தாலும், இன்று இவைகள் ஐசுவரியம் மற்றும் ஆஸ்திகளோடு தொடர்புடையதாக இருப்பதை குறித்து பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார். நம்மிடம் உள்ள சொத்துக்கள், நமக்கு பாதுகாப்பையும், சுதந்தரத்தையும் தருகிறதாகவும், சில நேரங்களில் , நம்முடைய விருப்பங்களை நிறைவேற்றக் கூடியதாகவும்,அடுத்து பலி செலுத்தும் விருப்பதை நிறைவேற்றக்கூடியதாகவும் தோன்றலாம். இதை பவுல் சற்று வித்தியாசமாக பார்த்தார். ஐசுவரியமும் சொத்துக்களும் நம்முடைய புதிய சிந்தை சீர் அழிந்து போவதற்கு கன்னியாக இருக்கிறது. பவுல் கூறும் காரியங்களை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். பணம் அல்ல மாறாக "பண ஆசை" நமக்கு கண்ணியாக வைக்கப்படுகிறது. இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் அநேக தனவான்கள் தங்களுடைய ஆஸ்திகளை சேர்ப்பதற்கும், அவைகளைப் விருத்தியாக்குவதற்கும் பதிலாக ஆண்டவரின் பணிக்காக செலவளித்திருக்கிறார்கள்.

**விசுவாசத்தின் போராட்டம் 1 தீமோத்தேயு 6:11,12**

*"நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணியனுமாயிருக்கிறாய். "*

"விட்டு ஓடு" மற்றும் " போராடு" என்ற இந்த இரண்டு சொற்களும் ஒன்றுக்கொன்று எதிராக தோன்றலாம். கிறிஸ்துவ படைவீரன் பின்வாங்கும் நோக்கத்தோடு அல்ல எதிராளியை கட்டுப் படுத்துவதற்கே இப்படி செய்யவேண்டியதாக இருக்கிறது. கிறிஸ்துவ போர் என்பது ஒரே ஒரு யுத்தம் அல்ல. ஆனால், இது தொடர்ச்சியாக நடைபெறும் அநேக போர்களை கொண்ட ஒரு தொகுப்பாயிருக்கிறது. ஆகவே விட்டோடுவதும், போராடுவதும் கிறிஸ்துவ போர் திட்டத்தில் உள்ளவைகள் என்று பவுல் தீமோத்தேயுவிடம் சொன்னார். எந்த சூழ்நிலைகளிலும், நீதியோடும் தெய்வீகத் தன்மையோடும் என்ன செய்ய வேண்டும் என்பதை புதிய சிந்தையானது கற்றறிந்திருக்க வேண்டும். அடிக்கடி நம்மை எதிர்மாறான காரியங்களை சிந்திக்க வைப்பவைகளை நாம் தவிர்ப்பது உத்தமம். மற்ற சூழ்நிலையில், போராட்டங்களை தவிர்ப்பது முடியாத காரியம். பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனுடைய உண்மையான குணலட்சனங்களையும், நீதியின் கொள்கைகளும் பாதுகாக்க வேண்டும். இதன் மூலம் உண்டாகும் போராட்டத்தை தவிர்க்க மாம்சமானது சில சமயங்களில் விரும்பினாலும், அதற்கு இடம் கொடாமல் போராடி தெய்வீக குணநலன்களை பாதுகாப்பது அவசியமாகும்.

**கற்பனையை கைக்கொள் 1 தீமோத்தேயு 6 : 13 -16**

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு, எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்திதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்திதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன். அந்த பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர், அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். "*

பவுல் முடிவுரையை நெருங்கி, இந்த நிரூபத்தை முடிக்கும் நிலையை எட்டினார். அப்போது பவுல் - "கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்" என்றார். பவுல் தீமோத்தேயுவிடம் "எந்த கற்பனையை " கடைபிடிக்கச் சொன்னார் ?

இந்த கேள்விக்கான சரியான பதிலை சகோ. ரசல் கொடுத்ததுமன்றி இந்த நிரூபத்தின் புனராய்வையும் செய்தார். சுருக்கமாக, ஆதிகால சபையிலிருந்து இந்த யுகம் முழுவதும் தொடர்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கான எதிர்ப்புகளை முறியடித்து, அவைகள் பறைசாற்றப்பட்டும் வருகிறது. துவக்க நிலையில், பவுல் சபையின் செய்திகளில் ( மாற்று உபதேசங்களின் விளைவாக ) அந்நிய மதங்கள் மற்றும் தத்துவங்களை பற்றிய காரியங்களின் பாதிப்பை காண முடிந்தது. இதினிமித்தம் சபை அங்கத்தினர்களுக்கும், சுவிசேஷத்திற்கும் வரும் பயங்கரமான ஆபத்தை குறித்தும் அவர் துல்லியமாக அறிந்திருந்தார். (Reprints, p. 1127 )

பவுல் தீமோத்தேயுவிடம் ஒப்புவித்த இந்த பொறுப்புகளில், அவர் சொன்ன வார்த்தைகளில் தேவனையும், குமாரனையும் மகிமைப்படுத்தி துதி செலுத்தினதை நாம் காணலாம். நாம் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது எவ்வளவு நேரம் தேவனை புகழ்வதற்கு காலத்தை செலவளிக்கிறோம் என்று சற்று சிந்தித்து பாருங்கள். நிச்சயமாக இன்னும் அநேக வாசகர்கள் இதை வாசிப்பார்கள் என்று அறிந்து அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு எடுத்துகாட்டை நமக்கு இங்கு தருகிறார்.

பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களின் மூலம், அனைத்து சகோதரர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை ஊக்குவித்து பலப்படுத்தினார். ஐசுவரியங்களின் குவியல், நம்முடைய எதிர்காலத்தை குறித்து சிலவற்றை

நிர்ணயிக்கலாம், ஆனால் தேவன் பேரில் உள்ள விசுவாசமானது நம்முடைய எல்லா தேவைகளும் பூர்த்தி செய்யும் என்ற உத்திரவாதத்தை தருகிறது. மேலும், அளவற்ற ஆஸ்திகள் செய்ய முடியாத காரியமாகிய நம்முடைய நிர்ணயிக்கப்படாத எதிர்காலம் நேர்த்தியாக அடித்தளமிட்டு கட்டப்படும்.

**ஐசுவரியவான்களின் பொறுப்புகள்**

**1 தீமோத்தேயு** 6:17-19

*"இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரணகுணமுள்ளவர் களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு."*

தன் வேலைக்காகவோ அல்லது தீமோத்தேயுவின் வேலைகளுக்காகவும் கட்டாயமாக ஆஸ்திகளை செலவளிக்காமல் இருந்தாலும், அக்காலத்தில் உள்ளவர்களின் நன்மையானவைகளுக்கு சொத்துக்களை பயன்படுத்த கட்டளை கொடுக்கும்படி பவுல் தீமோத்தேயுவிடம் சொன்னார். இன்றைக்கு இருக்கும் நவீன ஊழியர்கள் இந்த அறிவுரையை கடைபிடித்தால் நலமாயிருக்கும். சந்தேகமே இல்லை, பவுல் - "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினி மித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும் சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும்,பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மாற்கு 10 :29,30) என்ற இந்த வார்த்தைகளை நினைவுக் கூர்ந்திருக்கவேண்டும். மனுக்குலத்தில் உள்ள ஏற்றதாழ்வுகள் முன் இருந்ததை விட அதிகரித்து கொண்டிருக்கும் இந்த நிலையில் சுவிசேஷ யுகத்தில் உள்ள "தீமோத்தேயு வகுப்பாருக்கு" இந்த வார்த்தைகள் எவ்வளவு பொருந்துகிறது பாருங்கள்.

பவுலின் நாட்களிலும் சத்தியத்தின் தூய்மையை கறைப்படுத்துவதற்கு அநேக காரியங்கள் இருந்தது. பவுல் தன்னுடைய முடிவுரையில், விசேஷமாக கிரேக்க தத்துவ ஞானிகளையும் மற்றும் "மேற்படிப்புகளை " கொண்ட ஸ்தாபனங்களை குறித்தும் எச்சரித்தார்.

**தவறான அறிவு (அ) புரிந்துகொள்ளுதல்**

**1 தீமோத்தேயு** 6:20,21

*"ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள். கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக. ஆமென். "*

பவுலின் நாட்களில் "விஞ்ஞானத்தையும்", இயற்கையின் சட்டங்களையும்" கிரேக்கர்கள் தெய்வீகமாக எண்ணினார்கள். (1கொரிந்தியர் 1:22) சுவிசேஷ யுக மத்தியில் சத்தியத்தின் வெளிச்சத்தை இதனால் வந்த விளைவுகள் சற்று மங்கச் செய்தது. இன்றைக்கு இந்த உலகம் விஞ்ஞான செய்திகள், (உண்மையில் " இன்றைய விஞ்ஞானம் அநேக நூற்றாண்டுகளாக பல மாற்றங்களை கண்டிருக்கிறது.) கற்பனையான புராணக் கதைகளை மற்றும் மதத்தின் அளவு கோலின் படி அடையாளம் காட்டப்படுகிறது. ஆனால் விஞ்ஞானத்தின் உண்மைகள் வேத வசனங்களுக்கு இசைவாகவே இருக்கிறது. இங்கு தீமோத்தேயுவையும், கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு இதை முக்கிமான ஒரு குறிப்புகளாக பவுலால் கடிந்துரைக்கப்பட்டது. விஞ்ஞானத்தின் சில காரியங்கள் வேத வசனங்களுக்கு முறண்பாடாக தோன்றுவதை குறித்து, நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு "இன்றைய அறிவியல் சிந்தனை " அடிப்படையில் அநேக உதாரணங்களை விஞ்ஞான உலகம் முன் நிறுத்தியது. பின்னாளில் இவைகளுக்கு முரண்பட்ட கருத்துக்கள் வெளிப்பட்ட பொழுது இந்த அறிவியல் பிரிவு காணாமல் போனது. ஒரு மருத்துவரின் அகாரதியிலிருந்து பிடாஜிஸ்டான் மற்றும் ஈதர் ஆகிய இரண்டும் மறைந்து போயின. இதை தற்கால மரபணு பரிசோதனைகள் உலகில் உள்ள அமைப்பு பெண்களுக்குமான முதாதையர் 6000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும் என்றே தெரிவிக்கிறது . மாறாக அவர்கள் சொல்கிறபடி மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக என்பது அல்ல. சத்தியமானது கடந்த காலத்திலும், இனிமேல் வரக்கூடிய காலத்திலும் மேலும் எப்பொழுதும் மனிதனுடைய கூற்றுகளை பொய்யாக்கி உண்மையை வெளிப்படுத்துகிறது.

ஆனால் இந்த யுகத்தின் இறுதியில் வாழும் கிறிஸ்தவர்கள் விஞ்ஞான ரீதியில் மிக விழிப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். "தவறாக அழைக்கப்படும் அறிவு என்ன?" என்பதையும் வேதாகமம் சத்தியங்களை இறுக பற்றியிருப்போர் மேல் இவைகள் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் குறித்து பவுல் மிக தெளிவாக எச்சரிக்கிறார்.

எத்தனை வருடங்களாக தீமோத்தேயு வகுப்பாரை சேர்ந்த தனி நபர்கள் கிறிஸ்துவ பாதையில் நடந்திருந்தாலும், கிறிஸ்துவின் சாயலை தரித்துகொள்ள, இன்னும் பல நெறிமுறைகள் தேவைப்படுகிறது. பவுல் எப்படிப்பட்ட வளர்ச்சிகளை எதிர்பார்த்து தீமோத்தேயுவுக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ, அதே வளர்ச்சியை இந்த நிரூபத்தை வாசிக்கும் ஒவ்வொரு வாசகர்களும் அடைய தேவன் தாமே கிருபை செயவாராக.

# இடைவிடாமல் தொடர்ந்து செய்யப்படும் ஜெபமும் வேண்டுதலும்

எபேசியர் 6 :11-17 வசனங்களில் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களாகிய - சத்தியம் என்னும் கட்சை, நீதி என்னும் மார்க்கவசம், சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிக்கும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், இரட்சிப்பின் தலைச்சீரா மற்றும் ஆவியின் பட்டயத்தை பற்றி பவுல் விவரிக்கிறார். இதைத் தொடர்ந்து அடுத்த வசனத்தில் ஜெபத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகிறர். "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்".

ஜெபத்தை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசும் பொழுது கிறிஸ்துவ சர்வாயுதத்தில் ஏழாவது பகுதியாக இருக்குமா என்ற கேள்வி எழும்புகிறது. கிறிஸ்தவர்கள் ஜெப வாழ்க்கையை எப்படி நடத்த வேண்டும் என்று சபைக்கு தலையாகிய இயேசு தன்னுடைய ஜெப வாழ்க்கையை நமக்கு ஒரு மாதிரியாக விட்டுச் சென்றிருக்கிறார். இயேசு தன்னுடைய உலக வாழ்க்கையில் பிதாவின் சித்தம் செய்வதற்கு ஜெபத்தின் மூலம் பரலோக தந்தையின் வழிநடத்துதலையும், பலத்தையும் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தார். விடியும் முன், தேவனிடத்தில் ஜெபிக்க இயேசு எழுந்தார். (மாற்கு 1:35) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை தேர்வு செய்யும் முன் முழு இரவும் தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார். (லூக்கா 6 :12,13) தேவனை மகிமைப்படுத்தும்படி பூமிக்குரிய பணியில், கடைசி நேரத்திலும் கூட தேவனுடைய ஆலோசனைக்காக ஜெபித்தார். அதுமட்டும் அல்லாமல் சுவிசேஷ யுகம் முழுவதிலும் தன்னுடைய சீஷர்களையும், அவர்களுடைய உபதேசத்தையும் கேட்பவர்களுக்காகவும் வேண்டுதல் செய்தார். (யோவான் 17 :11,15,20,21)

ஒரு கிறிஸ்துவ போர் வீரனாக இருக்கும் நமக்கு, இயேசுவைப் போலவே ஜெபத்தின் மூலமாக தேவனுடைய வழிநடத்துதலும், பலமும் நமக்கு மிக அவசியம். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தேவையான பொது நெறிமுறைகளும், வேத வசனங்களிலும், சோதனைகளிலும், கொடுக்கப்படுகிறது.மேலும், கிறிஸ்துவ பயணத்தின்போது எடுக்க வேண்டிய சில முடிவுகளில், தேவனுடைய விசேஷ உதவியும், ஆலோசனைகளும் தேவைப்படுகிறது. இவை அனைத்தும் ஜெபத்தின் மூலமே பெற்றுக் கொள்ள முடியும். மேலும் தேவனுக்கு பிரியமானபடி, யுத்தத்தில் போராடி, நம்முடைய எதிராளியை மேற்கொள்ளவும் ஜெபத்தின் மூலமே தெய்வீக உதவியையும், ஆலோசனையையும் பெற முடியும். இந்த ஜெபத்தின் மூலம் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியோடு இரண்டு வழிகளில் தொடர்புகொள்ளலாம். அவருடைய கட்டளைகளையும், தேற்றுதலையும் பெற்றுகொண்டு, கூடுதலாக யுத்தத்தில் ஜெயிப்பதற்கான உதவிகளையும் பெறலாம்.

நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில், பிரச்சனைகளில் அகப்பட்டு, காயமடைந்து, வியாதிப்பட்டு, தேவனுக்கு பணி செய்வதில் தடை ஏற்பட்டால், இவைகள் குணப்பட பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். (யாக்கோபு 5:13, 16) "மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள்" நீங்கும்படி பவுல் ஜெபித்தார். (11கொரிந்தியர் 12 :8,9) ஆனால் இந்த சூழ்நிலையில் அந்த முள் நீக்கப்படாமலிருந்தாலும் அந்த பலவீனத்தை மேற்கொள்ள தேவன் பவுலுக்கு அவருடைய கிருபையையும், பலத்தையும் அதிகதிகமாக கொடுத்தார். அதேபோல், உண்மையான ஜெபத்தின் மூலம் , நம்முடைய பலவீனத்திலும், ஆவிக்குரிய சுகவீணத்திலும் தேவன் அவருடைய பூரண பலத்தை கொடுத்து நம்மை குணப்படுத்துகிறார். (யாக்கோபு 5:14)

இந்த யுத்தத்தில் ஜெயிப்பதற்கு நமக்காக மட்டும் அல்லாமல், நம்முடைய சக போர்வீரர்களும் வெற்றி பெற ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். பிலிப்பு பட்டணத்தில் உள்ள சகோதரர்கள் அன்பில் வேரூன்ற பவுல் ஜெபித்தார். (பிலிப்பியர் 1:19) ஆண்டவருக்காக ஒரு வாழ்க்கை வாழவும், தேவனுடைய சித்தம் செய்யும்படியாக ஞானத்தை பெறுவதற்காக பவுல் கொலோசெயர் பட்டணத்து சகோதரர்களுக்காக ஜெபித்தார். (கொலோசேயர் 1:9,10) நாம் பவுல் வைத்துச் சென்ற மாதிரியை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்திருந்தாலும், "இடைவிடாத ஜெபத்தில்" தரித்திருப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறோம். (ரோமர் 12:12, 1தெசலோனிகேயர் 5 :17) நம்முடைய இரட்சிப்பின் அதிபதியின் ஆலோசனையையும், வழிநடத்துதலும் நமக்கு எப்பொழுதும் தேவைப்படுகிறதினால், நாம் அவருடைய அருகாமையில் நிலைத்திருக்க இடைவிடாத ஜெபத்தின் மூலம் தரித்திருக்க வேண்டும். வெற்றி சிறக்கும் கிறிஸ்துவின் படைவீரனாயிருக்க, நாம் "...ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் ...." (பிலிப்பியர் 4:6) தெரியப்படுத்தவேண்டும். நம்முடைய ஆண்டவரின் ஜெபங்களை கேட்ட பரம பிதா, நம்முடைய ஜெபங்களுக்கும் செவி சாய்த்து, நாம் வெற்றி பெற நம்மையும் வழிநடத்துவாராக.

# தீர்க்கதரிசனத்தில் இன்று ...

# மாறிக்கொண்டிருக்கும் உலகம்

"**தே**வன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். " - சங்கீதம் 46 **:** 1 - 3

**த**ற்போது உலக அளவில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியை குறித்து பெடரல் ரிசர்வ் பாங்கின் அதிகாரி ரிட்ச்மண்டு கூறுகையில் "இது அர்மகதோன் யுத்தம் அல்ல, ஆனாலும், இது மிக மிக கடுமையான காலமாக இருக்கும்". இன்றைய நெருக்கடியின் ஆழத்தையும், கடுமையையும் குறித்து சிலர் அப்போதே தங்கள் கருத்துக்களை கூறிவந்திருக்கின்றனர். இந்த பாதிப்பின் காற்று முதலாவது அமெரிக்க பொருளாதாரத்தையும், தொழில் நுட்ப மையங்களையும் தாக்கி தற்பொழுது உலகெங்கும் பரவி வருகின்றது. இவ்வளவு தூரம் விஸ்வரூபம் எடுத்திருக்கும் தீமையை தேவன் தடை செய்யாமல் தங்களுடைய தவறான முடிவுகளை உணர்ந்துகொள்வதற்காகவே அனுமதித்திருக்கிறார். இந்த தீமை முழு உச்சக்கட்டத்தை எட்டுவதற்கும் அனுமதித்திருக்கிறார். உண்மையில், இதன் முழு விளைவுகள் அல்லது பாதிப்புகள் நடைபெறாமல் இருக்க அவருடைய தலையீடு தேவைப்படுகின்றது.

அதிகமான கடன்கள் வளர்ந்ததின் காரணத்தால் தான் கடந்த நூற்றாண்டில் இந்த பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. கூட்டமைப்பு செயலகம் இதை குறித்து சில அறிக்கைகள் தந்த பொழுது சமீப காலத்தில் தனிப்பட்ட கடன் விகிதம் ( அரசு , வெளிநாட்டினர், கல்வி நிலையங்கள் தவிர ) உள்நாட்டு கடன் 1998 - ல் 125. 4% ஆக இருந்தது. இது இப்பொழுது 2008 கணிப்பின் படி 174.3% ஆக உயர்ந்துள்ளது. இந்த கடன் விகிதம் கடந்த 28 ஆண்டுகளில் 1998 - லிருந்து 2008 ல் உள்ள பத்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இது அதிகரிப்பது மாத்திரம் அல்லாமல் இதை கட்டுப்படுத்த முடியாமலும், தீர்வு காணமுடியாமலும் இருக்கிறது. இப்பொழுது தனிப்பட்ட நபர் அல்லது ஒரு நிர்வாகம் கடன் வாங்குவதில் சில கட்டுப்பாடுகள் விதித்திருப்பதால் தனிப்பட்ட நபர் அல்லது தொழில் சார்ந்த கடன் வாங்குபவர்களுக்கும் சிக்கல்கள் ஏற்பட்டு, அதிக கடன் தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்தும் நிலை உள்ளது. அதே சமயத்தில் இன்டர்நேஷ்னல் மானிட்டரி பண்டு (International Monetary Fund) என்ற அமைப்பு தற்போதைய கடன் விகிதம் (வியாபாரம் மற்றும் வாங்குபவர் ) $ 1. 4 ட்ரிலியனாக உள்ளது. (Global Financial Stability Report, IMF,October 2008)

## நீண்ட கால விளைவுகள்

அதிகாரம் மற்றும் அதிக வல்லமை கொண்ட அரசாங்கங்கள் இத்தகைய சீரழிவை தடை செய்யவும், நிறுத்தவும் முயற்சி செய்தன. இது தற்காலிக அமைதியை கொஞ்ச காலம் கொண்டு வந்தாலும் இத்தகைய பொருளாதார நெருக்கடியை மாற்ற முடியாது. நாம் இப்பொழுது பொருளாதார, சமுதாய, அரசியல் எதிர்காலத்தை நோக்கி திசையில்லா கடலில் மிதக்கும் கப்பலில் சென்றுகொண்டிருக்கின்றோம். பிரான்ஸ் அமைப்பு (The Paris-based Organisation for Economic Cooperation and Development) என்ற அமைப்பு பொருளாதார கூட்டமைப்பாக கருத்துக்களை பதிவு செய்திருக்கின்றனர். அதில் இந்த பொருளாதார கட்டுப்பாடு 2009 ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என்று கூறியிருக்கிறது. இத்தகைய பொருளாதார சீரழிவின் வேகம் உலகத் தலைவர்களை கடந்து கால இழப்புகளிலிருந்து மீழவும் எதிர்காலத்தில் இதுமாதிரியான நிகழ்வுகள் ஏற்படாமல் இருப்பதற்கான வழி முறைகளை ஆராயவும் செய்திருக்கிறது. உலக மையமான ஒத்துழைப்பு மற்றும் கூட்டமைப்பு இத்தகைய சூழல் எதிர்காலத்தில் நிகழாதபடி தடுக்கும் என்று எல்லோரும் நம்புகின்றனர். இயேசு கிறிஸ்து கூறின இந்த காரியத்தை உலகம் புரிந்து கொள்ள வேண்டும். (மாற்கு 2 **:**21) இதே தருணத்தில் இவ்வுலகம் தற்பொழுது இருக்கும் சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு சில காரியங்களை வரம்பிற்கு மீறி செய்யும். இந்த ஒரு சூழ்நிலை உலகம் தன்னை தானே அழித்து கொள்ளும் அளவிற்கு கொண்டு செல்லும். இந்த ஒரு நிலை எவ்வளவு நாள் தொடரும் என்பதோ, ஒரு கட்டுபாட்டிற்குள் வருவது போன்ற

காரியங்கள் நாம் அறியாதிருக்கின்றோம். ஒருவேளை அவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் வந்தாலும் அதை தொடர்ந்து வேறெதாவது அதிர்ச்சி தரும் நிலை மறுபடியும் உருவாகும் என்று அச்சுருத்தலும் நிலவுகின்றது. ( 1தெசலோனிக்கேயர் 5:3)

## நம்முடைய நோக்கம் மற்றும் வாய்ப்பு

ஒரு மனிதன் இனிமையாக பாடுகின்ற அழகான பறவையை வைத்திருந்தான். அந்த மனிதன் இவ்வளவு இனிமையாக பாடுகின்ற பறவையை வீட்டிற்குள்ளேயே பூட்டி வைத்திருக்க மனதில்லாமல், கோடை காலத்தில் சூரிய ஒளியுடைய இயற்கையான சூழலில் அந்த பறவையை தன் வீட்டின் பின் புறத்தில் உள்ள ஒரு மரத்தில் கூண்டில் அடைத்து வைத்தான். இந்த பறவை பாடும் பொழுது குருவிகள் அந்த பாடலில் ஈர்ப்புகொண்டு, அந்த கூண்டின் அருகே வரத் துவங்கின. முதலில் இந்த இனிமையான பறவை பயந்தாலும், நாட்கள் செல்லச் செல்ல மற்ற பறவைகளின் அருகாமையை விரும்பியது. நாட்கள் சென்றது , இந்த இனிமையாக பாடுகிறன்ற பறவை குரலில் இனிமையை இழக்க ஆரம்பித்து, குருவிகளை போல கத்த துவங்கியது. அந்தகோடை காலத்தில் தவறான சூழ்நிலையில் இருந்த காரணத்தால் அந்த அழகான பறவை தன் குரலின் இனிமையான பாடலை இழந்தது.

தேவனுடைய ஜனங்களும் இது போன்று மாற்று சூழலில் தவறான நடக்கையில் உள்ள இந்த உலகத்தோடு பங்குகொண்டால் இதே போன்ற ஒரு அனுபவத்திற்குள்ளாக வரநேரிடும். இந்த உலகத்தை விட்டு நாம் சற்று தனியாக வருகையில் அநேக கேலி பேச்சுகளையும், பரியாசங்களையும் கடந்து வர முற்படலாம். இது எல்லாம் நெருக்கமான பாதையின் சிட்சைகள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். ஒரு வேளை வேறுபட்டு சூழ்நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டு தேவனுடைய சிட்சை கிடையாதிருந்தால் ஒரு கஷ்டமான ஒரு நிலைக்கு அதிலிருந்து மீண்டு வர முடியாத சூழ்நிலைக்கு தள்ள நேரிடும். தங்களால் திரும்ப செலுத்த முடியாத கடன் பட்டவர்களுக்கு இயேசு பின் வருமாறு கூறுகிறார் - "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." ( மத்தேயு 6 : 20,21)

நாம் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் பற்றுகிறவர்களாய் நம் இருதயத்தை தேவன் பேரில் திருப்புபவர்களாயும் பரலோக பிதாவின் கோட்பாடுகளின் பிரதிநிதிகளாக சுற்றியிருக்கும் சூழ்நிலைகள் நம்மை பாதித்து, விழுந்துவிடாதபடி நம்மை பாதுகாத்துகொள்ள வேண்டும்.

இந்த புதிய வருடம் நம்மை புதுப்பித்துகொள்வதற்கான நேரம். தேவனுடைய சத்தியம் நம் வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தை கொடுக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்."நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்."(கொலோசேயர் 3:1) வேதம் தேவனுடைய குணலட்சணங்களை அவருடைய திட்டத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று கூறுகின்றது. (1தீமோத்தேயு 4:10) தேவன் அனுமதித்திருக்கும் தற்போதயை உபத்திரவம் நிலையான மாற்றத்தை கொண்டு வரும் இன்றைய நெருக்கடி பழைய அமைப்புகள் முழுவதும் மாற்றப்பட்டு புதிய அமைப்புகள் இடம் பெறுவதற்கு வழி வகுக்கின்றது. இவ்வுலகம் தம் அமைப்புகளை தானே அழித்துக்கொண்டு வருகிறது. இறுதியாக தேவன் அதற்கு ஒரு முடிவை கொண்டு வருவார். பின்பு தேவனுடைய பிள்ளைகள் எதிர்பார்த்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அவருடைய மிகப் பெரிய இராஜ்யத்தை இவ்வுலகத்திலே ஸ்தாபிப்பார்."திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - "நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள் , அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4:2)

இன்றைய உபத்திரவங்கள் நாளைய ஆசீர்வாங்களின் துவக்கங்கள் என்று எண்ணிக் களிக்கூறுவோமாக.